சுதந்திரத் திருநாள் பொன்விழா

தீண்டாமை ஒழிப்பு மாநாடு - சிறப்பிதழ்






# தமிழரசு

செப்டம்பர் 1-30, 1997 ரூ.6/-







டாக்டர் இராதாகிருஷ்ணன்

தோற்றம் 5.9.1888 மறைவு 16.4.1975



வ.உ.சிதம்பரனார்

தோற்றம் 5.9.1872 மறைவு 18.11.1936

# இந்த இதழில்...


★ சாதியற்ற சமுதாயம் உருவாக
நல்லிணக்கக் குழுக்கள் ... 2

★ அண்ணா, அண்ணா... ... 10

★ காங்கிரஸ் தலைவர் பெரியார் ... 14
*- சாமி சிதம்பரனார்*

★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ... 17
மாநாட்டில் முதல்வர் உரை

★ சுதந்திரப் போர் - சில தீரச்செயல்கள் ... 26
*- கவியோகி சுத்தானந்த பாரதியார்*

★ இந்திய விடுதலை நாள்-திரு.வி.க.கனவு ... 29
*- சி.வெங்கடசாமி*

★ மாணவர் பக்கம் ... 34

★ விடுதலைப் போரில் திருப்பங்கள் ... 37
*- எஸ். நடராஜன்*

★ நீலன் சிலையகற்றும் போராட்டம் ... 40
*- டாக்டர் ந.க. மங்களமுருகேசன்*

★ சுதந்திரப் போராட்ட காலத்தில்
மக்கள் தொடர்புச் சாதனங்கள் ... 42

★ இரத்தக் கொதிப்பு ... 45
*- டாக்டர் என்.சுவாமிநாதன்*

★ வள்ளி திருமணம்-சிறுகதை ... 53
*- அறிஞர் அண்ணா*

★ பெரியாரின் மனிதநேயம் ... 62
*- கயல்விழி ஜோசப்குமார்*



**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2028
செப்டம்பர் 1-30, 1997
மலர் : 28 இதழ் : 5 & 6
விலை ரூ.6/-


ஜ.பத்மவாசன்

-தீண்டாமை ஒழிப்பு மாநாடு:

# சாதியற்ற சமுதாயம் உருவாக தமிழகம் முழுவதும் நல்லிணக்கக் குழுக்கள்

**- முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!**

"மற்றவர்கள் எல்லாம் பேசும்போது, அரசியல் கட்சித் தலைவர்களே என்று சுருக்கமாக விளித்தார்கள். ஆனால் நான் மாநாட்டுத் தலைவர் என்பது மாத்திரமல்ல; இந்த மாநாடு நடத்த வேண்டுமென்று விரும்பி உங்களை எல்லாம் அழைத்தவன் என்பதால் ஒவ்வொருவராக விளித்து, அவர்களுக்கெல்லாம் வழங்கவேண்டிய நன்றியினையும் அவற்றோடு இணைத்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இன்று காலையில் நடைபெற்ற மனிதச் சங்கிலி, மாலையில் தியாகச் செம்மல் கக்கன் அவர்களுடைய சிலை திறப்பு விழா, அதற்கிடையே மீனாட்சி அம்மன் கோவிலிலும், தேவாலயத்திலும், மசூதியிலும் நடைபெற்ற சமபந்தி விருந்துகள், அதனைத் தொடர்ந்து இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பெருமைக்குரிய இந்த மாநாடு, இவற்றை எல்லாம் சீருற, சிறப்புற, எழுச்சியுற, எழிலுற அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க - அவ்வாறே செயல்பட்டு முடித்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், செய்தித்துறை அமைச்சகத்துக்கும், அவர்களோடு ஒத்துழைத்த ஏனைய அலுவலாளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சிறப்பாகப் பல்வேறு அலுவல்கள் இருந்த போதிலும், அவரவர்களுடைய கட்சிகளுக்குரிய பல பணிகளில் ஈடுபட வேண்டிய நெருக்கடியான நிலை இருந்தபோதிலும், அவற்றையெல்லாம் விட இது பெரும் பணி, சிறப்பான பணி, செய்து முடிக்கவேண்டிய பணி, தொடர வேண்டிய பணி என்ற தூய உள்ளத்தோடு இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்குச் சிரமம் பாராமல் வந்துள்ள கட்சிகளின் தலைவர்களையும் சமயச் சான்றோர்களையும் நான் மீண்டும் மீண்டும் வரவேற்று நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**கலந்தேன்; கசிந்துருகினேன்!**

இங்கு நடைபெற்றது ஒரு மாநாடு அல்ல; ஒரு கருத்தரங்கம் என்ற கருத்தினை - முன்னால் பேசியவர்கள் எல்லாம் வெளியிட்டார்கள்.

எனக்கேகூட, வந்து அமர்ந்ததிலிருந்து, நான் பேசுவேன் என்று அழைக்கப்படுகிற வரையில் என்ன பேசுவது என்று சிந்தனை செய்வதற்கே நேரமில்லாமலே போயிற்று. காரணம், சில மாநாடுகளில், சில கருத்தரங்குகளில், சில பேச்சரங்கங்களில், பேசுகின்ற நண்பர்கள் அல்லது தலைவர்கள், நம்மைப் போன்றவர்கள் மேடையில் அமர்ந்து சிந்திப்பதற்கு நேரம் தருவார்கள். ஆனால், இங்கே பேசிய தலைவர்கள் யாரும் அந்த நேரத்தை எனக்குத் தரவில்லை. காரணம் அவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் நான் ஒன்றிப் போனேன்; இணைந்தேன்; கலந்தேன்; கசிந்துருகினேன்.

ஐம்பதாண்டு காலமாகிறது, இந்தியத் திருநாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து; நாம் விடுதலை பெற்று ஐம்பதாண்டு காலத்திற்குப் பிறகும் நாம் நம்முடைய சமுதாய மக்கள் மற்றொரு



சுதந்திரத்திற்காகப் போராட வேண்டிய சூழ்நிலை இருக்கிறதே, என்பதை எண்ணிப்பார்க்கும் போதும், அந்தச் சூழ்நிலையை எப்படி செப்பனிட்டுச் செயல்படுத்துவது, எவ்வாறு அவர்களுக்கு அந்த விடுதலையைப் பெற்றுத் தருவது? என்பதை எண்ணும்போதும், ஒரு பொறுப்பில் இருக்கிற என்னைப் போன்றவர்களுக்கு எவ்வளவு கவலையும் வேதனையும் இருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பல திட்டங்கள், பல முறைகள், பல பணிகள், வேண்டுகோளாகவும் அன்புக் கட்டளையாகவும் எனக்கு இங்கே பிறப்பிக்கப்பட்டன. பேராசிரியர் பேசும்போது குறிப்பிட்டதைப் போல தத்துவங்களுக்கும் அவைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை எண்ணிப் பார்க்கும்போதுதான், நடைமுறைப்படுத்த வேண்டிய இடத்தில் இருக்கிற ஒரு அரசு எத்தனை எத்தனைச் சிக்கல்களுக்கு இடையே, பிரச்சினைகளுக்கு இடையே இந்தப் பணியை ஆற்ற வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது அனுபவரீதியாக!

இந்த ஒன்றரையாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் எத்தனையோ நலத்திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி, அது ஏழை, எளிய மக்களுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கு, சாதாரண, சாமானிய மக்களுக்கு, அடக்கப்பட்ட மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, விவசாயிகளுக்குச் சென்றடைய வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் சென்றடைய முடியாமல் ஏற்படுகிற இடர்ப்பாடுகள் எவை என்பதை இங்கே பேசிய தலைவர்கள் சில பேர் சுருக்கமாக, அதே நேரத்தில் மிகுந்த வேதனையோடு குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

நம்முடைய இளையபெருமாள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார். டிசம்பர் 6ஆம் தேதிக்குள் இதைச் செய்து முடிக்காவிட்டால் நான் என்ன ஆவேனோ தெரியாது என்று மிகுந்த உருக்கத்தோடு, உணர்ச்சியோடு குறிப்பிட்டார்கள். அதை நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி, அவர் அதில் உரிமை காட்ட வேண்டும் என்று சொன்னார்கள். இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டது ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டவாரியாக, அதாவது தாலுகா ரீதியாக நல்லிணக்கக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுக்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை - நிர்வாகப் பொறுப்புகளில் மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தால் அவர்களை உள்ளடக்கியதாக அந்தக் குழுக்கள் அமைந்திட வேண்டும். அந்தக் குழுக்கள் அந்தப் பகுதிகளில் அமைதியை உருவாக்கவும், அமைதி கெடக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தடுக்கக்கூடியதாக அமைந்திட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை அவர்கள் என்னிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். நான் அதைப் பற்றிக் கலந்து பேசிக்கொண்டிருக்கிறேன். இது கலந்துபேசி, காலம் கடந்து அறிவிக்க வேண்டிய ஒன்றல்ல என்பதை நான் நன்றாக அறிவேன். இப்போதே அறிவிக்கிறேன். டிசம்பர் 6ஆம் தேதி வரையில் இளையபெருமாள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குழு இன்னும் ஒரு வார காலத்தில் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படுவதற்கான ஆணை இந்த அரசின் சார்பில் இடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, இங்கே நாம் சமுதாய ரீதியாக உள்ள மாற்றங்கள், ஏற்பட வேண்டிய நிலைகள் இவைகளை எல்லாம் பேசிக்கொண்டிருக்கும்போதே வைக்கப்படுகிற கோரிக்கைகள் என்னென்ன என்பதையும், இன்றைக்குச் சில பிரிவு மக்களிடத்தில் அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்திக்கு என்ன காரணம்



என்பதையும் ஆராய்ந்து பார்த்தால், மிக முக்கியமாக இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டில் ஏற்கெனவே 16 சதவிகிதம் என்று இருந்ததை நான் 1969ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு - 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதம் என்று உயர்த்தினேன்.

பிறகு, 89ல் பொறுப்பேற்றபோது 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் என்று இருந்ததை மேலும் ஒரு சதவிகிதம் அதிகமாக்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பழங்குடி மக்களுக்கு 1 சதவிகிதம் என்றும் 19 சதவிகிதம் இரு பிரிவினருக்கும் உயர்த்திய பிறகும்கூட அந்தச் சதவிகிதத்தின்படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புகளில் உரிய இடம் கிடைக்கவில்லை என்கின்ற மன நிறைவற்ற தன்மை அவர்களை இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது.

அதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அதற்கான காரணத்தைத் தயவு செய்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். காலியிடங்கள் நிரப்பப்படவில்லை என்பது தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், படித்தவர்கள், இவர்களிடம் எடுத்துச் சொல்லப்படுகிற வாதம். அதன் காரணமாக கிளர்ச்சிகள், போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள்! நான் அவைகளையெல்லாம் தவறு என்று சொல்ல மாட்டேன். அது எண்ணக் குமுறல். ஜனநாயக நாட்டில் எண்ணக் குமுறல்களுக்கு இடம் தர வேண்டும். அது நம்முடைய அடிகளார் குறிப்பிட்டதைப் போல் - வன்முறைவிளிம்பைத் தொட்டுவிடக்கூடாது. அந்த அளவிலே அந்த எண்ணக் குமுறல்களை மதிக்கவேண்டிய கடமை ஒரு ஜனநாயக அரசுக்கு உண்டு.

காலியிடங்கள் நிரப்பப்படவில்லை; பதினெட்டு அல்லது பத்தொன்பது சதவிகிதம் இடங்கள் இன்றைக்கு நிரப்பப்படவில்லை என்று இருக்கின்ற அந்தக் குறைபாட்டை இந்த அரசு நன்றாக உணர்ந்து இருக்கிறது. அதற்காக நான் இந்த மாநாட்டில் ஒரு அறிவிப்பைச் செய்யவிரும்புகிறேன். அத்துடன் ஒரு விளக்கத்தையும் சேர்த்து தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரசு வேலைவாய்ப்புகளில் ஆதிதிராவிடர்களுக்குப் பதினெட்டுச் சதவிகிதமும், பழங்குடியினருக்கு ஒரு சதவிகிதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களை நிரப்ப - குறிப்பிட்ட கல்வித் தகுதி மற்றும் பயிற்சித் தகுதி உடையவர்கள் இல்லாத காரணத்தால் பல்வேறு அரசுத் துறைகளில் ஏராளமான பணியிடங்கள் நிரப்பப்படாமல், கடந்த காலங்களில் அவை காலியாகவே விடப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களுக்குத் தேவையான கல்வித் தகுதியையும், பயிற்சித் தகுதியையும் வழங்குவதிலும் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கென உள்ள ஒதுக்கீட்டை முழுமையாக நிரப்பிடவேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையுடைய இந்த அரசு நிரப்பப்படாமல் .உள்ள காலியிடங்களை நிரப்ப சிறப்புப் பணி அமர்த்தும் தீவிர முயற்சியை (ஸ்பெஷல் ரெக்ரூட்மெண்ட ட்ரைவ்) மேற்கொண்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பக் கல்வி மற்றும் பயிற்சி, தகுதி பெற்றோர் தேவையான எண்ணிக்கை இல்லை என்பதை அறிந்து, விதிகளைத் தளர்வு செய்து, இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பி.எட். பயிற்சி பெற்றவர்களையும் நியமனம் செய்துகொள்ள இப்பொழுது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தேவையான அளவுக்கு இடைநிலை பயிற்சிபெற்ற ஆசிரியர்களை உருவாக்கிட 13 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் அண்மையிலே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இப்படி ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்களை முழுமையாக நிரப்பிட, கழக அரசு அனைத்து முயற்சிகளையும்



மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் இதைக் கண்காணிக்க குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஒன்று எழுந்துள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்பதில் திறந்த, வெளிப்படையான மனத்தோடு செயல்பட்டு வருகின்ற கழக அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்கள் முறையாக நிரப்பப்படுவதைக் கண்காணிப்பதற்கும், கடந்த காலங்களில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள பணியிடங்களை ஒரு கால வரையறைக்குள் நிரப்புவதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்கும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சரைக் கன்வீனராக, அமைப்பாளராகக் கொண்டு குழு ஒன்று உருவாக்கப்படும். அந்தக் குழுவில் சட்டமன்றப் பேரவையிலேயுள்ள கட்சிகளின் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தோர் இடம் பெறுவார்கள். அந்த உறுப்பினர்கள் யார்யார் என்று பிறகு அறிவிக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றொன்று, ஒரு கோரிக்கை என்ன? ஒரு அறிவுரையாக அருமை நண்பர் சங்கரய்யா சொன்னார். இங்கே சொன்னார்கள். தீண்டாமைப் பழக்கத்தைக் கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி மாநாட்டின் தொடக்கத்தில் என்னால் படிக்கப்பட்டு - ஒவ்வொரு சொற்றொடராக, நீங்களும் திரும்பச் சொல்லி நாம் அனைவரும் இந்த மாநாட்டிலே அந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இது மாணவர்களுடைய மனதிலும் பதியவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இன்று காலையிலே நான் கண்ட காட்சியிலிருந்து ஒரு நம்பிக்கை எனக்கேற்படுகிறது. காலையிலே நடைபெற்ற மனிதச் சங்கிலியில் பெரும்பாலான மாணவ மாணவியர்சற்றொப்பபதின்மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் நின்றார்கள். கைகோத்து நின்றார்கள். கைகோத்து நிற்க முடியாமல் நெருங்கி நின்றார்கள். தோளோடு தோள் சேர்ந்து நின்றார்கள். காரணம் இடமில்லாத காரணத்தால் அவர்கள் அனைவரும் கைகோத்து நின்றிருப்பார்களேயானால் - இரண்டு அடுக்காக பல இடங்களில் நின்றார்கள். அப்படி இரண்டு அடுக்காக நில்லாமல் ஒரே வரிசையில் நின்றிருப்பார்களேயானால் மனிதச் சங்கிலியின் நீளம் பதின்மூன்றுகிலோமீட்டர் தூரத்தோடு முடியாமல் 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்த மனிதச் சங்கிலி என்று நாம் கணக்கிட்டிருக்க முடியும். அவ்வளவு எழுச்சி! பெரியவர்கள், பெண்டிர், மாணவ மாணவியர், தொழிலாளர்கள், அலுவலர்கள் அத்தனைப் பேரும் இன்றைக்கு இருந்ததை என்னால் காணமுடிந்தது. எனவே நான் நிச்சயமாக இந்த உறுதிமொழி மாணவர்கள் மனதில் பதியும். ஓரளவு பதிந்திருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்குக் கைகோத்து நின்றார்கள். மனிதச் சங்கிலியாக நின்றார்கள்.

மாநாடு மாத்திரமல்ல; ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் மனித சங்கிலியும் நடைபெற வேண்டும். இந்த மாநாடும் நடைபெற வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். எனவே இங்கு எடுத்து வைக்கப்பட்ட தலைவர்களின் இந்தக் கோரிக்கை தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதையும் நான் இங்கே உங்கள் முன்னால் அறிவிக்கின்றேன்.

இந்த உறுதிமொழியை - பள்ளிக்கூடங்களில் கல்லூரிகளில்கூட, வாரம் ஒரு முறையாவது ஆசிரியர்கள் ஒவ்வொரு வகுப்பறையிலும் படிக்க மாணவர்கள் திரும்பச் சொல்லி இந்த உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான தாக்கீதுகளை நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பி வைப்பார் என்பதையும் இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாதி ஒழிவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இங்கே



சொன்னார்கள். சங்கரய்யா மேலவளவு பற்றிக் குறிப்பிட்டார். அதைப்போலப் பல இடங்களில் தேனீர்க் கடையிலே இரண்டு கிளாஸ்கள் வைக்கப்படுவதும், சில இடங்களில் ஒரு கிளாஸ், இன்னொன்று கொட்டங்கச்சி என்று இருப்பதுமான நிலைமை பழைய காலத்திலே ஆரம்பமாகி இன்றைக்கு எல்லா இடங்களில் இல்லாவிட்டாலும் ஒருசில இடங்களில் இருக்கத்தான் செய்கின்றன.

நான், டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய புத்தகம் ஒன்றைப் படித்தேன். அந்தப் புத்தகத்தினுடைய தலைப்பு 'அம்பேத்கருடைய எழுத்தும் பேச்சும்' என்பதாகும். ஆங்கிலப் புத்தகம் அது. அந்தப் புத்தகத்தின் ஐந்தாம் தொகுப்பில் 118ஆம் பக்கத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் ஒரு இணைப்பை வைத்து, அந்தப் புத்தகத்தைத் தொடர்கிறார்.

அந்த இணைப்பு என்னவென்றால் - "சுவாமி ஆனந்த்தீர்த். அகில இந்திய அரிஜன சேவா சங்கத்தின் பிராந்திய அதிகாரி. அவர் தமிழ்நாட்டில் தன்னுடைய அனுபவம் குறித்து எழுதிய ஒரு டைரி அது. அது 9.3.1952ஆம் ஆண்டு எழுதிய 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. அப்படி வெளியான கட்டுரையை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தன்னுடைய 'எழுத்தும் பேச்சும்' என்ற புத்தகத்திலே இணைத்து வெளியிட்டிருக்கிறார்.

அதில் அவர் என்ன சொல்கிறார் - 52ஆம் ஆண்டு அகில இந்திய சேவா சங்கத்தின் பிராந்திய அதிகாரி சுவாமி ஆனந்த்தீர்த், அவர் மதுரை மாவட்டம் வருகிறார். இதே மேலவளவுக்குச் செல்கிறார். அப்போது இங்கு சிலையாகத் திறந்து வைக்கப்பட்ட தியாகச் செம்மல் கக்கன் அவர்கள் அப்போது பாராளுமன்ற உறுப்பினர். 52ஆம் ஆண்டு ஆனந்த் தீர்த் அந்தப் பகுதிக்கு வந்தபோது மேலவளவில் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஆதிதிராவிட தோழர்களுக்குக் கொட்டாங் கச்சியிலேதான் தேனீரோ, காப்பியோ கடையிலே விற்கப்பட்டது.

இதைப் பார்த்த சுவாமி ஆனந்த்தீர்த் அந்தக் கடைக்காரரர் மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால் அன்றைக்கு அந்த வழக்கின் நீதிபதி விதித்த அபராத தொகை வெறும் பத்து ரூபாய்தான். அதை மிகுந்த ஆதங்கத்தோடு அங்கலாய்ப்போடு சுவாமி ஆனந்த்தீர்த் தன்னுடைய கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அதை அம்பேத்கர் எடுத்துக்காட்டுகிறார்.

மறுபடியும் இரண்டு சிறுவர்களை அழைத்துக்கொண்டு கீழவளவு என்ற பகுதிக்கு ஆனந்த்தீர்த் செல்கிறார். அதே 52ஆம் ஆண்டு; அந்த இரண்டு பேருக்கும் கொட்டங்கச்சியில் தேனீர் கொடுக்கக்கூடாது, கிளாசிலே கொடு என்று கேட்கிறார். அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். மறுத்தது மாத்திரமல்ல; அந்த இரண்டு சிறுவர்களை மாத்திரம் மட்டுமல்லாமல் அவர்களையும் அடித்ததோடு நிற்காமல் சுவாமி ஆனந்த்தீர்த் அவர்களையும் அடித்து உதைக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு வன்முறைச் செயல் அங்கே நடைபெற்றதை அவர் தன்னுடைய கட்டுரையிலே குறிப்பிடுகிறார். எனவே 52ஆம் ஆண்டு முதல் சுதந்திரம் பெற்ற ஐந்தாவது ஆண்டிலே இந்த நிலைமை இருந்திருக்கிறது.

இன்றைக்கு அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும் கூட இடுகாடு, சுடுகாடு இந்த இடங்களில் சாதி பேத உணர்வு, வேற்றுமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, பிளவு மனப்பான்மை இவைகள் எல்லாம் கொடிகட்டிப் பறக்கின்ற காட்சியை நாம் காண்கிறோம். எல்லோரும் ஒரே குரலில் சொன்னோம். நானும் சொல்கிறேன் இதிலே மனதளவில் தான் மாற்றம் வேண்டும்.

நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் முதலாக தொடர்ந்து பேசிய அனைவரும் மனதளவிலேதான்



இந்த மாற்றம் ஏற்பட வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்று மட்டுமே கூறினர். அதற்கு அம்பேத்கர் இந்த சாதி ஒழிப்புக்கு ஒரு வழி சொல்லியிருக்கிறார். "சாதி ஒழிப்புக்கு உண்மையான வழி கலப்பு திருமணம்தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ரத்தக் கலப்பின் மூலம்தான் உற்றார் உறவினர் என்ற உணர்வு ஏற்படும். இந்த உறவு, இந்த உணர்வு ஏற்பட்டு வலுவடைந்தாலன்றி சாதியினால் ஏற்பட்டிருக்கும் வேற்றுமையுணர்வு ஒருவருக்கொருவர் அந்நியராக நினைப்பது மறையவே மறையாது. சாதியை உடைப்பதற்கு உண்மையான தீர்வு கலப்புத் திருமணமே. வேறு எதுவும் சாதியைக் கரைக்க முடியாது". சமபந்தி போஜனமும் கலப்பு மணமும் சாதாரண நடைமுறையாகும் போதுதான் சாதியின் சக்தி அழியும். எனவே நாம் இன்றைக்குச் சமபந்தி போஜனம் நடத்தினோமென்றால் அது அம்பேத்கர் அவர்களுடைய வழியில் அவர் சொன்ன அந்தக் கருத்தின்படி நடத்தியிருக்கிறோம்.

சமபந்தி விருந்து நடத்திவிட்டோம். ஆனால் எத்தனைப் பேர் கலப்புத் திருமணத்திற்குத் தயாராக இருக்கிறோம்? ஆனவர்களைக் கேட்கவில்லை திருமணம் இன்னும் ஆகாதவர்களைக் கேட்கின்றேன். ஆனவர்கள் நான் தயார் என்று கையை உயர்த்தி விடாதீர்கள். நான் கேட்பதற்கு உரிமை படைத்தவன். நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்களும், ஜனதா தளத்தின் தலைவர் வடிவேலு அவர்களும் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். என்னுடைய குடும்பத்திலேயே பல கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தவன் நான்; அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடப் பெண்ணை என்னுடைய மருமகளாக ஏற்றுக்கொண்டவன் நான்.

ஏற்றுக்கொண்டவன் மட்டும் அல்ல; நானே வரவழைத்து என்னுடைய மகனுக்குக் கட்டி வைத்தவன். இன்றைக்கும் ஆதி திராவிட பேரக்குழந்தையை, பேத்திக் குழந்தையை எடுத்துக் கொஞ்சுகின்றேன்; முத்தமிடுகின்றேன். ஒரு பெண்ணை எடுத்தது மாத்திரமல்ல - என்னுடைய வீட்டுப் பெண்ணை, என்னுடைய பேத்தியை ஒரு தலித் ஆதிதிராவிடர்க்கு; கலப்புத் திருமணம் செய்து வைத்ததும் நான் தான். எனவே அந்த உரிமையோடு கூடத்தான் நான் சொல்லுகின்றேன். கலப்புத் திருமணம் சாதியை ஒழிப்பதற்குப் பெரும் கருவியாக பயன்படுமென்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

அந்தக் கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்துகின்ற வகையில் ஒரு அறிவிப்பை அரசின் சார்பாக இங்கே செய்ய விரும்புகிறேன்.

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு ஏற்கெனவே அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டமாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு பிறகு 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி நான் ஒரு அறிவிப்புச் செய்கிறேன். இப்பொழுது தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடைபெறும் இந்த நேரத்தில், சாதியற்ற சமுதாயம் அமைந்திட வேண்டும் என்ற நோக்கத்தில் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருள் மணமகனோ அல்லது மணமகளோ ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அந்தத் தம்பதியருக்கு 20 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வெறும் கலப்புத் திருமணம் மட்டும் போதாது; அதற்கு 10 ஆயிரம் ரூபாய்தான். ஏழைப் பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால் அவர்களுடைய வருமான வரம்பை மையமாக வைத்து அவர்களுக்கு இப்பொழுது 10 ஆயிரம் ரூபாய் திருமண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

97,98 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரம் 46 ஆயிரம் பெண்களுக்கு 46 கோடி ரூபாய் இதற்காக வழங்கப்பட்டு வருகிறது. இஃதன்னியில் கலப்புத் திருமணம் என்றால், அதிலே மணமகன் ஆதிதிராவிடராக இருக்கவேண்டும் அல்லது மணமகள் ஆதிதிராவிடராக இருக்கவேண்டும். இருவரில் ஒருவர் ஆதிதிராவிடராக இருந்து நடைபெறும் திருமணத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் அரசின் நிதியாக வழங்கப்படும் என்பதை இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, இந்த மாநாடு எல்லா வகையிலும் ஒரு உணர்வை நம்மிடையே எழுப்ப உதவியிருக்கின்ற மாநாடாகும். இந்த மாநாட்டின் மூலமாக, மதுரை தருகின்ற இந்தச் செய்தியின் வாயிலாக மாநில முழுவதும் "தீண்டாமை ஒழிப்போம்" என்கின்ற அந்தக் குரல் ஒலிக்குமென்று எதிர்பார்க்கின்றேன். இருந்தாலும் கூட - மாவட்டத் தலைநகரங்களில் அடுத்து கோவை, நெல்லை, திருச்சி இவ்வாறாக பல மாவட்டத் தலைநகரங்களில் மனிதச் சங்கிலிகளும் சமபந்தி விருந்துகளும் தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளும் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை இந்தப் பொன்விழா ஆண்டில் அரசு செய்திடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மாநாட்டின் வெற்றி உண்மையிலேயே தீண்டாமை ஒழிவதிலேதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

- மதுரையில் 31.8.97 அன்று நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை. ★

## இரு நலம்!

**த**ந்தை பெரியார் அவர்களிடம் பொதுநலம் - சுயநலம் இரண்டிற்கும் விளக்கம் கேட்கப்பட்டது.

உடனேயே பெரியார் அவர்கள் சொன்னார் -

"மழை பெய்வது **பொதுநலம்**;
குடைபிடிப்பது **சுயநலம்**!"

# இந்திய தேசிய இராணுவம்

ஜப்பானியர்வசம் போர்க் கைதிகளாகச் சிக்கியிருந்த இந்தியக் கைதிகளை வைத்துக்கொண்டு, இந்திய தேசிய இராணுவத்தை அமைத்து, அதற்குத் தாமே தலைவனும் ஆனார் சுபாஷ் சந்திரபோஸ். அது முதல் அவருடைய படை வீரர்கள் அவரை 'நேதாஜி' என அழைக்க ஆரம்பித்தனர். அப்பொழுதுதான் அவர் 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை இராணுவத்துக்காக உண்டாக்கினார்.

1942-இல், ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டிவிட்டால், இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டுவதில், ஜப்பானியர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையை ஜப்பானின் சார்பில் ஒருபுறம் இந்திய மக்களுக்கு வானொலி மூலம் ஊட்டிவந்தார் நேதாஜி. இன்னொரு புறம் உள்நாட்டில் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைத் துவக்கினார்.

1942 ஆகஸ்ட் மாதம், ஆங்கிலேயர்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் வெளிப்படையாகவே சண்டை ஆரம்பமாகியது - 'செயலில் இறங்கு, அல்லது செத்துமடி'.

காந்தி இப்படி கட்டளையிட்டதும் இருதரப் பினரிடையேயும் தீவிரப் போராட்டம் ஆரம்பமாகியது. இந்தியா முழுவதும் பெரிய - சிறிய எல்லாக் காங்கிரஸ் தலைவர்களையும் அரசு கைது செய்து சிறையில் அடைத்தது. தலைவர்கள் இல்லாத காரணத்தால் மக்கள் ரெயில் தண்டவாளங்களையும், தந்திக் கம்பிகளையும், பாலங்களையும், தெருக்களையும் நாசம் செய்ய ஆரம்பித்தனர். இராணுவமும் போலீசும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கின.

ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பதிலுக்கு மக்களும் போலீசாரில் பலரைப்பழிவாங்கினதால், சில தினங்களுக்கு தேசமே தீப்பற்றி எரிவதைப் போல் இருந்தது.

நாடு முழுவதிலும் நாசமாக்கப்பட்டவைகளைப் புதுப்பிக்கவே ஆங்கிலேயர்களுக்குப் பல மாதங்கள் ஆயின.

இவ்வாறான நாசச் செயல்களுக்காகக் கைது செய்யப்பட்ட மக்களுக்குச் சிறையில் பெரும் கொடுமைகள் இழைக்கப்பட்டன. தலைமறைவாக இருந்த தலைவர்களைப் பற்றிய தகவல்களுக்காக அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். பீகார் சிறையிலிருந்து தப்பியோடித் தலைமறைவாக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயணனைக் கடைசியில் கைதுசெய்து லாகூர் சிறையில் அடைத்து, பல மணி நேரங்கள் பனிக்கட்டியின் மீது அமர்த்தி தொடர்ந்தாற்போல் பல இரவுகள் தூங்கவிடாமல் செய்தனர்.

இரண்டு இரண்டரை ஆண்டுகளுக்கு நாடு முழுவதுமே ஒரு பெரும் சிறைக்கூடமாக மாற்றப்பட்டிருந்தது. ஆங்கிலேயப் படைகள் ஒவ்வொரு வினாடியும் துன்பங்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது.

கடைசியில், காந்தி, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மற்ற தலைவர்களும், மெள்ள மெள்ள விடுவிக்கப்பட்டனர். அவர்களின் ஒத்துழைப்பைப் பெற அரசு மீண்டும் முயற்சிகளைச் செய்யத் துவங்கியது. ஆனால், தேசத்தலைவர்கள், முழுச் சுதந்திரத்தைத் தவிர வேறு எந்த உடன்பாட்டையும் ஏற்கத் தயாராயில்லை.

**ஆதாரம்: 'சுயராஜ்யத்தின் கதை'**

# ஆதிதிராவிடர்கள் ஆக்கம் பெற்றிட...

*அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தால், எவ்வித வருமான உச்சவரம்பும் இன்றி ரூ.20,000 வழங்கப்படவேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டிருக்கிறார்.*

❑❑❑

*இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் . ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் பயிற்சி பெற்றவர்கள் இல்லாத காரணத்தால் . ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினைச் சார்ந்த பி.எட். பட்டம் பெற்றவர்களை, விதிகளைத் தளர்த்திப் பணியமர்த்திக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.*

❑❑❑

*ஆதிதிராவிடர்களுக்கான அரசுப் பணியிடங்களை முறையாக நிரப்ப, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சமயநல்லூர் திரு.எஸ்.செல்வராஜ் அவர்களைத் தலைவராகக் கொண்ட கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.*

*அக்குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகிப்போர் பற்றிய விவரம் வருமாறு :*

*சட்டமன்ற உறுப்பினர்களான திரு.செங்கைசிவம், திரு.எஸ். அழகுவேலு, திருமதி. கோமதி சீனிவாசன், திரு.வி.பி. இராஜன், திரு. எஸ். புரட்சிமணி, திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள், திரு.ஜி. பழனிச்சாமி, திரு. செ. கருப்பசாமி, டாக்டர் கே.கிருஷ்ணசாமி.*

*இவர்களோடு . ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலர் செயல் உறுப்பினராகவும் . பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அரசுச் செயலர் உறுப்பினராகவும் இருப்பார்கள்.*

❑❑❑

# "சமூக சேவை எனும் தடாகத்தில் நீந்திய அன்னப்பட்சி மறைந்தது!"

- அன்னை தெரசாவிற்கு முதலமைச்சர் புகழாரம்

அன்னை தெரசா மறைவையொட்டி சென்னைத் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் என்னிடம் இரங்கல் உரை கேட்டபோது நான் சொன்ன வாசகம் "பருந்துகளும் - கழுகுகளும் வட்டமிடும் இந்த உலகத்தில், சமூக சேவை எனும் தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த அன்னப்பட்சி மறைந்துவிட்டது" என்று குறிப்பிட்டேன்.

அன்னம் ஒரு பறவையையும் குறிக்கும். அன்னம் அன்னை தெரசாவையும் குறிக்கும். அன்னம், அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு அளித்த உணவையும் குறிக்கும். இப்படி எல்லா வகையிலும் வெண்புறாவாக - சமாதானப் பறவையாக ஏழைகளை உறவினராகக் கொண்டிருந்த நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய அன்னை தெரசா அவர்கள் மறைந்துவிட்டார், என்று சொல்வதை விட நம் அனைவருடைய - உலக மக்கள் அனைவருடைய உள்ளத்திலும் நிறைந்துவிட்டார் என்று சொல்வதுதான் பொருத்தமுடையதாகும்.



## பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்ட அழியாத வரிகள்

அன்னை அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில் சிறந்த சமூக சேவகிக்கென 'பத்மஸ்ரீ' விருது அவர்களுக்கு வழங்கப்பட்டது. பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது பெரிதல்ல - அந்த விருதை வாங்கிச் சென்ற அன்னை தெரசா அவர்களைப் பற்றி - பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டதுதான் என்றென்றைக்கும் அழியாத வரிகளாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

"குடியரசுத் தலைவருடைய கையிலே இருந்து அன்னை தெரசா அவர்கள் விருதினை வாங்கிச் சென்ற காட்சி - கொடிய நோய்வாய்ப்பட்ட ஒரு குழந்தையை தன் இரு கைகளாலும் பரிவோடு ஏந்தி எடுத்துச் செல்வது போன்ற ஒரு காட்சியை நினைவுறுத்தியது" என்று குறிப்பிட்டார்கள். அது மாத்திரமல்ல; "அந்தக் காட்சியைக் கண்டபோது என் கண்ணீர்த் துளிகளைக் கட்டுப்படுத்துவது எனக்கு மிகவும் அரிதாக இருந்தது. அப்படியே உருகிப் போனேன்" என்று தன்னுடைய சகோதரி விஜயலட்சுமி பண்டிட் அவர்களிடம் நேரு சொன்னதாக ஒரு குறிப்பு.

இன்னொன்று, மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் பி.சி.ராய், முதலமைச்சர்களிலேயே மிகுந்த புகழ் வாய்ந்தவர். பண்டித நேரு அவர்களைப் பெயர் சொல்லி அழைக்கக்கூடிய அளவிற்குப் பண்டித நேருவிடம் பழகியவர். அவர் அன்னையினுடைய அறப்பணிகளைக் குறித்து உதிர்த்த வார்த்தைகள்; பி.சி.ராய் அவர்களுடைய 80வது பிறந்த நாள், அப்பொழுது அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அன்னை தெரசாவைப் பற்றிச் செய்தியாளர்கள் மேற்குவங்க முதல்வராக இருந்த பி.சி.ராய் அவர்களிடம் கேட்டபோது - பி.சி.ராய் கூறுகிறார் - அந்த வாசகத்தை அப்படியே படித்துக்காட்டுகிறேன்.

"இந்த என் பிறந்தநாளில் இந்த முதிய வயதில் முதன் முதலாக யாரைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது தெரியுமா? நாட்டின் விடுதலைக்காக எந்தத் தலைவரோடு ஒன்றி நின்று போராடினேனோ அந்த என் அருமைத் தலைவர் மகாத்மா காந்தி அவர்களின் நினைவுகூட எனக்கு வரவில்லை. என் உயிருக்குயிரான உற்ற தோழர் ஜவகர்லால் நேரு அவர்களின் எண்ணமும் என் நெஞ்சில் எழவில்லை. ஏன், எனக்கு நெருக்கமான என் உற்றார், உறவினர் எவரைப் பற்றிய சிந்தனையுமே எனக்கு வரவில்லை. ஆனால் எனது அலுவலகத்துக்குச் செல்லும் அந்த மாடிப்படிகளில் நான் காலடி வைத்து ஏறும்போது ஒரே ஒரு எளிய உருவம் மட்டுமே என் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருந்தது. திக்கற்ற ஏழைகளையும், நோயாளிகளையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக, அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக தம் வாழ்வையே ஒப்படைத்துக்கொண்டு அல்லும் பகலும் அயராது உழைக்கிறாரே அந்த தெரசாவின் மெலிந்த வடிவமே என் இதயம், மூளை எல்லாவற்றையுமே சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டது"

- என்று பி.சி.ராய் பாராட்டுகிறார்.

பிறந்தநாளில் காந்தி அடிகளை நினைக்கவில்லை. பண்டித நேருவை பிறந்த நாளில் நினைக்கவில்லை. அன்னை தெரசாவின் உருவம்தான் தன் கண் முன்னால் நின்றது என்று மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் பி.சி.ராய் சொன்ன இந்த வாசகம், அவருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. நம் அனைவருக்கும் சொந்தமான ஒரு வாசகமாக ஆகிவிட்டிருக்கின்றது.

அன்னை அவர்கள் நம்மை விட்டு நீங்கிவிட்டார், பிரிந்துவிட்டார் என்று யாரும் கருதத் தேவையில்லை. அவருடைய உழைப்பு; ஓய்வற்ற சேவை, ஏழை மக்கள் பால் கொண்டிருந்த இரக்கம், அன்பு, நோயாளிகளிடம் காட்டிய பரிவு, நலிந்தோரிடத்திலே அவர் கொண்டிருந்த நாட்டம் இவைகள் எல்லாம் அன்னையின் வடிவிலே நம்முடைய உள்ளத்திலே பதிந்திருக்கின்றன.

அவைகளைச் செயல்படுத்துவது ஒன்றே அன்னை நம்மிடத்திலே விரும்பியது. மலர்களை விட மென்மையான உள்ளத்தோடு ஏழையெளிவர்கள்பால் நாம் காட்டுகின்ற அன்பும் கருணையும்தான் அன்னை தெரசா விரும்பியது; அதைச் செய்வோம். அந்த வழி நடப்போம். அதையே நம்முடைய இந்த இரங்கல் நிகழ்ச்சியிலே மேற்கொள்கிற சூளுரையாகக் கொள்வோம்.

- 5-9-97ல், அன்னை தெரசா மறைவின்போது, முதலமைச்சர் விடுத்த இரங்கல் செய்தி.



அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சர்கள் பலர் பெரிய கார்களை உபயோகித்து வந்ததுபோல் தனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் எவரும் உபயோகிக்கக்கூடாது என்று எண்ணி, முடிவெடுத்து, அனைத்து அமைச்சர்களும் அம்பாசிடர் காரில்தான் செல்லவேண்டும் என்று உத்தரவிட்டு, அதற்காகக் கார்களும் உடனடியாக வாங்கப்பட்டன.

★★★

ஒரு சமயம், அண்ணா அவர்களின் குடும்பப் பங்கீட்டு அட்டையை அண்ணா அவர்கள் பார்க்க நேர்ந்தது. அதிலே தன் குடும்பத்தில் இல்லாத ஒரு நபரின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும், தன் மனைவியாரைக் கூப்பிட்டு, 'இப்படி நாமே செய்யலாமா?' என்று கேட்டார். அண்ணியாரோ அவர் நம் வீட்டில் அச்சகத்தில் பணியாற்றுவதாலும் அதனால் தினமும் பகலில் சாப்பிடுவதாலும் அவர் பெயரைக் கொடுத்தேன் என்றார்கள். இருந்தாலும் அதை அண்ணா அவர்கள் விரும்பவில்லை.

★★★

# அண்ணா அண்ணா



டெல்லியில் பிரதமரால் கூட்டப்பட்ட அனைத்து மாநில முதலமைச்சர்கள் கூட்டத்திற்குச் செல்வதற்கான அனைத்து ஆயத்தங்களும் செய்யப்பட்டு, அடுத்த இரண்டாம் நாள் புறப்படுவதாக இருந்தார். அண்ணா அவர்களும், அந்தரங்கச் செயலாளரும் விமானத்தில் செல்ல இருந்தமையால், இரண்டு தினங்களுக்கு முன்பே ரயிலில் திரு.சி. சுந்தரராஜபெருமாள் என்னும் நேர்முக உதவியாளரும், ஒரு மெய்க்காப்பளரும் புறப்பட்டுச் சென்று விட்டனர். அப்போது, பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள், திண்டிவனம் அருகே ஒரு விபத்தில் சிக்குண்டு, அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது.

உடனே அண்ணா அவாகள் பதைபதைத்துப் போனார்கள். என்னைக் கூப்பிட்டு டெல்லி பயணத்தை ரத்து செய்யும்படியும், அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்திக்கு - வர இயலாமைக்கு ஒரு கடிதத்தைத் தயாரிக்கும்படியும் பணித்தார்கள். அவ்வாறே டெல்லி பயணத்தை ரத்து செய்துவிட்டு, பிரதமர் இந்திராவிற்கு ஒரு கடிதம் தயாரித்து, அண்ணா அவர்களின் ஒப்புதலுக்காகக் காட்டினேன். அது அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. "நான் பக்கத்தில் இருந்தால் என் தம்பி கருணாநிதிக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும். எனவே வரஇயலாமைக்கு வருந்துகிறேன். எனக்குப் பதிலாக(அப்போது)உணவு அமைச்சராக இருந்த திரு.மதியழகனை அனுப்பிவைக்கிறேன்'' என்று தானே ஒரு கடிதத்தை எழுதி என்னிடம் கொடுத்து, அதை டைப் செய்யும்படி கூற, அந்தக் கடிதத்தைப் பிரதமருக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சென்னைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வரப்பட்டு, அவரை அடிக்கடி நேரில் சென்று கவனித்துவந்தார் அண்ணா.

★★★

அண்ணா அவர்களிடம் நேர்முக உதவியாளராகப் பணியாற்றி வந்த திரு.எஸ்.கஜேந்திரன் என்பவர், ஒருநாள் மாலை 6.30 மணி சுமாருக்கு அண்ணா அவர்கள் வீட்டில் வாந்தியெடுக்க ஆரம்பித்தார். அதே சமயத்தில் அடிவயிற்றில் ஒரு பக்கம் வலிப்பதாகவும் கூறினார். உடனே அண்ணா அவர்கள் என்னை அழைத்து, அரசுப் பொது மருத்துவமனைக்குக் கொண்டுபோய்க் காட்டும்படி கூறினார். நான் அழைத்துச் சென்றபோது, அங்குள்ள மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு, உடனடியாக அப்பெண்டிஸைடிஸ் ஆபரேஷன் செய்யவேண்டுமென்று கூறினார்கள். அதை அண்ணா அவர்களுக்குத் தெரிவித்தபோது, உடனே இரவு சுமார் 10 மணிக்கு அரசு பொது மருத்துவமனைக்குத் தானே நேரில் வந்து, இந்த ஆபரேஷன் முடியும்வரை அங்கேயே இருந்து, அவரை வார்டில் கொண்டு வந்து படுக்கையில் சேர்த்த பின்னர், நன்கு கவனித்துக்கொள்ளும்படி அங்குள்ள டாக்டர்களிடம் கூறி விடைபெற்றார். பின்னர் அடிக்கடி மருத்துவமனைக்கு வந்தும் அவரைப் பார்த்துச் சென்றார்.

★★★

முன்னாள் ஆளுநராக இருந்த திரு.கே.சந்தானம் அவர்களின் மகன் திரு.கே.எஸ்.இராமானுஜம் என்பவர் ''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகையின் நிருபராகவும், அதன் சிறப்புப் பிரதிநிதியாகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் **The Big Change** என்னும் தலைப்பில் எவ்வாறு காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தது, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது என்பதைப் பற்றிய ஒரு புத்தகத்தை எழுதி, அதனை அண்ணா அவர்கள் சென்னை நிருபர்கள் சங்கத்தின் சார்பில் 1967ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் தேதி வெளியிட வேண்டுமென்று கேட்டு, அதற்கு அண்ணா அவர்களும் தன் இசைவைத் தெரிவித்தார். அவ்விழா - அன்றைய பாலர்கள் அரங்காக இருந்த, இன்றைய கலைவாணர் அரங்கத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.

அண்ணா அவர்களிடம், அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதி முன் கூட்டியே கொடுக்கப்பட்டது. அதை அவர் படிக்க எண்ணினாலும் நேரமில்லாமல் தள்ளிக் கொண்டே வந்தது. காரணம், அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதோ மார்ச் 6, 1967. வேலைப்பளு அதிகம். அண்ணா அவர்கள் ஈரோட்டில் சில நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு,

ரயிலில் இரவு புறப்பட்டு, மறுநாள் காலை சென்னை வந்து, அன்று மாலை இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள வேண்டும். புத்தகமோ சற்றுப் பெரியது. அந்த ரயிலில் பயணம் செய்யும் இரவு அண்ணாவுக்கு வசதியாக யாருடைய தொந்தரவும் இல்லாமல் அமைந்தது. எனவே இரவு முழுவதும் ரயிலில் அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டார்.

மறுநாள் மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் விழா மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அண்ணா அவர்கள் பேசுவதைக் கேட்க நூற்றுக்கணக்கான படித்தவர்கள் முன்னதாகவே வந்து காத்திருந்தனர். அண்ணாவும் இந்த நிகழ்ச்சிக்கு, குறித்த நேரத்திலே வந்து, ஒரு மணி நேரத்திற்குமேல் கருத்தாழம் மிக்க மேற்கோள்களோடு விமர்சனம் செய்துவிட்டு, அந்தப் புத்தகத்தை வெளியிட்டார்கள்.

★★★

அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வரும்போது நாட்டிலே உணவுத் தட்டுப்பாடு அதிகம். எனவே, ஆட்சிக்கு வந்தவுடன் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டார். அதிலே வெற்றியும் கண்டார். அப்போது திரு.கே.ஏ.மதியழகன் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தார். ஒருநாள் காபினெட் அறையில் உணவு சம்பந்தமான கூட்டம் பல மணிநேரம் நடைபெற்றது. அந்தக் கூட்டம் முடிந்ததும், வெளியே வரும்போது நிருபர்கள் அண்ணா அவர்களிடமும், திரு.மதியழகன் அவர்களிடமும் அந்தக் கூட்டம் சம்பந்தமான பேட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் சற்றும் தயங்காது நிருபர்களைப் பார்த்து, கொஞ்சம் பொறுங்கள், உங்கள் ஒவ்வொருவருக்கும் கூட்ட நடவடிக்கைப் பற்றிய விவரங்களைத் தருகிறேன் என்று சொல்லி, கூட்டம் முடிவதற்கு முந்தியே - தானே ஒரு சிறந்த பத்திரிகை யாளராதலால் தனக்குள்ள பத்திரிகைத்துறையின் நீண்ட அனுபவத்தாலும், எழுத்தாற்றலாலும், தயாராகச் சிறுசிறு துண்டு காகிதங்களில் கோவையாக எழுதி வைத்திருந்ததை, என்னிடம் கொடுத்து, அதை அப்படியே டைப் செய்து, நிருபர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதியைக் கொடுங்கள் என்றார்.

அவ்வாறே மெல்லிய (Manifolding) காகிதத்தில் பல பிரதிகள் எடுத்து, நிருபர்களுக்குக் கொடுத்தேன். அவர்களும் தங்களுக்கு எழுதும் வேலை குறைந்ததற்கு மகிழ்ச்சி அடைந்ததோடு, அண்ணா அவர்களே எழுதியது மிகவும் நன்றாக இருந்தது என்று பாராட்டி, அதை அப்படியே மறுநாள் அனைத்துப்பத்திரிகைகளிலும் வெளியிட்டார்கள். தமிழ்ப் பத்திரிகைகளில் அதன் மொழிபெயர்ப்பு அப்படியே வெளியிடப்பட்டது.

★★★

''தமிழ்நாடு'' என்று மாநிலத்தின் பெயரை மாற்றியமைக்கும் தீர்மானத்தின் மீது பேரறிஞர் அண்ணா அவர்கள் 18.8.1967ஆம் நாளன்று ஆற்றிய உரையில் சில முக்கியப்பகுதிகளை இங்கே தருகிறேன்:

'சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற இருக்கின்ற ''தமிழ்நாடு'' என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும் நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாளாகும். இந்தத் திருநாளைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக்கொண்டிருக்க நேரிட்டதே என்பதுதான் மகிழ்ச்சியின் இடையிலே நமக்கு வருகின்ற ஒரு துயரமே தவிர, நெடுங்காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை மிகுந்த காலம் தாழ்த்தி, இன்றைய தினம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றாலும்,இதிலே எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவைத் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

'இந்தியப் பேரரசிலே மிகுந்த செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோது இதைப்பற்றி அவர்கள் சொல்லும்போது, ''தமிழக சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது'' என்பதனை முன்கூட்டியே என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள பல தலைவர்கள், அதனை அரசை நடத்துகிறவர்கள் கூட ஏற்றுக்கொள்கிறார்கள் என்று எண்ணத்தக்க விதத்தில் பத்து நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றிப் பேசவேண்டிய வாய்ப்புக் கிடைத்த நேரத்தில் அங்குள்ள உள்துறை அமைச்சர் திரு.சவான் அவர்கள் மெட்ராஸ் என்று பேசி பழக்கப்பட்டவர் - மிகுந்த அக்கறையோடும் மிகுந்த கவனத்தோடும் ''Tamil Nad'' என்றுதான் பேசியிருக்கிறார். ஆக இதை அவர்களும் ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றைய தினம் இந்த அளவிலே அவையிலே நாம் பெற்று இருக்கிறோம்.

''தமிழ்நாடு என்று பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, நம்முடைய தொழில் அமைச்சராக முன்னால் இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்குமிடையே செய்துகொள்ளக்கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதப்பட வேண்டிவரும். அதனாலே சிக்கல்கள் விளையும் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலிருந்து அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் போய் வந்தார்கள் என்பதைத்தான் கவனப்படுத்துகிறார்களே தவிர, உண்மையாகச் சிக்கல்கள் இருக்கின்றனவா? என்பதைக் கவனப்படுத்தவில்லை. மதிப்பிற்குரிய

நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னபடி 'கோல்ட் கோஸ்ட்' என்பது 'கானா' ஆகிவிட்டது. அதனால் எந்தவிதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டு விடவில்லை. தமிழ்நாடு தனி நாடான இந்தப் பெயரை இடவில்லை. இந்தியாவில் ஒரு பகுதியாக இருந்துகொண்டு இந்தப் பெயரை இடுவதால் இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்பதை ஒரு கடமையுணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.''

★ ★ ★

எள்ளை எண்ணையாட்ட வைத்திருந்தேனே, அது எங்கே என்று கேட்டால், நேற்றே அதை எண்ணையாட்டி வைத்திருக்கிறேனே என்றும், இந்தக் காரியத்தை இன்று செய்யவேண்டும் என்று சொல்லும்போதே, நேற்றே அந்தக் காரியம் செய்து முடித்தாகி விட்டதே என்றும் சொல்லக்கூடியவர் தான் கலைஞர். அண்ணா எண்ணக்கூடியவைகளைக் கலைஞர் உடனுக்குடன் செயல் வடிவில் செய்து முடித்து விடுவார். மேற்சொன்னவைகள் அனைத்தும், அண்ணா அவர்களே கலைஞரைப்பற்றி அடிக்கடி கூறி மகிழக்கூடிய சொற்களாகும்.

- முதலமைச்சரான அறிஞர் அண்ணாவின்
நேர்முக உதவியாளராக இருந்த
திரு. பொ.க.சாமிநாதன் எழுதிய
மூன்று முதல்வர்களுடன் என்ற நூலிலிருந்து...

வெளியீடு: பாரி நிலையம், சென்னை.

---

# அலிப்பூர் வழக்கில் அரவிந்தர் !

**1908** ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், முப்பதாம் நாள், குதீராம்போஸ், பிரபுல்லாசாகீ என்ற இரண்டு வாலிபர்கள், பீகார், முசப்பர்பூரின் மாவட்ட நீதிபதி கிங்ஸ்போர்டின் வண்டி என்று எண்ணி, ஒரு வண்டி மீது வெடிகுண்டு எறிந்தார்கள். அந்த நீதிபதி பல பத்திரிகை ஆசிரியர்களுக்கும் கடும் தண்டனை அளித்தவர்; ஒரு சிறுவனுக்குச் சவுக்கடி தண்டனையையும் விதித்தவர். அதற்குப் பழிவாங்கவே புரட்சியாளர்கள் திட்டமிட்டுக் குண்டு வீசினார்கள்.



ஆனால், வண்டியில் கிங்ஸ்போர்டு வரவில்லை. இந்தியர்களின் அன்புக்குப் பாத்திரமான பிரிங்கல் கென்னடி என்பவரின் மனைவியும் மகளும் குண்டு வீச்சின் காரணமாக உயிர் இழந்தார்கள்!

இந்த நிகழ்ச்சியால் நாடெங்கும் பரபரப்பு உண்டாயிற்று. போலீஸ்காரர்கள் விரைவில் இரண்டு புரட்சிக்காரர்களையும் கைது செய்துவிட்டார்கள்; கல்கத்தா மானிக்தல்லாவில் ஒரு வெடிகுண்டு உற்பத்தி சாலை இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். அது சம்பந்தமாக, அரவிந்தரின் தம்பி பாரீந்திரகுமார் கோஷையும் இன்னும் சில இளைஞர்களையும் கைது செய்தார்கள்.

இந்திய சுதந்திரப்போரில் கல்கத்தாவில் உள்ள புரட்சிக்காரர்களைத் தூண்டி விடுபவர் அரவிந்தரே என்பது அரசின் எண்ணம். அரவிந்தர் கைது செய்யப்பட்டார்.

'அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு' என்று பிரபலமான இவ்வழக்கு ஓராண்டுக் காலம் நடந்தது. மற்றவர்களோடு அரவிந்தரும் அலிப்பூர் சிறையிலேயே வைக்கப்பட்டார். அப்போது, சிறையில் ஏ.பி.சி. என்ற வகுப்புப் பிரிவினைகள் ஏற்படவில்லை. எல்லாவிதக் கைதிகளும் ஒரே சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஒரேவிதமாக வேலை வாங்கப்பட்டார்கள். வெடிகுண்டு வழக்கு என்பதால் இக் கைதிகள் அதிகமாய்த் துன்புறுத்தப்பட்டார்கள்.

அரவிந்தருடைய சொற்பொழிவுகள், 'வந்தேமாதரத்தில்' அவர் எழுதிய கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றை ஆதாரமாக வைத்து அவர்மீது குற்றம் ஜோடனை செய்யப்பட்டிருந்தது. அவர் சதிகாரர்களைத் தூண்டிவிட்டதாகவும், சுதந்திரத்தாகத்தை உண்டாக்கியதாகவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

புகழ்பெற்ற ஈ. நார்டன் துரை, அரசாங்கத்தின் சார்பில் தோன்றினார். சித்தரஞ்சனாரின் குறுக்கு விசாரணைத் திறனும், சட்ட ஞானமும், நீதிபதியையும், வக்கீல்களையும், மக்களையும் பிரமிக்க வைத்தன.

நீதிபதி தீர்ப்புக் கூறினார்: அரவிந்தர் குற்றவாளி அல்ல!

அவர் விடுதலையானார்; இன்னும் சிலரும் விடுதலை பெற்றார்கள்; அதே சமயம் - பெரும்பாலோர் நாடு கடத்தப்பட்டனர்! ★


*சென்ற இதழ் தொடர்ச்சி:*

# காங்கிரஸ் தலைவர் பெரியார்

## - சாமி சிதம்பரனார்

**தி**ருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதில் டாக்டர் வரதராஜுலு நாயுடு பார்ப்பனத் துவேஷப் பிரசாரம் செய்து வருவதாய்க்கூறி, அவர்மீது ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அத்தீர்மானத்தை ஈ.வெ.ரா. எதிர்த்துப்பேசித் தோற்கடித்தார். அதன் காரணமாக, அந்தக் கூட்டத்திலேயே டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன், சி.ராஜகோபாலாச்சாரியார், என்.எஸ்.வரதாச்சாரியார், கே.சந்தானம், டாக்டர் சாமிநாத சாஸ்திரி ஆகிய ஐந்துபேரும் உடனே ராஜிநாமா செய்து, கமிட்டியிலிருந்து விலகிக்கொண்டார்கள். டாக்டர் நாயுடு இந்நிகழ்ச்சியை மறந்திருக்கமாட்டாரென்று நம்புகிறோம். இச்சமயத்தில் டாக்டர் நாயுடு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்; ஈ.வ.ரா.காரியதரிசி. இதற்கு முன் இரண்டு ஆண்டுகளும் ஈ.வெ.ரா.தலைவர்; எஸ்.ராமநாதன் காரியதரிசி. காங்கிரசுக்குள் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற உணர்ச்சி ஏற்பட்டதற்கு இதுவே வெளிப்படையான காரணம்.

இக்காலத்தில், காலஞ்சென்ற பனகல் அரசரால் சென்னை சட்டசபையில் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் (Hindu Religious Endowments Act) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தை எல்லாப் பார்ப்பனர்களும் எதிர்த்தனர். இந்து மதத்தில் சர்க்கார் தலையிடுகிறதென்று கூச்சலிட்டனர். கோயில்கள் பாழ்படும் என்று புலம்பினர். கோயில் ''தர்மகர்த்தா''க்களும் 'மடாதிபதி'களும் சட்டத்தைக் கண்டித்தனர். திரு.எஸ். சீனிவாசய்யங்கார், விஜயராகவாச்சாரியார் உள்பட - பார்ப்பன வழக்கறிஞர்கள் பலரும் இதனால் "மதத்திற்கு ஆபத்து" என்றும், இச்சட்டம் செய்யச் சென்னை சட்டசபைக்கு அதிகாரம் இல்லை என்றும் கூச்சலிட்டனர். இவர்களில் சிலர் இந்தக் காரணத்தை வைத்து, அச்சட்டத்தை ரத்து செய்வதற்கு வைஸ்ராயிடமும் கவர்னரிடமும் சொல்லி, ஏற்பாடு செய்யப்போவதாக மடாதிபதிகளிடம் கூறி, அவர்களிடமிருந்து நிரம்பப் பணம் பெற்றுக்கொழுத்தனர். காங்கிரஸ் பார்ப்பனர்களும் இதை எதிர்த்தனர். இச்சமயம் ஈ.வெ.ரா. ஒரு அறிக்கை வெளியிட்டார். "கட்சிவேற்றுமை பாராட்டாமல் அறநிலையப் பாதுகாப்புச்சட்டத்தை ஆதரிக்க வேண்டும். இதனால், அறநிலையங்களுக்கு ஆபத்தில்லை. அவைகளின் செல்வங்கள் கொள்ளை போகாமல் பாதுகாக்கவேண்டும். மதத்தின் பெயரால் கொள்ளையடித்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தான் இதனால் ஆபத்து'' என்ற கருத்துடையது அவ்வறிக்கை. அவ்வறிக்கையை டாக்டர் நாயுடுவும், எஸ்.ராமநாதனும் திரு.வி.க. முதலியோரும் ஆதரித்தார்கள்.



ஈ.வெ.ரா., காங்கிரசிலேயே வகுப்புரிமைக்கும் சமுதாய உரிமைக்கும் போராடியவர்; போராடி வந்தார். பார்ப்பனரல்லாதாருக்கு அரசியலில் தக்க பாதுகாப்பளிக்க வேண்டுமென்று கூறிவந்தார். வகுப்பு எண்ணிக்கைக்குத் தக்கவாறு உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்பதை ஆதரித்தார். நீதிக்கட்சி தோன்றிய காலத்தில் ஈ.வெ.ரா.போன்றவர்கள், நீதிக்கட்சியுடன் சேர்ந்துவிடாமலிருப்பதற்காக "சென்னை மாகாண சங்கம்" என்றும், ''தேசீய சங்க''மென்றும் இரண்டு உண்டாக்கப்பட்டன. காலஞ்சென்ற கேசவபிள்ளை அவர்கள் முந்தியதற்குத் தலைவர்; இதைத் தோற்றுவித்தவர்கள் பார்ப்பனர்களே. பார்ப்பனரல்லாதார் கட்சியைத் திட்டுவதே இச்சங்கத்தாரின் பணி.

அக்காலத்தில் ஈ.வெ.ரா.இப்பணியை ஆற்றவில்லையென்றாலும் அச்சங்கத்திற்குப் பொருளுதவி செய்து ஆதரித்து வந்தார். அச்சங்கம் பார்ப்பனரல்லாதார் பெயரால் நடைபெற்றாலும் சங்கத்தை ஆட்டிவைத்தவர்கள் பார்ப்பனர்களேயாவார்கள். இச்சங்கத்திலும் தேசீய சங்கத்திலும் ஈ.வெ.ரா.வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார். என்றாலும் அது காரணமாகவே அச்சங்கங்கள் உடனே கொல்லப்பட்டுவிட்டன. அதற்குப்பின் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாகாண மாநாடுகளில் எல்லாம் ஈ.வெ.ரா.வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வற்புறுத்தி வந்திருக்கிறார்.

1920-ல் நடந்த திருநெல்வேலி மாநாட்டில் ஈ.வெ.ரா.வகுப்புவாரி தீர்மானத்தை விஷயாலோசனைக் கமிட்டியில் 6 ஓட்டுகள் அதிகமாகப் பெற்று நிறைவேற்றினார். மாநாட்டில் தலைவர் எஸ்.சீனிவாசய்யங்கார், 'இது பொதுநலக் கேடு' என்று அனுமதிக்காமல் மறுத்துவிட்டார். 1921-ல் தஞ்சாவூர் மாகாண மாநாட்டில் பிரரேபித்தார். அதுசமயம் C.R. அவர்கள், கொள்கையாக வைத்துக்கொள்வோம்; தீர்மான ரூபமாக வேண்டாம் என்று தடுத்தார். 1922-ல் திருப்பூரில் நடந்த மாகாண மாநாட்டில் ஈ.வெ.ரா.பிரேரேபித்தார். அப்போது நடந்த வாதத்தில்தான் ஈ.வெ.ரா.கோபமடைந்து மனுதர்ம சாஸ்திரத்தையும், இராமாயணத்தையும் நெருப்பில் கொளுத்தவேண்டும் என்றார். கலவரம் ஏற்பட்டு திரு.விஜயராகவாச்சாரியார் அடங்கிவிட்டார்.

பிறகு 1923-ல் சேலம் மாகாண மாநாட்டில் பிரரேபித்தார். கலகமாகும்போல் இருந்தது. ஜார்ஜ் ஜோசஃபும், டாக்டர் நாயுடுவும் நிறுத்திவிட்டார்கள். 1924-ல் திருவண்ணா மலையில் ஈ.வெ.ரா. தலைமையில் மாகாண மாநாடு என்றாலும், எஸ்.சீனிவாசய்யங்கார் வகுப்புவாரித் தீர்மானத்தைத் தோற்கடிக்க, சென்னையிலிருந்து ஏராளமான ஆட்களைக் கூட்டி வந்து தடுத்தார்; நின்றுபோய்விட்டது. 1925-ல் திரு.வி.க. தலைமையில் காஞ்சிபுரத்தில் ஈ.வெ.ரா.பிரரேபித்தார். திரு.வி.க.தீர்மானத்தை நிராகரித்தார். ஈ.வெ.ரா. கோபித்துக்கொண்டு காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டார். இவ்வாறு ஈ.வெ.ரா. எப்போதும் பார்ப்பனல்லாதார் உரிமையிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்துக்காகவும் போராடியே வந்திருக்கிறார்.

1924 டிசம்பரில் திருவண்ணாமலையில் கூடிய தமிழ்நாடு 30-வது காங்கிரஸ் மாகாண மாநாடு நடைபெற்றபோது, அதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ.வெ.ரா., அப்போதும் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும் தலைவர். அம் மாநாட்டின் தலைமையுரையில் அவர் பேசியது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். பார்ப்பனரல்லாதார் இயக் கத்தைப் பற்றி அவர் கூறியிருப்பதாவது-

“தென்னிந்தியாவில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை குலையாதிருப்பினும் ஹிந்துக்க ளுக்குள் ஒற்றுமை குறைந்து வருவது உண்மை. முதலாவது பிராமணர் பிராமணரல்லாதார் நிலையைச் சிறிது சிந்திப்போம் ஒரு மதத்தைச் சேர்ந்த இவர்களுக்குள் வேற்றுமையுணர்வு தோன்றுவானேன்? வேற்றுமைக்கு அடிப்படையான காரணங்கள் இருத்தல் வேண்டும். அக்காரணங்களை உணர்ந்து ஒற்றுமைக்கு உழைக்க தேச பக்தர்கள் முயலவேண்டும்.

காங்கிரஸ்வாதியாயிருந்த டாக்டர் நாயர் திடீரென ஒரு கட்சியைத் தோற்றுவிக்கக் காரணங்களாய் நின்றவைகள் எவைகளோ? அவைகள் இன்னும் நிற்கின்றனவா, இல்லையா? என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக.

அக்காரணங்கள் அழிந்துவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அவைகள் தமிழ்நாட்டில் ஊர்ந்து கொண்டிருக்கும்வரை தமிழ்நாட்டில் பிராமணர், பிராமணரல்லாதார் ஒற்றுமை நிலவுதலரிதே. தேச சேவையில் ஈடுபட்டுத் தமிழ்நாட்டுக் காங்கிரசில் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்து பெற்ற அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே நான் இங்கே பேசுகிறேன்”

(“நவசக்தி”,1924 நவம்பர் 21)

இதனாலும் - பார்ப்பனரல்லாதாரின் நிலை எப்பொழுதுமே இவர் கருத்தைக் கவர்ந்து வந்ததென்பதை அறியலாம்.

1925 நவம்பர் மாதத்தில் காஞ்சீபுரத்தில் தமிழ் மாகாண மாநாடு நடைபெற்றது. திரு.வி.க. முதலியார் அம்மாநாட்டின் தலைவர். அம் மாநாட்டில் ஈ.வெ.ரா.வின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. தீர்மானம் தலைவரால் நிராகரிக்கப்பட்டது என்று முன்னமே கூறினோம். அப்பொழுதுதான், “காங்கிரசால் பார்ப்பனரல்லாதார் நன்மை பெறமுடியாது; “காங்கிரசை ஒழிப்பதே இனி எனது வேலை” என்று மாநாட்டிலேயே எழுந்து கூறிவிட்டு வெளியேறினார். உடனே ஒரு பெருங்கூட்டம் அவருடன் மாநாட்டைவிட்டு வெளியேறிவிட்டது.

காஞ்சி மாநாட்டின்போது, அங்கேயே ஈ.வெ.ரா.வின் முயற்சியால் ஒரு பார்ப்பனரல்லாதார் மாநாடு கூட்டப்பட்டது. அதன் தலைவர் கோவை திரு.T.A. ராமலிங்க செட்டியார். செட்டியாரைத் தலைமைதாங்கும்படி கூறியபோது ஈ.வெ.ரா.:-

“தேசத்தில் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற தனிப்பட்ட கட்சிகள் தோன்றிப் பிணக்குறுவது

## தியாகரராயரும், செய்தித் தாள்களும்!



*சர். பிட்டி. தியாகராயர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தினச் செய்தித் தாள்களை அச்சிட்டு வெளியிட்டார்.*

*‘ஜஸ்டிஸ்’ என்ற பெயரில் ஆங்கில செய்தித் தாளை 1917 பிப்ரவரி 26 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண். எம்.1263. ‘ஜஸ்டிஸ்’ என்ற ஆங்கில இதழின் பெயரின் காரணமாக சௌத் இந்தியன் லிபரல் பெடரேஷனானது ஆங்கிலத்தில் “ஜஸ்டிஸ் பார்ட்டி” என்றும், தமிழில் “நீதிக்கட்சி” என்றும் அழைக்கப்படலாயிற்று.*

*1885இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி “திராவிட பாண்டியன்” என்ற ஒரு தமிழ்ச் செய்தித்தாளை வெளியிட்டார். அதே நோக்கில்தான் சர்.பிட்டி. தியாகராயரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் கருதி 1917 ஜூன் 1 சனிக்கிழமை ‘திராவிடன்’ என்ற பெயரில் தமிழ் தினச்செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்.எம்.1279.*

*1885இல், தெலுங்கு மொழியில் ‘ஆந்திர பிரகாசிகா’ என்ற செய்தித்தாள் வெளிவந்தது. சர்.பிட்டி. தியாகராயர் அதே தெலுங்கு செய்தித் தாளை 1917 ஜூன் 10 திங்கட்கிழமையிலிருந்து அச்சிட்டு தினச் செய்தித்தாளாக வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1280.*

அனைவரும் அறிந்த ஒரு விஷயமேயாகும். இவ்வாறு பிரிவினை இல்லையென்று எவ்வளவுதான மூடிவைத்த போதிலும், காங்கிரசிலுங்கூட இத்தகைய பேதம் உண்டென்பதை யாரும் மறுக்கமுடியாது. பிராமணர், பிராமணரல்லாதார் பிரிவினை இல்லை என்பது உலகிலுள்ள புண்ணை மூடிவைத்து அழுகவிடுவதற்கு ஒப்பாகும். அதற்கேற்ற பரிகாரம் செய்து, உடல் நலத்தைக் கெடுக்கும் புண்ணை ஆற்ற முயல்வதே போது நோக்குடைய அறிஞர் கடமையாகும்''.

- என்று கூறினார். இது ஈ.வெ.ரா.வின் அக்காலக் கொள்கையையும் உணர்ச்சியையும் காட்டுகின்றதன்றோ ?

1925ஆம் ஆண்டு வரையிலும் ஈ.வெ.ரா.உண்மையான காங்கிரசுக்காரராகவே இருந்தார். ஒரு தீவிரமான ஒத்துழையாதாரராகவும் இருந்தார்.

காங்கிரசின் ஆதரவு கொண்டே ஜாதி வேற்றுமையை நிலைநிறுத்தவும் வருணாச்சிரமத்தை ஏற்படுத்தவும் சுயராஜ்யக் கட்சியின்மூலம், பார்ப்பனரல்லாதார் கட்சியையும் அவர்களது தேவைகளையும் ஒழிக்கவும், காங்கிரசிலுள்ள பார்ப்பனர்கள் அனைவரும் ஒன்றுகூடி முயற்சி செய்தார்கள். இதைச் சந்தேகமற உள்ளிருந்து உணர்ந்துகொண்டதே ஈ.வெ.ரா.காங்கிரசைவிட்டு விலகியதற்கு முதற்காரணமென்று கூறலாம்.

கதர்போர்டு நிர்வாகத்திலும் ஈ.வெ.ரா.வே தலைவராக இருந்தபோதிலும், கே. சந்தானம் என்கின்ற ஒரு பார்ப்பனர் காரியதரிசியாக இருந்ததால், அதில் பார்ப்பனர்களே மிகுதியாக இருந்து வந்ததும் அதன் வருவாய் முழுவதும், அதற்காகச் செலவிடும் பொருளும், பெரும்பாலும் பார்ப்பனர்களுக்கே பயன்பட்டு வந்ததும் இவருக்குப் பிடிக்கவில்லை. அதற்காகச் செய்த பல போராட்டங்களில் காந்தியார் தலையிட்டதால் ஈ.வெ.ரா. வெற்றிபெற முடியாமல் போனதும் இவர் விலகியதற்கு மற்றொரு காரணமென்று சொல்லலாம்.

இந்நிலையில் 1926ஆம் ஆண்டு நவம்பரில் சென்னை சட்டசபைக்குப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் ஈ.வெ.ரா.வெளிப்படையாக எக்கட்சியினரையும் ஆதரிக்கவில்லை. நல்ல திறமையுடைவர்கள், பார்ப்பனரல்லாதார் நன்மைக்குப் பாடுபடுகிறவர்கள், தன்னலமின்றிப் பொதுநலத்துக்கு உழைக்கும் உண்மைக் கருத்துடையவர்கள்-இவர்கள் சட்டசபைக்குச் செல்லும் தகுதியுடைவர்கள். இத்தகையவர்களையே வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பது இவருடைய கருத்து.

இதையே சொற்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் வெளியிட்டு வந்தார். இச்சமயம் ஒத்துழையாதார் என்று சொல்லிக்கொண்டிருந்த திரு.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சுயராஜ்யக் கட்சியின் வெற்றிக்காக மறைமுகமாக வேலை செய்துவருவதாக ஈ.வெ.ரா.அறிந்தார். பார்ப்பனரல்லாதார் கட்சியைத் தொலைத்துவிட்டுச் சுயராஜ்யக்கட்சியின் பேரால் பார்ப்பனர்கள் மந்திரிப்பதவிகளில் அமரவேண்டும் என்பதற்காகவே அவர் இவ்வாறு செய்கிறார் என்றும் தெரிந்தார். ''பார்ப்பனர்கள் எப்பொழுதும் தங்கள் வகுப்பு நலத்தையேதான் நாடுவார்கள்'' என்னும் உண்மையை இப்பொழுதுதான் ஈ.வெ.ரா.நன்கு உணர்ந்தார். ''அரசியலில் பார்ப்பனர்களை ஒருபொழுதும் நம்பாதீர்கள்'' என்னும் சர்.பி.தியாகராயரின் மொழியின் உண்மையை உணர்ந்தார். இனி பார்ப்பனரல்லாதார் நன்மைக்கே உழைப்பதென்று உறுதிகொண்டார்.

தாம் எடுத்துக்கொண்ட செயலை இடையில் விட்டுவிடுந்தன்மை ஈ.வெ.ரா.விடம் இல்லை. வெற்றி காணும் வரை உழைப்பார். இவ்வுறுதியில் இவருக்கிணை எவரும் இலர். இவர் காங்கிரசில் இருந்தபோதே இவரே காங்கிரஸ்; காங்கிரசே இவர். இவர் வீட்டிலேயே காங்கிரஸ் ஸ்தாபனமிருக்கும். இதுபோலவே எந்த ஸ்தாபனத்தில், எந்த இயக்கத்தில் இருந்து உண்மையாகத் தொண்டாற்றப் புறப்பட்டாலும் அந்த ஸ்தாபனத்தையே தம்முடையதாக்கிக்கொள்வார். அவரே இயக்கமாக ஆகிவிடுவார். இது அவரது இயற்கைக் குணம்.

. காங்கிரசின் கட்டளைப்படிப் பலமுறை சிறைபுகுந்தார். மற்றவர்களும் சிறை புகுவதற்கு இவரே வழிகாட்டினார். பல மாநாடுகளில் தலைமை தாங்கினார். எல்லா மாநாடுகளுக்கும் தவறாமல் சென்று வருவார். நாகம்மையாரையும் உடன்கூட்டிச் செல்வார். ஒவ்வொரு அகில இந்தியக் காங்கிரசுக்கும் மனைவியுடன் சென்று வந்தார்.

இவ்வளவு தியாகஞ் செய்தவர்கள் இன்றைய காங்கிரசில் எவருமே இலர்!

*- சாமி சிதம்பரனார் எழுதிய*
*'தமிழர் தலைவர்' என்ற நூலிலிருந்து.*

## அம்பேத்கரின் பொன்மொழிகள்

★ அரசாங்கமானது,
பெரும்பான்மையினரால்
அமைக்கப்பட்டு,
சிறுபான்மையினரின்
ஒத்துழைப்பையும், சம்மதத்தையும்
பெற்று நடைபெறுவதே
சுயராஜ்ஜியத்தின் அர்த்தம்
ஆகும். அத்தகைய
ஜனநாயகத்தை நான்
வரவேற்பேன்.

★ அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக்கொண்டு தீயவைகளை நிராகரித்து முன்னேற முயலுகின்றன.

★ சீரிய இலட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்!

★ அரசியல் கொடுமையைவிடச் சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே, அரசியல் கொடுமையைவிடச் சமூகக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்வாதியே அதி தைரியசாலி ஆவான்.

# அரசு இயந்திரம் எள் என்பதற்கு முன் எண்ணெயாக, வருமுன் காப்போனாக இருக்க வேண்டும்!

**- மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முதல்வர் ஆணை**

**மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் 2.9.97 அன்று, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**

நாம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மக்களுக்கு நிர்வாக அமைப்பின்மீது ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளோம் என்று மகிழ்ச்சி அடையலாம். இருந்தபோதிலும், இத்துடன் நாம் மெத்தனமாக இருந்துவிட முடியாது. இந்தியாவில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலங்களிடையே மீண்டும் நிலைநிறுத்த மாபெரும் பணியினைத் தன்னடக்கத்துடனும், கட்டுக்கோப்புடனும் செயல்படுத்த நாம் முனைந்துள்ளோம். இதே ஈடுபாட்டுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றேன்.

பணிகளின் தன்மை சிறப்பாக அமையவேண்டும். வேகமாகச் செயல்படும் கட்டத்தில் எக்காரணத்தைக் கொண்டும் பணிகளின் தரத்தில் குறை ஏற்படாமல் கண்காணிக்க வேண்டும். இது அனைத்துத் துறைகளின் பணிகளுக்கும் பொருந்தும். நிதி ஒதுக்கீடுகள் மட்டும் செலவிடப்பட்டு, தரக் குறைவான பணிகளைச் செய்வது முன்பு இருந்த வழக்கம். அதனை அறவே நீக்கி, வேகமும் தரமும் (*Speed and Quality*) ஒரு சேர உறுதியாக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் எதிர்பார்ப்பு.

கடுமையான உழைப்பின் வாயிலாகத்தான் ஒரு நிர்வாக இயந்திரம் சிறப்பாகச் செயல்பட முடியும். எதுவும் மாறுவதற்கு வாய்ப்பில்லை என்ற மெத்தனப்போக்கு சில அதிகாரிகளிடம் இன்னமும் இருப்பது விரும்பத்தக்கதல்ல. மேல் மட்டத்திலுள்ள அலுவலர்கள் இதனைக் கூர்ந்து கவனித்து உடனடியாகக் களைந்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**வரலாற்றிலே வளர்ச்சி**

நிர்வாகத்தை எல்லா நிலைகளிலும் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, 1996 அக்டோபர் திங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்கள் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளன. அதே நேரத்தில் மாநிலத் திட்டக் குழுவின் முதல் அறிக்கையின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. நிதி ஆதாரங்கள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளித்ததன் மூலம், வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை உள்ளாட்சி அமைப்புகள் அடைந்துள்ளன.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையின் பரிந்துரையின்படி, மேலும் அதிகாரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் மாவட்டத் திட்டக்குழு ஆகியவற்றிற்கு மேலும் அதிகப் பொறுப்புகள் வழங்குவது குறித்து ஆய்வுசெய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்குப் பரிந்துரைக்க உள்ளாட்சித்துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்டு பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு ஏற்படுத்திட அரசு முடிவு எடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த அரசு எடுத்த முடிவுகளுக்கு ஏற்ப, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கிச் செயலாற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிசெய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**வறட்சி நிவாரணப்பணிகள்**

இவ்வாண்டு ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய தமிழ்நாட்டின் தென்பகுதியில் மழையின் அளவு இயல்பைக் காட்டிலும் குறைவு என்ற நிலையில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஏற்கெனவே வறட்சி நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட ரூ.16 கோடி செலவிடப்பட்டிருந்தாலும், இன்னும் பல கிராமங்களில் குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்ற புகார்கள் பத்திரிகைகளிலும், மக்கள் பிரதிநிதிகள் மூலமும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. அடுத்த பருவ மழை பெய்து குடிநீர்த் தட்டுப்பாடு தீரும் வரையில், நாம்



விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியம். தேவைப்படும் இடங்களில் லாரிகளின் மூலமும் குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதை ஒழுங்குறச் செயற்படுத்த வேண்டியுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் குடிதண்ணீர் மற்றும் பயிரின் நிலை எவ்வாறு உள்ளது என்பதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துரைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் மாவட்டங்களில் வறட்சிக்கான அறிகுறிகள் தென்படுமேயானால் போர்க்கால அடிப்படையில் வறட்சி நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உங்கள் மாவட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு தேவை என்று நீங்கள் எடுத்துரைக்கும் அதே வேளையில் எவ்வளவு விரைவில் இப்பணிகள் உங்கள் மாவட்டத்தில் முடிக்கப்படும் என்பதையும் நீங்கள் கணக்கிட்டுக் கூறவேண்டும். வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளையும் நீங்கள் கூறலாம். வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்தமட்டில் அரசு இயந்திரம் எள் என்பதற்குமுன் எண்ணெயாக, வருமுன் காப்போனாக இருக்கும் என்பதை நீங்கள் செயலில் காட்டவேண்டும்.

> "தெரு விளக்குகள் போடுவது பற்றி பேசப்பட்டு, அதற்கான மனுக்களை செப்டம்பர் திங்கள் 30ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டுமென்றும், அந்தப் பணிகள் அனைத்தும் 31.3.98க்குள் முடிக்கப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது."

தற்போது உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் ஒரு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் கைப்பம்புகள் மற்றும் முப்பதினாயிரத்து எண்ணூறு விசைப் பம்புகளைச் செம்மையாகப் பராமரிக்க வேண்டும். இவைகளை பழுதுபார்க்க உள்ளாட்சித் தலைவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்குத் தாமதமின்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் முழுமையான பயன் கிடைத்திட ஒரு சிறப்பு ஆய்வு செய்யத் திட்டமிட்டுள்ளேன்.

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் போதுமான குடிநீர் வழங்க ஒரு பெருந்திட்டத்தை இந்த அரசு தீட்டியுள்ளது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒரு நாளைக்கு ஒருவருக்கு 10 லிட்டர் குடிநீருக்கும் குறைவாகக் கிடைக்கும் பகுதியில் வசிக்கின்ற மக்களுக்குத் தலா 40 லிட்டர் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்ற இந்த அரசின் நோக்கத்தை நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

இரண்டு ஆண்டுகளில் 10,000 குடியிருப்புகளுக்கு இந்தச் சிறப்புத் திட்டத்தின் வாயிலாகக் குடிநீர் வழங்க வேண்டும். இந்தக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க நீர் ஆதாரங்களை உருவாக்கக் குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நான் அறிவேன். இந்த 10,000 குடியிருப்புகளில், 4,500 குடியிருப்புகளுக்கு நடப்பு ஆண்டிலேயே குடிநீர் வழங்க வேண்டும். இவைகளுக்கான திட்ட மதிப்பீட்டைத் தயாரிப்பதிலும் திட்டப்பணிகளைச் செயல்படுத்த சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒப்படை செய்வதிலும் விரைவாகச் செயல்பட வேண்டும்.

### பணிகளின் முன்னேற்றம்

'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' தேர்ந்தெடுக்கப்பட்ட சில கிராமங்கள், அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று முன்னோடி கிராமங்களாக திகழவேண்டும் என்பதற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கும் 'நமக்கு நாமே' திட்டத்திற்கும் எவ்வளவு முக்கியத்துவம் இந்த அரசு தருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்தபடி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, அடிப்படை மருத்துவ வசதி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுவசதி, ஏழைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு, ஒவ்வொரு கிராமத்திற்கும் நியாய விலைக்கடை, கட்டாய ஆரம்பக்கல்வி, கிராமங்கள் அனைத்திற்கும் சாலை வசதி ஆகிய குறைந்தபட்ச ஏழு அடிப்படை வசதிகளை அளிப்பதுதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தலையாய குறிக்கோள் என்பது உங்களுக்குத் தெரியும்.

ஜூலை மாதத்தில் நான் வேலூர் மாவட்டம் பொன்னை கிராமத்தில் துவக்கிவைத்த பின்னர் இதுவரை 52 கிராமங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக நீங்கள் அறிக்கை அனுப்பியுள்ளீர்கள். இத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட மற்ற கிராமங்களில் உடனடியாகப் பணிகள் தொடங்கப்பெற வேண்டும். தொடங்கப்பட்ட பணிகளில் முன்னேற்றம் எந்த அளவிற்கு உள்ளது என்பதையும் தெரிவிக்கவேண்டும்.

இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மற்றொரு புதிய திட்டம் "நமக்கு நாமே" திட்டம். இதை ஒரு திட்டம் என்று சொல்லுவதைவிட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான புதிய அணுகுமுறை என்றே நான் கருதுவேன். திட்டங்களில் மக்கள் பங்கு பெறுவது



இல்லை; மக்கள் கலந்தாலோசிக்கப்படுவதில்லை; அரசு அதிகாரிகள் கிராம மக்களுக்கு இதுதான் தேவை என்று தாங்களே ஊகித்து அத்தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலைதான் இன்றளவும் உள்ள நிலை. பல நேரங்களில் மக்கள் எதிர்பார்க்கின்ற முக்கியமான தேவை, அரசு அதிகாரிகளின் நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாமல் போய்விடலாம். இந்த நிலையை மாற்றி ஊர்மக்கள் மன்றம் முறையாகக் கூடி தங்கள் தேவைகளைப் பற்றி விவாதித்து ஒருமித்த முடிவுகள் எடுப்பதற்கான வாய்ப்பு அளிப்பது ''நமக்கு நாமே'' திட்டத்தின் நோக்கம். இதன்மூலம் ஊர்மக்கள் அனைவரும் திட்டமிடுவதிலும் செயலாற்றுவதிலும் பங்குபெறுகிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்த முடியும்.

இந்த ''நமக்கு நாமே'' திட்டத்திற்குச் சிறப்பு ஒதுக்கீடாக ரூ.5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**நெல் கொள்முதல் செய்வது பற்றி விவாதிக்கப்பட்டது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையை விட குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் மாநில அரசு அதிகமாக விலை நிர்ணயித்திருப்பதை விவசாயிகள் வரவேற்பதாகவும், இணைக் கொள்முதல் அனைத்து மாவட்டங்களிலும் திருப்திகரமாக நடைபெற்றுவருவதாகவும் கூறப்பட்டது. நெல் கொள்முதல் செய்யும்போது கிரேட் கட் (தரத்திற்குத்தகுந்தாற்போல் குறைப்பது) குறுவைக்கு 15 ரூபாயும், சம்பாவிற்கு 5 ரூபாயும் குறைப்பது வழக்கம் என்று அதிகாரிகள் தெரிவித்த போதிலும், விவசாயிகளின் நலனைக் கருத்திலே கொண்டு இந்த ஆண்டு குறுவைக்கும் கிரேட் கட் ஐந்து ரூபாய் அளவிற்கே இருந்தால் போதுமானது என்று இறுதியாக முடிவெடுக்கப்பட்டது.**

### கடந்த கால ரணங்கள்

தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும். அவர்களுடைய குடியியல் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். வகுப்புக் கலவரங்கள் நடக்கும் போதெல்லாம் ஒடுக்கப்பட்டவர்கள் மீதுதான் வன்முறை வெறியாட்டங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அவர்களுடைய குடியியல் உரிமையைப் பாதுகாப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முழு உத்திரவாதம் அளிக்கவேண்டும். ஏற்கெனவே கடந்த கால ரணங்கள், தழும்புகளாக மாறி நிற்கின்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைப் போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட இடங்களில் வகுப்புக் கலவரங்கள் தொடராமல் இருக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். அந்தப் பகுதியின் அருகிலேயே மென்மையான நரம்பு மண்டலமாய், பாதிப்புக்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ள சுற்றுப்புற கிராமங்களில் வகுப்புக் கலவரங்கள் நடைபெறாமல் இருக்க எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### சமத்துவபுரம்

இந்தியா சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் நிறைவுற்று பொன்விழா கொண்டாடும் இந்த ஆண்டில் சாதிச் சண்டைகளை ஒழித்து சமத்துவ சமுதாயம் அமைத்து மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல சமத்துவபுரங்களை உருவாக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது உங்களுக்குத் தெரியும்.

சமத்துவபுரம் திட்டத்தின்கீழ், 50 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு கிராமத்திற்கு 100 வீடுகள் அமைத்து அங்கு பல்வேறு சாதிகளைச் சார்ந்த மக்கள் நட்புடனும், அமைதியாகவும் அன்போடும் வாழ வழிவகைகள் செய்யப்படும். 3 சென்டு பரப்பில் அமைக்கப்படும் சாதாரணமான வீடுகளைப் போல் அல்லாமல் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வீடுகள் 5 சென்டு பரப்புடைய மனையில் அமையும். இந்தத் திட்டத்தில் வீடு கட்டுவதற்கு மானியமாக ரூ.35,000 வழங்கப்படும். அதே மனையில் தங்கள் விருப்பத்திற்கேற்ப வீடுகளைக் கட்டுவதற்காகத் தேவையான கடனும் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து அரசு பெற்றுத்தரும். ஐம்பது கோடி ரூபாய் செலவாகும் இத்திட்டத்திற்கு முதல்கட்டமாக ரூபாய் பத்து கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தினை வெற்றிகரமான முறையில் அமல்படுத்துவதற்கு உறுதியளிக்கும் வகையில் கிராமங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

நாம் ஆதிதிராவிட மக்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். இத்திட்டங்களைச்



செயல்படுத்துவதில் தரமான முன்னேற்றத்தினை உறுதிசெய்யும் அளவில் நம் முயற்சிகள் அமைய வேண்டும்.

## நல்லிணக்கக் குழுக்கள்

அமைதியை உருவாக்கவும் அமைதி கெடக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தடுத்திடவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கோட்டவாரியாக நல்லிணக்கக் குழுக்கள் அமைக்கப்படும் என்று நான் 31.8.1997 அன்று மதுரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் அறிவித்திருக்கின்றேன். அந்த அறிவிப்பினை உடனடியாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் பழங்குடியினர் குடியிருப்புகள் அனைத்திற்கும் படிப்படியாக மூன்று ஆண்டுகளில் அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முடிவு செய்துள்ளது.

**நியாய விலைக் கடைகளுக்குக் கொண்டுவரப்படும் பண்டங்களில் தற்போது எடைக்குறைவு குறித்து பொதுவாக ஒரு புகார் கூறப்பட்டு வருவதாகவும், அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து அந்தப் புகார் வராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.**

இன்னும் பதினைந்து நாட்களில் உங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து பழங்குடிகளின் குடியிருப்புகளிலும் அடிப்படை கணக்கெடுப்பு (Bench Mark Survey) நடத்தி எந்தெந்த குடியிருப்புகளுக்கு என்னென்ன வசதிகள் தேவைப்படுகின்றன, எந்தெந்தக் குடியிருப்புகளில் இவ்வாண்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், இத்திட்டத்திற்கு எவ்வளவு நிதியாதாரம் தேவை என்பதை அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும்-மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதியிலுள்ள குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்துதரும் திட்டத்திற்கென்று ரூ.38.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணையும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தையும் எவ்வாறு நன்முறையில் நிறைவேற்றுவது என்பதைப் பற்றி இக்கூட்டத்திலே கலந்தாலோசிக்கலாம்.

## திருமண நிதியுதவி

சமூக நலத்திட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக திருமண நிதி உதவித் திட்டங்களுக்கு இந்த அரசு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகப் பெண்களின் திருமணம் இடையூறுகளைச் சந்திக்கலாகாது என்ற உயரிய எண்ணத்தின் காரணமாகவே பல்வேறு திருமண திட்டங்களை நாம் தீட்டியிருக்கின்றோம். மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையார் நினைவாக அமைந்துள்ள திருமண உதவித் திட்டத்திற்கென்றே 1997-98ஆம் ஆண்டுகளுக்கு மட்டும் 46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இத்திட்டத்தில் பயனடைவோர் என்னைச் சந்திக்கும்போதெல்லாம் ஒரே ஒரு குறையைத்தான் சொல்கிறார்கள். திருமணம் முடிந்து நெடுநாட்கள் கழிந்த பிறகே இந்நிதியுதவி தங்களுக்குக் கிடைக்கின்றது என்பதுதான் அது. இக்குறை களையப்பட்டு திருமணத்திற்கு முன்பாகவே, முடிந்தால் அரசின் சார்பில் ஓர் அலுவலரோ, மக்கள் பிரதிநிதிகளோ நேரில் சென்று திருமண வாழ்த்து வழங்கி நிதியுதவியையும் வழங்கினால் மிகச் சிறப்பாக இருக்கும்.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அதற்காகக் கூடுதல் நிதியாதாரம் திரட்டியாவது இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் நான் பொதுமக்களிடம் நன்கொடை கோரி வெளியிட்ட அறிவிப்பினைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். இந்தத் திட்டத்தின் சிறப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டுகிறேன்.

1972ஆம் ஆண்டு இந்த அரசு ஆட்சியில் இருந்தபோது 1500க்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புத் தார்ச் சாலைகள் அமைக்கும் திட்டத்தைத் தொடங்கியது. அடுத்தகட்ட முயற்சியாக, ஆயிரம் பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கவும் 1990ஆம் ஆண்டு கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இவற்றில் மீதமுள்ள 517 கிராமங்களில் 108 கிராமங்களுக்கு இந்த ஆண்டிலும், எஞ்சிய 409 கிராமங்களுக்கு 1998-99ஆம் ஆண்டிலும் இணைப்புச் சாலைகள் போடப்படவுள்ளன.

ஜூலை மாத இறுதிவரையில் இந்நிதியாண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டில் 17.5 விழுக்காடு செலவிடப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டுகளில், முதல் நான்கு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் செலவினம் சற்று அதிகமாகவே



இருந்தாலும், இச்செலவினம் என் எதிர்பார்ப்பிற்கும் குறைவாகவே உள்ளது. பெரும்பாலான திட்டப்பணிகளை டிசம்பர் மாதத்திற்கு முன்பாகவே நிறைவேற்றி முடிப்பது நமது குறிக்கோளாக இருக்கவேண்டும்.

மக்கள் நலனுக்காகப் பல திட்டங்களைத் தீட்டி அரசு செயல்படுத்துவதுபற்றிய தகவல்கள் பொதுமக்களுக்குச் சென்றடைவதில்லை. தகவல் தெரிந்தால்தான் உள்ளூர் அளவில் அரசின் திட்டங்களை மக்கள் கண்காணிப்பதற்கும் திட்டங்களில் ஊர்மக்கள் ஈடுபாடு காட்டுவதற்கும் திட்டப் பணிகளின் பயன்களை மக்கள் முழுமையாக அடைவதற்கும் ஏதுவாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத்தில் பல்வேறு துறைகள் மூலமாக இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்பட இருக்கும் திட்டங்கள், ஒதுக்கீடு, பணிகள் முன்னேற்றம் போன்றவற்றை அடிக்கடி பத்திரிகையாளர்கள் கூட்டத்தை நடத்தி விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

**போக்குவரத்து வசதி பெறாத கிராமப்புறப் பகுதிகளுக்குத் தனியார் சிறிய பேருந்துகளை (VANS) இயக்குவது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு போக்குவரத்துப்பேருந்துகள் ஓடாமல் இப்படிப்பட்ட இடங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பது குறித்து ஒரு வாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விவரங்களைத் தொகுத்து வரைபடத்துடன் அரசுக்கு அனுப்பும்படி கூறப்பட்டது.**

### முதல்வர் நிறைவுரை (3.9.97)

2.9.97, 3.9.97 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வறட்சி நிலவரம் வறட்சி நிவாரணம், குடிநீர் வழங்கல், சமூக நலத் திட்டங்கள்-குறிப்பாகத் திருமண உதவித் திட்டங்கள், 'சமத்துவபுரம்' அமைத்தல், மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென பொருளாதார மேம்பாட்டுக் கழகச் செயல்பாடுகள், உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றுதல், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், தொகுப்பு வீடுகள் திட்டம், பொது விநியோக முறை, நியாயவிலைக் கடைகள், சாலைப் பணிகள், பேருந்து வசதிகள், திட்டப் பணிகளின் முன்னேற்றம் ஆகிய பொருள்கள் பற்றி விரிவாக விவாதம் நடைபெற்றது. குறிப்பாக வறட்சி நிவாரணப் பணிகள் பற்றி விரிவான விவாதம் நடைபெற்றது.

### குடிநீர்ப் பிரச்சினை - உடனடி நடவடிக்கை:

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உடனடி நடவடிக்கையாகவும், நீண்டகால நடவடிக்கையாகவும் அரசுக்கு அனுப்பியுள்ள பல முன்மொழிவுகளைப் பற்றிக் கூறினார்கள். வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பிய கோரிக்கைகள் எல்லாம் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டதோடு குடிநீர்ப் பிரச்சினை எதுவும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இயற்கையை எதிர்த்து நின்று இப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டுமென்றும் குடிநீர்ப் பிரச்சினையிலே நிதி நிலவரம் பற்றிக் கவலைப்படாமல், மக்களுக்குக் குடிநீர் இல்லை என்ற நிலைமை வராது பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆணையினை எதிர்நோக்கி அதற்காகக் காத்துக் கொண்டிராமல் மக்களுக்கு உடனடியாக குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும், மக்கள் பிரதிநிதிகளிடம் அடிக்கடி தொடர்புகொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

### கலப்புத் திருமணத் திட்ட உதவி:

அடுத்து, தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் கூறப்பட்ட கலப்புத் திருமணத் திட்டம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. மணமகனோ அல்லது மணமகளோ - இருவரில் ஒருவர் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அந்தக் கலப்புத் திருமணத்திற்கு இருபதாயிரம் ரூபாய் உதவி நிதியாக வழங்கலாம் என்பது குறித்து விவாதிக்கப்பட்டு, இதில் எந்தவிதமான வருமான உச்சவரம்பும் நிர்ணயிக்கக்கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது.

### 15 நாட்களில் திருமணத் திட்ட உதவி:

மேலும் மூவலூர் மூதாட்டியார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்காக வரக்கூடிய மனுக்களைப்





பரிசீலிப்பதில் எந்தவிதமான காலதாமதமும் செய்யக்கூடாது என்றும், இந்தப் பணத்தினை வழங்கும்போது இடையிலே யாராவது இடைத் தரகர்கள் ஆதாயம் பெற முனைந்தால் அது பற்றி உடனடியாக அரசாங்கத்திற்குத் தகவல் தெரிவிக்கலாம் என்றும், இத்திட்டத்தினை மேலும் செம்மையாக நடத்திட மாவட்ட அளவில் உள்ள சமூக நலத்துறையும், வருவாய்த் துறையும் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. திருமண உதவிக்காகத் தரப்படும் மனுக்கள் 15 நாட்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டுமென்றும், திருமண உதவித் திட்டத்திற்கு இனி எவ்விதமான எண்ணிக்கை உச்சவரம்பும் இல்லாமல், வரக்கூடிய அத்தனை மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு உதவி அளிக்கப்பட வேண்டுமென்றும், அதற்காகத்தான் திருமண உதவித் திட்டத்திற்காகத் தனிப்பட்டவர்களிடமிருந்து நன்கொடை கோரப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் விளக்கப்பட்டது.

**கிராமப்புற மருத்துவமனைகளுக்கு வராமல் அலட்சியப்படுத்துகிற மருத்துவர்களைப் பற்றிய புகார்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனுக்குடன் தலைமைச் செயலகத்துக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அது வாய்ப்பாக இருக்குமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

திருமண உதவி கேட்டு பெறப்பட்ட மனுக்களின் நிலை குறித்த அறிவிப்புப் பலகை ஒன்றைச் சம்பந்தப்பட்ட அலுவலகத்தின்முன் மக்கள் தெரிந்துகொள்ளும்படி வைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.

### சமத்துவபுரம்

அடுத்து, 'சமத்துவபுரம்' பற்றி விரிவாகப் பேசப்பட்டது. சமத்துவபுரங்களில் அமைக்கப்படும் நூறு வீடுகளில் கணிசமான விகிதாசார வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்றும், மீதமுள்ள வீடுகள் மற்ற சமுதாயத்தினருக்கும் ஒதுக்கப்பட வேண்டுமென்றும், இந்தக் குடியிருப்பினை வேண்டுவோருக்கு எந்தவிதமான வருமான வரம்பும் விதிக்கத் தேவையில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டது. சமத்துவபுரம் அமைப்பதற்குத் தேவையான நிலம் எடுப்பதிலே காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக நிலத்தை விரும்பித் தர முன்வருபவர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் நிலத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேலும் அரசு புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அவைகளையே இதற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் விரைவில் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

### தீண்டாமை ஒழிப்பு நல்லிணக்கக் குழுக்கள்:

தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்துகின்ற அளவிற்கு மதுரை மாநாட்டில் அறிவித்ததற்கிணங்க ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு நல்லிணக்கக் குழு உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்றும், அக்குழுவில் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சமயச் சான்றோர்கள், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த முக்கியப் பிரதிநிதிகள், இதர சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்/நகராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் இடம்பெற வேண்டுமென்றும் கூறப்பட்டது. இளமையிலேயே சமத்துவ உணர்வையும், மனிதநேயத்தையும் உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் பள்ளிகளிலே வாரம் ஒரு முறை மாணவர்கள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

### மலைவாழ் பழங்குடியினர் குடியிருப்புகள் வசதி:

பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளில் சாலை வசதிகள் ஏற்படுத்துவது பற்றி தலைமைச் செயலாளர், துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி ஆவன செய்ய வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் சாலை வசதி அமைக்க எந்தெந்த இடங்களில் வனத்துறையினரின் முன் அனுமதி தேவையில்லையோ அந்த இடங்களில் பணிகளை உடனடியாகத் துவக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. எந்தெந்த இடங்களில் வனத்துறையின் அனுமதி தேவையோ அந்த இடங்களில் மட்டும் மத்திய அரசின் அனுமதியைக் கோரலாம் என்றும், மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு முன்பாக மத்திய சட்டத்தின்கீழ் உள்ள விதிகளின்படி குறிப்பிட்ட படிவத்தில் மாவட்ட வன அதிகாரிகளுடைய பரிந்துரைகளை அனுப்ப வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும், அரசு மட்டத்தில் வனத்துறை, பொதுப்பணித் துறை, எரிசக்தித் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை செயலாளர்கள் ஒரு ஒருங்கிணைப்புக் கூட்டத்தினை நடத்தி இந்தப் பணிகளை விரைவுபடுத்த எப்படி மைய அரசின் அனுமதியைப் பெற வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

### வீட்டுமனைப் பட்டா வழங்கல் விரைவுபடுத்தப்படும்

வீட்டு மனைப்பட்டா தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வழங்குவதில் போதிய முன்னேற்றம் இல்லாததற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் விளக்கம் கேட்கப்பட்டது. அந்தப் பொறுப்புக்கு வரும் துணை ஆட்சியர்கள் அந்தப் பொறுப்பிலே நீடிக்காமல் விடுமுறையில் சென்று விடுவதால் இப்பணி தாமதமாவதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்தனர்.

எனவே - துணை ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு முன்பு

குறைந்தபட்சம் ஓராண்டுக் காலமாவது ஆதிதிராவிடர் நலத்துறை அல்லது மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலராக அவசியம் பணியாற்ற வேண்டுமென்று பணி விதிகளைத் திருத்துவது பற்றி தலைமைச் செயலாளர் ஆராய வேண்டுமென்று கூறப்பட்டது.

### ஆதிதிராவிட மாணவர்களுக்கு

சென்னையில் உள்ள ஆதிதிராவிட கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகளில் தனியார்கள் வந்து தங்குவதால் அங்கே தங்கியிருந்து பயிலும் மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை மனதிலே கொண்டு அந்த விடுதிகளில் உணவு வழங்குதல் பரீட்சார்த்த முறையிலே ஒப்பந்த அடிப்படையிலே விடலாமா என்பது பற்றி துறை பரிசீலிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

### பிற்படுத்தப்பட்டோர்க்கு

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நடத்தப்படும் விடுதிகளில் தரப்படும் உணவுக் கட்டண அளவிற்குப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை மூலம் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தையும் உயர்த்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத்திலே பேதம் இருக்கக் கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக நடத்தப்படும் ஒட்டுநர் பயிற்சியில், பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 200லிருந்து 2000ஆக உயர்த்தப்படலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதுவரை ஒரு பட்டதாரி கூட இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த பல்தொழில் பயிற்சி பட்டயப் படிப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்கு 1997-98 முதல் இலவசக் கல்வி வழங்கப்படும் என்று ஏற்கெனவே இருந்த எண்ணிக்கையை இரண்டாயிரம் மாணவர்களாக உயர்த்துவதென்று முடிவெடுக்கப்பட்டது.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அடுத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். தொடங்கப்பட்ட இடங்களில் எல்லாம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் முறையாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்தார்கள். திட்டங்களை விழா எடுத்துத் தொடங்கி வைத்தால் மாத்திரம் போதாது என்றும், பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு திட்ட துவக்க விழாவிற்கும் முதலமைச்சரையே எதிர்பார்த்துக்கொண்டு காத்திராமல், மற்ற அமைச்சர்களைக் கொண்டு பணிகளைத் தொடங்கி விரைவில் முடிக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

திட்டங்களுக்கான பெயர்ப் பலகைகள் வைக்கும்போது அதன் கீழ் அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமம் என்று எழுதி வைப்பதோடு, பணிகள் எந்தத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகிறதோ - உதாரணமாக இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற அந்தப் பெயர்களையும் அவற்றுக்குரிய இடங்களில் எழுதப்பட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூறப்பட்டது.

### நமக்கு நாமே திட்டம்

நமக்கு நாமே திட்டம் குறித்து அடுத்து விவாதிக்கப்பட்டது. இத்திட்டத்திற்குப் பெரும் வரவேற்பு மக்கள் மத்தியிலே இருப்பதாகவும் உதாரணத்திற்கு 47 இலட்ச ரூபாய் மதிப்பீடுள்ள ஒரு திட்டத்திற்கு அரசிடமிருந்து எந்தவித நிதி உதவியும் பெறாமல், முழுச் செலவையும் ஒரு ஊர் மக்களே ஏற்றுக்கொண்டு செய்து முடித்திருப்பதாகவும் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார். இதுவரை ஏன் இப்படிப்பட்ட பணிகள் செய்யப்படவில்லை என்று கேட்டதற்கு, தூண்டுதற்கு யாரும் இல்லாததால் செய்யப்படவில்லை என்றும், தற்போது பொதுமக்கள் ஆர்வமாக முன்வந்து இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த உதவுகிறார்கள் என்றும் கூறப்பட்டது. உதவுவதற்கு முன்வந்த போதும் ஒரு சில கிராமங்களில் நிதி உதவியளிக்கப் பொதுமக்கள் வசதியற்ற நிலையிலே இருப்பதாகவும், அவர்கள் உழைப்பை இத்திட்டத்திற்கு அளிக்க முன்வருவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்ததின் பேரில், நமக்கு நாமே திட்டங்களுக்கு 25 சதவிகித அளவிற்குக் குறையாத நிதியைப் பணமாகவோ அல்லது உழைப்புத் தானமாகவோ பொது மக்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளலாம், என்று முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டத்திற்குத் தாமாக முன்வந்து நிதி உதவி அளிக்கும் தனிப்பட்ட பிரமுகருக்கோ அல்லது ஸ்தாபனங்களுக்கோ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுந்த விருதுகளை அளிப்பதன் மூலம் மற்றவர்களும் பின்பற்ற வழிவகுக்குமென்ற கருத்தும் கூறப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ஏரிகளில் தூர்வாரப்படும்போது, அங்கேயுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்றும், ஏரிகளில் தூர் வாறுவது என்பது மழைநீரைத் தேக்கி தேவைப்படும் நேரங்களில் பயன்படுத்திக் கொள்வதற்கு மாத்திரமல்லாமல், வறட்சிக் காலங்களில் ஏழையெளியவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் உதவக்கூடிய வகையிலே அந்தப் பணிகள் நிறைவேற்றப்படவேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பள்ளிக் கட்டிடங்களோ அல்லது வேறு கட்டிடங்களோ கட்டும்போது அந்தப் பணிகளை அவ்வூர் மக்களே செய்வதா அல்லது பொதுப்பணித் துறை மூலம் செய்வதா என்பது விவாதிக்கப்பட்டு நமக்கு நாமே திட்டங்களை அந்த ஊர் மக்களே செய்து கொள்ளலாம் என்றும், அந்தக் கட்டிடங்களின் உறுதித் தன்மைக்கு மட்டும் பொதுப்பணித்துறை மூலம் சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

## பாராளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாடுத் திட்டம்

பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி திட்டத்திற்காக மத்திய அரசு 57 கோடி ரூபாய் தருவதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்பு கொண்டு திட்டங்களைப் பெற்று அவைகளைச் செயற்படுத்த போதுமான கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.


இத்திட்டம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துக் கூறும்போது, சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பணிகளைக் கடந்த கால ஆட்சியிலே கொடுத்ததைப் போல, தாங்கள் விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடம் தரவேண்டுமென்று வலியுறுத்துவதாகவும், அதற்கு ஒப்புக்கொண்டால் தான் திட்டங்களையும், வேலைகளையும் குறிப்பிட்டுக் கொடுப்பதாகவும், அதனால் தான் பணிகளை நிறைவேற்றக் கால தாமதமாவதாகவும் தெரிவித்தார்கள். இதுபற்றி விவாதிக்கப்பட்டு இறுதியாக இந்தப் பணிகள் டெண்டர் மூலமாகத்தான் விடப்பட வேண்டுமென்றும், அதில் எந்த மாறுதலும் செய்யப்படக் கூடாதென்றும், அதற்கு மீறி வேறு யாராவது குறிப்பிட்டு நியமன முறையிலே தான் இந்தப் பணிகளை ஒப்படைக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்குத் தெரிவிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

எந்தவகையான பணிகள் இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கலாம் என்று முடிவெடுக்கும் அதிகாரம் எப்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறதோ, அதைப் போலவே சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதிக்கு என்னென்ன பணிகள் தேவை என்பதை முடிவு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அறிவிக்கலாம் என்றும், அதிலே எந்த நிபந்தனையும் விதிக்கத் தேவையில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டது. இதன்மூலம் இதுவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஒதுக்கீடான 25 இலட்சத்தில் கண்டிப்பாக 13 இலட்ச ரூபாயை குறிப்பிட்ட பணிகளுக்காகச் செலவழித்தே தீரவேண்டுமென்ற நிபந்தனை மாற்றப்பட்டு, அவரவர்கள் விரும்பும் பணிகளுக்காகச் செலவழித்துக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

---


**காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் கிராமத்தில் நடைபெற்ற 'அண்ணா மறுமலர்ச்சித் திட்ட' தொடக்க விழாவில், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 'தமிழரசு' சந்தாதாரர்களுக்குத் தமிழரசு பிரதியை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.இறையன்பு இ.ஆ.ப., ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.சண்முகம், செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.தமிழ்மணி ஆகியோர் உள்ளனர்.**

**(19-9-97)**



# வாகை சூடும் நாடு

— உடுமலை நாராயணகவி




எங்கள் தந்தை தாயின் நாடு - இந்தியா
எனும் இந்நாடே - (எங்கள்)


சங்கம் தரும் தரளம் பவளம்
தங்கம் விளை நாடு
மங்காத நல்வாழ்வில் நாளும்
வாகை சூடும் நாடு! (எங்கள்)

போர் வேந்தர்கள் போற்றும் புனித
ஏர் வேந்தர்கள் நாடு
கார்வேந்தன் ஐந்தருவும் போல
கருணையாளர் நாடு! (எங்கள்)

ஆடு புலி மானுமே நீராடும்
துறை நாடு
கேடில் விழுச் செல்வம் கல்வி
ஏற்றம் வாய்ந்த நாடு! (எங்கள்)



உடுமலை நாராயண கவி அவர்கள் எழுதி, இதுவரை வெளியிடப்படாத பாடல் இது;
உதவியவர் அவர் மகன் திரு. பி.என். இராமகிருஷ்ணன்



# சுதந்திரப் போர்: சில தீரச் செயல்கள்!

-கவியோகி சுத்தானந்த பாரதியார்

டில்லி செங்கோட்டையில் (1947) விடுதலைக் கொடி ஏறுமுன்பே 1790-ல் சிவகங்கையில் விடுதலைக்கொடி வானளாவப் பறந்தது. முத்து வடுகநாதன் வீரப்போரில் தியாகப் பலியானார். அவரது பசுந்தலை முன் - அரசி வேலுநாச்சியார், அவள் தந்தை கோலாகலத் தேவர், தம்பி வீரத்தேவன், படைத்தலைவர் பெரிய சின்னமருதர் - ஆகியோர் விரதங் கொண்டு விடுதலைப் போர் நடத்தினர். 1858-ல் இராணி இலட்சுமிபாய் போர்க்களத்தில் இறந்தாள். இங்கே வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று புரந்தாள். அவள் தம்பி வீரத்தேவன் துறவி வேடத்தில் வடக்கே சென்று பிரம்மாவர்த்தத்தில் 1857-ல் நானா சாகிப்பைத் தூண்டினான்.

❑❑❑

பாஞ்சாலங்குறிச்சியில் எட்டு மேஜர்களை வீழ்த்திக் கட்டபொம்முவும் தூக்குமேடையேறினான். தூக்குமேடை நாட்டை ஊக்கும் மேடையானது.

❑❑❑

ஊமையன் ஒரே வாரத்தில் இடிந்த கோட்டையை வானளாவ எழுப்பிப் பாதர் வெள்ளை, நீலமேகம், சுப்பிரமணியபிள்ளை போன்ற சூரரைக் கூட்டிப் போர் முடுக்கினான். முதற்போரில் ஆங்கிலேயர் கை ஓங்கியது; ஊமைத்துரை சிவகங்கைக்கு ஓடி வந்து, மருது இருவருடன் சேர்ந்து, திருமயத்தில் பாசறை அமைத்துக் காளையார் கோவில் காடுகளில் படையணி மன்றத்துப் பாய்ந்து பாய்ந்து போர் புரிந்தான். மருது சகோதரர் கடும் போர் புரிந்து தூக்கு மேடையில் இறவாப் புகழ் பெற்றனர் (1812).



நாற்பதாண்டுகள் ஓடி மறைந்தன. வடக்கே 1857-ல் தமிழ்நாட்டுப் பாபாஜீ (வீரத்தேவன்) தாந்தியாதோபே, ராணாசாகேபு, இலக்குமிபாய், கண்வார்சிங், அபிமுல்லாகான், அகம்மது மௌலி முதலியோரைத் தூண்டிப் போர்ப் புயல் வீசச் செய்தான். டில்லி பிடிபட்டது. ஆனால், துரோகிகள் காட்டிக்கொடுத்தனர். நீல்களும், ஹால்லக்குகளும் நமது வீரரைச் சுட்டுக் குவித்தனர்; ஆயிரக்கணக்கான மக்களைத் தூக்கு மேடையில் ஏற்றி வைத்தனர். கிராமம் கிராமமாகத் தீ மூட்டி மக்களைத் தீயில் போட்டு மடித்தனர்.

❑❑❑

இக்கொடிய வெற்றியும், குமுறிய போரும் விக்டோரியா சர்க்காருக்குப் புதிய பாடம் கற்பித்தன. துப்பாக்கியாலும், சட்டத்தாலும் இந்த நாட்டு உரிமையுணர்வை அடக்க முடியாது. நாட்டினரை அடக்க நாட்டினரைக் கொண்டே ஓர் இயக்கம் தொடர்வோம் என்ற சூழ்ச்சியால் ஹியூம், வெட்டர் பார்ன் ஆகிய இருவரையும் ஊக்கிக் காங்கிரஸ் சங்கத்தை நாட்டினர். அதில் நீண்ட காலம் (1885-1912) பம்பாயில் கோகுல்தாஸ் வடமொழிக் கல்லூரியில் டபிள்யூ.சி.பானர்ஜி தலைமையில் நடந்தது. அதற்குத் தமிழ்நாட்டிலிருந்து மதுரை மணி ஐயர், சுதேசமித்திரன், ஜி.சு.மணி ஐயர், கேசவபிள்ளை ஆகியோர் சென்று பேசினர்.

❑❑❑

1907-ல் சூரத்தில் கோகலேயின் மிதவாதக்கூட்டம் நடந்தது. அதைத் திலகர் சிதம்பரப்பிள்ளை-பாரதியார் முதலிய தீவிரச் சுதேச வீரர்கள் செருப்பெறிந்து சிதறடித்தனர். அரவிந்தர் தலைமையில் முழு விடுதலை. சுதேச விரதத்துடன்

நிறைவேறியது. மறு ஆண்டு அட்வகேட்-ஜெனரல் கிருஷ்ணசாமி ஐயர் செல்வாக்கால் சென்னையில் மிதவாதிகளின் கன்வென்ஷன் காங்கிரஸ் நடந்தது. அதை "இந்தியா' இதழாசிரியர் பாரதியார் ஆட்டுமந்தைக்கூட்டம் என்று கேலி செய்தது திலகர்-அரவிந்தர் இயக்கத்திற்கே ஆக்கமளித்தார். சென்னையில் அடக்கப்பட்ட 'இந்தியா' புதுவையில் மிடுக்கு நடைபோட்டது. அதையும் 1910-ஆம் ஆண்டு அடக்கியது ஆங்கில ஆட்சி.

□□□

உடனே அரவிந்தரின் "கர்மயோகி'யினைப் பாரதியார் தமிழில் நடத்தினார். தமிழகம் அரவிந்த மணம் கமழ்ந்தது. ஆள் தூக்கிச் சட்டம் இதோ துரத்துகிறது. பாரதியார் முயற்சியால் அரவிந்தர் கல்கத்தாவில் கப்பலேறி 4.4.1910-ல் புதுச்சேரி புகுந்து முதலில் சங்கரஞ் செட்டியார் வீட்டு மாடியில் தவம் தொடங்கினார். பிறகு வெள்ளைக்காரத் தெரு மாளிகையில் குடியேறி நான்கு மாணவருடன் வசித்தார். 1910 முதல் 1950 வரையில், நாற்பதாண்டுகள் அரவிந்தர் தமிழகத்திற்கே உரியவராகி, இங்கேயே உலகம் வியந்து போற்ற ஆசிரமமும், ஆரோவில்லும் அமைத்து அன்னையிடம் விடுத்து அமரரானார். அரவிந்தர் அரசியலை நீங்கி ஆன்ம நேய ஒருமைத் திறனால், இந்தியாவுக்கு உலகப் புகழ் தேடினார். அவர் கல்கத்தாவில் பிறந்தார். இலண்டனில் கற்றார். பரோடாவில் கலை வளர்த்தார். கல்கத்தாவில் நான்கு ஆண்டுகள் எழுத்தாலும், பேச்சாலும் நாட்டை வீறுபடுத்தினார். இறுதியில் காந்தி கண்ட சாத்வீக எதிர்ப்பும், ஒத்துழையாமையுமே வழி எனச் சொல்லி உள்ளடங்கி யோகச் சக்தியை வளர்த்து, மனிதன் தெய்வ மாறுதல் அடையும் ஆத்ம சாதனத்தைத் தந்து சென்றார். பாரதியாரும், அடியேனும், அரவிந்தர் திருவடி பற்றிப் புதுவாழ் வெய்தினோம். எனது 'பாரத சக்தி' அரவிந்த சக்தி வரலாறே, அதை அவர் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்து ஆசி கூறினார்.

□□□



1910-ல் அரவிந்தர் வந்த சில மாதங்களுக்குப் பிறகு வீர விளக்கு வ.வே.சு.ஐயர் இடர்க் கடல்களை நீந்திப் பாரிசில் பார்சி கனவான் விக்ரமசிங் ஆகி, கெய்ரோவில் அப்துல்லா மௌல வியாகிப், பம்பாயில் குலாம் காதராகி, நாசிக் சிறையில் சாவர்காரைக் கண்டு, அவர் வந்தே மாதர ஆர்ப்புடன் அந்தமான் செல்வதைப் பார்த்துவிட்டு, நாகபுரி காங்கிரஸ் கண்டு, புதுச்சேரிக்குப் பக்கிரி வேடந்தாங்கி, அல்லாகு அக்பர், என்று வந்தார். மண்டம் ஆசாரியார் வீட்டில் ஒரு வாரம் தங்கிப் பிறகு கோயில் தெருவில் குடி புகுந்தார். மனைவி வரகநேரியிலிருந்து வந்து சேர்ந்தாள். புதுச்சேரியில் ஐயர்பட்ட இடர்கள் பிரதாபசிங்கன், கரிபால்டி ஆகிய வீரர் பட்ட இடர்களைப் போலும்.

□□□

ஐயர் கிருஷ்ணபிள்ளை தோட்டத்தில் வாஞ்சி மாடசாமி, நீலகண்டன், சங்கர கிருஷ்ணா முதலியோருக்குத் துப்பாக்கிப் பயிற்சி தந்தார். அடியேனுக்கு மறவர் ஹவால் போதிய வாட் பயிற்சியும், சுடு பயிற்சியும் கிடைத்தது. ஆதலால் என்னை ஐயர் மிகவும் விரும்பி இன்னொரு செயலுக்காகப் பயிற்றினார்.

□□□

மணியாச்சியில் கலெக்டர் ஆஷை வாஞ்சி சாம்பலாக்கினான். பிறகு ஐயருக்குப் பல இடர்கள் தொடர்ந்தன. என் உடல் பொருள் ஆவியெல்லாம் ஐயருக்காகவும், அரவிந்தருக்காகவும் அளித்தேன். ஐயரைத் தூக்கிச் செல்லவும், சூனியம் வைத்துப் பித்தாக்கவும், மயக்கவும், மாயம் செய்யவும் ஒற்றர் செய்த வஞ்சனைகள் எண்ணிலா. நான் உச்சிக்குடுமி தாசரி வேடம் பூண்டு அவருக்கு உதவினேன். வீரன் மாடசாமியும், வேலைக்காரி பார்வதியும் ஐயருக்குச் செய்த உதவிகள் பல.

□□□

ஒருநாள் ஒற்றர் ஐயர் வீட்டுக் கிணற்றில் வெடி மருந்துகள் அடங்கிய ஜாடியை வைத்தனர். பார்வதி கண்டுபிடித்தாள். ஐயர் ஜாடியைப் புதுவை கவர்னரிடம் காட்டி

வழியில் முள் இருந்தால் தைக்கும்; செருப்பில் ஒட்டை இருந்தால் சுடும்; அதேபோல் நம்மிடம் பல ஜாதிகள் இருந்தால் பலவகைத் துன்பங்களுக்கும் ஆளாகத்தான் நேரிடும்.

மனத்தில் மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம் நாடு முன்னேறும்!

சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும்; ஆகவே, சாதி முறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம்தான்!



இந்த நாட்டிலே சாதிதான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம்; பேதமற்ற சமுதாயத்தை - சமத்துவத்தை சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் சாதி தொலைந்தாக வேண்டும்!

- அறிஞர் அண்ணா

வரும்போது ஒற்றர் கிணற்றை இறைத்துப் பார்த்து ஏமாந்தனர். குண்டர் கள்ளுண்டு மற்றொரு தடவை இரவில் ஐயரைத் தூக்கிச் செல்லவே கூட்டமாக வந்தனர். ஐயர் தமது ஆயுதச் சாமான்களை மாடியேறி இன்னொரு வீட்டில் ஒளிய வைத்து, மனைவி மக்களையும் அங்கே அனுப்பித் துப்பாக்கி எடுத்து மேலேயிருந்து இரண்டு வேட்டுப் போட்டார். காலிகள் ஓடி மறைந்தனர்.

□□□

முதல் உலகப் போர் மூண்ட போது எம்டன் கப்பல் சென்னையில் குண்டு போட்டுப் புதுவைக்கு வந்தது. அதில் சண்பகஇராமன்பிள்ளை இருந்தார். மாடசாமி படகில், இரவு பன்னிரண்டு மணிக்கு ஐயர் எனக்குக் "கடிதம்' தந்து அனுப்பினார். சண்பக இராமர் பதில் தந்தார். "புரட்சியைப் பலமாக நடத்தினால் கைசரின் உதவி வரும்", என்றார்.

□□□

இதன் பிறகு ஐயர், அரவிந்தர், பாரதி ஆகிய அனைவரையும் அல்ஜீரியாவுக்கு நாடு கடத்த முயன்றனர். அரவிந்தர் நடக்காது என்றார். நடக்கவில்லை.

□□□

1917-ல் காந்தியடிகள் வந்தார். அவரது உபதேசத்தால் துப்பாக்கி வெறி ஒழிந்தது. ஐயருடன் எல்லோரும் காந்தியர் ஆனோம். போர் முடிந்ததும் அரசியல் கைதிகள் விடுதலை பெற்றனர். பாரதியார் பாய்ந்து வந்தார். சென்னைக்கு ஐயரும் வந்தார். பிறகு காந்தி வழி பற்றித் தொண்டு பரவினோம்.

அரவிந்த சக்தியால் புதுச்சேரி ஆன்ம நேய நிலையமானது. உலகமெல்லாம் அங்கே கூடுகிறது. "வள்ளலார்' கண்ட கனவு வண்ணப் புதுவையில் ஆரோவில்லில் நிறைவேறுகிறது. இந்திய விடுதலைப் போரின் தியாகப் பாசறை புதுச்சேரி அது புதுயுகச் சேரியாகி உலகச் சங்க நிலையமாக நிலவுகிறது.

□□□

காந்தீயத்திற்கும் கனிந்துதவியது தமிழகமே. வடக்கே தண்டியாத்திரை போல இங்கே வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகம் நடந்தது. அங்கே சபர்மதி ஆசிரமம், இங்கே நான்கு காந்தி ஆசிரமங்கள் எழுந்து விளங்குகின்றன.

இந்தியச் சுதந்திரப் போரில் 1790 முதல் இன்று வரையில் தமிழர் ஈடுபட்டுப் பாடுபட்டனர்.

இந்தப் போர்களுக்கிடையே பெரியார், அண்ணா நடத்திய தன்மானப் போர் வரிசைகளை நாம் மறக்க முடியாது.

*தமிழரசு வந்ததே;*
*தன்மானம் வென்றதே;*
*அமுதமான தமிழ்மொழியும்*
*அரியணை வகித்ததே!*

□□□

"ஆடுகின்ற மயிற்குழுக்காள்!
ஆடல் நுட்பம்
அருங்கலையை முதலீன்ற
அன்னை எங்கே?
பாடுகின்ற புள்ளினங்காள்!
பண்ணின் பண்பைப்
பாரினுக்குப் பரிந்தளித்த
பாவை எங்கே?
ஓடுகின்ற புயல்திரள்காள்!
உரிமை நீர்மை
உலகச்சகோ தரமென்ற
ஒருத்தி எங்கே?
தேடுகின்றேன், தேவிஎங்கே?
தேவி எங்கே?
திரிகாற்றே! நீயாதல்
செப்பாய் சொல்லோ?"

அன்பின் திருவுருவாம் அன்னையைத் தேடி அலைகிறான், துடிப்புள்ள ஓர் இந்தியன். காடு மேடுகளையெல்லாம், கழனி வரப்புகளையெல்லாம், கடந்தோடுகிறான்; எதிர்ப்பட்ட பொருள்களையெல்லாம் ஏக்கத்தோடு கேட்டுக்கொண்டே தேடுகிறான்; தன் தாயின் புகழைச் சொல்லிக்கொண்டே ஓடுகிறான்.

இந்தியத் தாய் தவிர, மற்ற தேவியர் எல்லாமும் 'உலகச் சபையில்' மதிப்புடன் வீற்றிருக்கும் காட்சியைக் காண்கிறான்.

"அரியிருக்கை யேறிமுடி
அணிந்துயர்கோல் தாங்கி,
ஆண்மையொடு வீற்றிருக்கும்
அரசிகளைக் கண்டேன்;
அரிவையர்கள் முகம்நோக்கி
யார்யார்என் றுணர,
அருகணைந்தேன், தெரிந்தவரும்
அருளினர்இவ் வாறே"

அங்கே, கம்பீரமாகக் கொலு வீற்றிருந்தவர்கள் யார் யார் என அறிமுகம் செய்யப் பெறுகின்றனர்.

"நானாநாற் பத்தாண்டில்
நலமுற்ற ஜப்பான்
நாயகிநான்; பெருநதிகள்
நானிலத்தில் பூண்டே
ஆனாத வளமுடைநான்
அமெரிக்கச் செல்வி;
அடுக்கடுக்காய்க் கலைவினைகள்
ஆக்குஜெர்மன் யானே;
கானாடுங் கனிமொழியும்
ஓவியமும் காதல்
கவின்பிரான்சின் திருமகள்யான்.
காண்கவென முறையே
தேனாரும் மலர்வாயால்
தெரிவித்தார் தம்மைச்
சிரித்தொருத்தி முடிவினிலே
செப்பியதைக் கேண்மோ!"

இந்திய விடுதலை நாள்:

# திரு.வி.க. கனவு!

சி.வேங்கடசாமி

ஆம், ஆணவச் சிரிப்போடு தன்னைத் தட்டிக் கேட்கும் தைரியம் உலகில் யாருக்கும் இல்லை என்ற இறுமாப்போடு தனது சாம்ராஜ்ய ஆட்சிக்கு எப்போதும் அழிவே இல்லை என்ற மமதையோடு பிரிட்டன் மாது பேசுகிறாள்:

"என்னருமை இந்தியனே!
என்னையறி யாயோ?
என்னாட்சிக் கதிர்மறைதல்
எப்பொழுது மில்லை;
என்னிலத்தின், என்கடலின்,
என்வெளியின் பரவல்
எவர்க்குண்டோ? இவ்வுலகில்
எங்குமென தாணை;
உன்னலத்தின் பொருட்டாக
உன்னையுமே யாளும் ஓரரசி"

எத்தகைய அறிமுகம்! இந்திய மக்களின் நன்மைக்காக! பிரிட்டன், இந்திய நாட்டையும் ஆள வேண்டியுள்ளதாம்! ஏகாதிபத்தியவாதத்தின் செருக்கு மேட்டுக்குடிமனப்பான்மை அதில் எதிரொலிக்கிறது! ஆதிக்க முடைநாற்றம், அதில் அப்பட்டமாக வீசுகிறது!

இதைக்கேட்ட இந்தியன் உள்ளம், எவ்வளவு புண்பட்டிருக்கும்? எப்படிக் கொதித்திருக்கும்? அடிமையில் கட்டுண்டு வாடிய இந்தியத் தாயின் நிலையை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடிக்கிறான். அந்த அழுகையிலேயும், தன்தாய் நாட்டின் பழம் பெருமையை எண்ணி எண்ணி ஏற்றம் பெறுகிறான்: அப்போது தான்,

"ஆடுகின்ற மயிற்குழுக்காள்!
ஆடல் நுட்பம்
அருங்கலைகள் முதலீன்ற
அன்னை எங்கே?"
பாடுகின்ற புள்ளினங்காள்!
பண்ணின் பண்பைப்
பாரினுக்குப் பரிந்தளிக்கப்
பாவை எங்கே?"

என்று, அவலப்பன் பாடத் தொடங்குகிறான்.


"இடமகன்ற இந்நிலத்தில்
என்தாய் எங்கே?
எங்கே? என் தாயெங்கே?
எங்கே? எங்கே?"

என்று துடிதுடித்துக் கேட்கிறான்.

அவன் கேள்வியில் அலறல் எங்கும் எதிரொலிக்கிறது! பதில் சொல்வார் யாரும் இல்லையா?

.... நேரம் கழிந்துகொண்டே சென்றது. இறுதியில், ஏதோ ஒரு மூலையிலிருந்து பதில் வந்தது; மிகவும் ஏக்கமான குரலோடு, தழுதழுத்த விம்மல் ஒலியுடன், உருக்கமான பதில் வந்தது. உருவம் தெரியவில்லை. ஆனால், குரல் மட்டுமே கேட்டது:

*"மைந்தா;*
*இங்கேஎன் பழங்கதைகள்*
*இயம்புவதால் என்னே?*
*என்நிலையோ நிர்வாகம்;*
*எச்சபையார் ஏற்பார்*
*பொங்கார*
*முடிசெங்கோல்*
*பூண்பதென்றோ போச்சு;*
*பொலிவுடலும்*
*பொன்உடையும்*
*புரிஉணவும் போச்சு;*
*கங்காளி;*
*துச்சிலுள்ளேன்;*
*கம்பலையே ஆச்சு;*
*கடும்பசிநோய்*
*முடுக்குகின்ற*
*கர்மஎன தாச்சு!"*



தன் அவல நிலையை, உருக்கும் வகையில் இவ்வாறு எடுத்துரைக்கிறாள், இந்தியத் தாய்.

உலக நாடுகள் பலவும் உரிமைப் பொலிவோடு வீற்றிருக்கும் பேரவையில், அடிமைநாடு, அப்போது எப்படி இடம் பெற முடியும்?

"தன்மானம் இழந்து, ஆங்கில நாட்டு ஆதிக்கத்தில் வாடித் தவித்த நிலைமாறி, விடுதலை பெறும் நன்னாள் எப்போது வருமோ?" என்ற ஏக்கம், இன்றைய இந்தியத் தாயின் பதிலில் காண்கிறோம்.

மேலும் இந்தியத் தாய், தன் நிலையை விளக்குகிறாள்:-

*வடிவினிலே பெரியள்யான்;*
*வயதினிலே பெரியள்;*
*வளத்தினிலும் வன்மையிலும்,*
*மக்களிலும் பெரியள்;*
*கடியரணில், மலையரணில்,*
*கடலரணில் பெரியள்;*
*காலினிலே தளைவந்த*
*காரணந்தா னென்னே?*
*படியினிலே இல்லாத*
*பாழான சாதி*
*பகுப்புடனே, தீண்டாமை,*
*பாவையர்தம் அடிமை*
*கொடியஇவை குடிகொண்டு*
*கொடிகொடியாய்ப் படர்ந்தே*
*கொல்லவுடன் பிறப்பன்பைக்*
*குலைத்ததென்றன் வாழ்வே.*

தன் பழம் பெருமைக்குக் கேடு விளைவித்த தீய பண்புகளை, அடியோடு நீக்கும் தொண்டில் ஈடுபடுமாறு, தம் மக்களை இந்தியத்தாய் வேண்டுகிறாள்:

*"என்னாட்சி பரிணமிக்க*
*எழுங்கிளர்ச்சி பலவே,*
*ஏரார்சு தேசியத்தில்*
*இருப்பதென்றன் ஆட்சி;*
*தன்னாட்சி அந்நியத்தைத்*
*தாங்குவதி லில்லை;*
*தயையின்றி அந்நியரைத்*
*தாக்கலிலு மில்லை;*
*மன்னாட்சி அறநெறியில்*
*மலர்ந்திடவே வேண்டும்;*
*மாக்கலைகள் வாழ்விடையே*
*வளர்ந்திடவும் வேண்டும்;*
*நன்னாட்டுத் தொழிலரசு*
*நலம்பெறவே வேண்டும்;*
*நான்சபையில் வீற்றிருக்கும்*
*நாள்அந்த நாளே".*

*(மன் ஆட்சி: நிலைபெற்ற ஆட்சி*
*கங்காளி : எலும்புருவானவள்)*

"தாயின் காட்சி" என்ற தலைப்பில், "தமிழ்த் தென்றல்" திரு.வி.க. அவர்கள் 1931ஆம் ஆண்டில் இயற்றிய கவிதைக் கனவின் ஒரு பகுதியே, மேலே காண்பது.


அடிமை இந்தியாவின் அவல நிலைமையை- உணர்ச்சிக் கொந்தளிப்பை - கலை நயத்துடன் இக்கவிதை, தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டியது. அன்று மட்டும் அல்ல; இன்றும் கூடத்தான். இந்தியா விடுதலை பெற்ற பின்னும், இத்தகைய கவிதைகள் சாகாவரம் பெற்றுவிட்டன.

உணர்ச்சித் துடிப்புகளுக்கு அழியாக் கலை உருவம் தரும் ஆற்றல், உண்மைக் கவிஞர்களின் தனிச்சிறப்பு. அத்தகைய கவிஞர்கள் வரிசையில் திரு.வி.க. சிறப்பிடம் பெற்றுள்ளார்.

ஆம். அவர் கண்ட கனவு - கவிதைக் கனவு பலித்தது. அவர் போன்ற எண்ணற்ற சான்றோர்களின் சீரிய பணி வீண் போகவில்லை. அடிமை இந்தியாவின் விலங்கு முறிந்தது. நாம் விடுதலை பெற்றோம். இந்தியத் தாய், உலகப் பேரவையில் தனிச் சிறப்புடன் வீற்றிருக்கும் காட்சியை, திரு.வி.க. அவர்கள், தமது வாழ்நாளிலேயே காணமுடிந்தது. ஆம்! கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி, பாரதியார் ஆகியோர்க்கும் கிடைக்காத வாய்ப்பு திரு.வி.க.வுக்குக் கிடைத்தது.

# இந்திய ரத்தம்

தஞ்சை வே. மன்னர் மன்னன்



எனக்கொரு ஆசை...
சின்னஞ்சிறு ஆசைதான்... !

ஏசுநாதரின் சிலையை,
இப்ராகிம்ராவுத்தர் அமைக்கட்டும் !
பள்ளிவாசலுக்குப்
பரமேஸ்வரன் அடிக்கல் நாட்டட்டும்...

அந்தோணி திருமணத்திற்கு,
அல்லாபிச்சை தலைமை ஏற்கட்டும்... !
நவாஸ்கான் குழந்தைக்கு,
நாகநாதய்யர் பெயர் சூட்டட்டும்... !
பள்ளிவாசலில்,
பகவத்கீதை படிக்கப்படட்டும்... !
மாதாகோவிலில்,
மார்க்கத்தின் தொழுகை நடக்கட்டும்... !
பரந்தாமன் ஆலயத்தில்,
பைபிளின் தத்துவம் பரிமளிக்கட்டும்... !

மதங்கள் எதுவானாலும்,
மனங்கள் ஒன்றாகட்டும்... !
சிந்திய ரத்தம் எதுவானாலும்
இந்திய ரத்தம் என்றாகட்டும்... !

ஆசை நிறைவேறினால் - எனது இந்தச்
சின்னஞ்சிறு ஆசை நிறைவேறினால்,
இந்திய மக்கள்
இசைபட வாழமுடியும்... !
இல்லையேல்... ?

வினாக்குறி -
வியப்புக்குறியாக மட்டுமல்ல;
விபரீதக் குறியாக மாறிவிடும் ! !

அதுமட்டுமல்ல; ''பெண்ணின் பெருமை'' வளரத் தொண்டாற்றிய திரு.வி.க. அவர்கள் மனம் மகிழ, உலக நாடுகள் பேரவையின் தலைவியாக ஓர் இந்தியப் பெண்மணி (பிரதமர் சகோதரி திருமதி விசயலட்சுமி பண்டிட்) வீற்றிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

மேலும், நம் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் (பிரதமர் நேரு தொடங்கி, திருவாளர்கள் ஆர்க்காடு இலட்சுமணசாமி முதலியார், இராமசாமி முதலியார், கோவை ஆர்.கே. சண்முகம் செட்டியார், ஜி. பார்த்தசாரதி, பெனகல் நரசிங்கராவ்.மால்கம் ஆதிசேஷய்யா, இராஜம்மாள் தேவதாஸ் முதலியோர்) உலக நாடுகள் சபையின் பல்வேறு நிறுவனங்களில் சிறப்பாகப் பணியாற்றி உலகப் புகழ் பெற்றுள்ளனர். அண்மையில், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் நடத்திய "உலகத் தமிழ் மாநாடு" வாயிலாக, "யாதும் ஊரே யாவரும்கேளிர்" என்ற தமிழ் முழக்கம், உலகப் பேரறிஞர்களிடையே ஆக்கம் பெற்று வருகிறது. திருவள்ளுவரின் குறள் உலகெங்கும் பரவிவருகிறது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள், இந்தியா விடுதலை அடைந்தபோது, திரு.வி.க. அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார். ஆயினும் அம் மகிழ்ச்சியின் ஊடே மனக்குறை ஒன்று நிழலாடியது. திரு. ம.பொ.சி. அவர்களை ஆசிரியராகக் கொண்டு, 15.8.1947ல் வெளி வந்த 'தமிழ் முரசு' இதழில், மிக நுட்பமாக இதைக் கோடிட்டுக் காட்டி, அவர் பின்வருமாறு அப்போது எழுதினார்:

"பிரிட்டிஷ் ஆட்சி நம்மை விட்டு அகன்றது உண்மை. ஆனால், சாம்ராஜ்யம் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

முன்னொருகால் வடநாடு சிதறுண்டு வருந்திய போது, அதையும் முழுநாட்டையும் பண்படுத்தும் முயற்சி, தென்னாட்டிலிருந்தே எழுந்தது, அம்முயற்சி மீண்டும் காலத்துக்கேற்ற முறையில் எழுவதாக!"

விடுதலை பெற்ற இந்தியாவில் விழா கொண்டாடும் இந்நாளில், தமிழ்ச் சான்றோர் திரு.வி.க. அவர்கள் நினைவூட்டிய கருத்துகள், சிந்தனைக்குரியன.

# அண்ணாவின் சொல்நயம்



தீரர் சத்தியமூர்த்தி, இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிர அரசியல்வாதி ஆயினும் கலைத்துறை ஆர்வம் மிகுந்தவராகவே இருந்தார்.

சென்னை நாடக அரங்குகளில் புகழ் பெற்ற சுகுண விலாச சபையின் முக்கிய அங்கத்தினராகவும், நடிகராகவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து, நாடகக் கலையை வாழ்வித்தார். பல இசை மாநாடுகளிலும் பங்கெடுத்துக் கொண்டார். திரைப்படத் தொழில் வளர்ச்சியிலும் அவர் பங்கு குறையாத அளவில் இருந்தது. 1939ல் நடந்த முதலாவது அகில இந்தியத் திரைப்படத் தொழில் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். தென்னிந்திய பிலிம் வர்த்தகக் கழகம் உருவாகவும் மூலகாரணராக இருந்தார்.

சமஸ்கிருதத்தில் உருவாக்கப்பட்ட 'மிருச்சகடி' நாடகத்திலும், 'மாளவிகாக் நிமித்ர' நாடகத்திலும் அவர் சிரிப்பு நடிகராகப் பங்கேற்றார்.



'சபலா' என்கிற தமிழ் நாடகத்தில் சுவாமிநாதன் என்ற முக்கியக் கதாபாத்திரத்திலும், 'வேணி சம்ஹாரம்' என்ற நாடகத்தில் அசுவத்தாமாவாகவும் தீரர் சத்தியமூர்த்தி சிறப்புற நடித்தார்.

1928ல், சென்னை மியூஸிக் அகாடெமியில் உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் அவர் பதவி வகித்தார்.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் நடனமாடக் கூடாது; தேவதாசிகள் மட்டுமே வித்தியாசமானபடி நோக்கப்பட்டு நடனம் ஆடலாம் என்றிருந்த காலம் அது.

அந் நேரத்தில், மிலட்டூர் நடேச ஐயரிடம் நட்னம் கற்ற ஈ. கிருஷ்ண ஐயர், மேடைகளில் ஆடத் தொடங்கினார். 1931ல், மியூஸிக் அகாடெமியில் அங்கத்தினராக இருந்த அவர், சென்னையில் முதன்முதலாகத் திருவாளப்புத்தூர் பெண்களின் பரத நாட்டியத்தைத் துணிவோடு ஏற்பாடு செய்தார்.

பலபேர் அந்த நிகழ்ச்சி நடக்கக்கூடாது என எதிர்த்தார்கள். தீரர் சத்தியமூர்த்தி, நடனக் கலை தமிழகத்தில் நசிந்துவிடாதிருக்க இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தே ஆகவேண்டும் என்றார். அப்போது 'ஹிந்து' ஆசிரியராக இருந்த திரு. ஏ.ரங்கசாமி ஐயங்காரும் அவரை ஆதரித்தார். நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடந்தேறியது. இதைப் பலரும் எதிர்த்துப் பேசினார்கள்; பலரும் எதிர்த்து எழுதினார்கள்.

இருந்தும் தீரர் சத்தியமூர்த்தியின் வாதமே வென்றது. 1935ல் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபை பொன் விழாவையொட்டி அமைக்கப்பட்ட அலங்கார மேடையில், அவரால் சிறந்த பரதநாட்டியப் பாணியைக் கையாளும் நடிகைகளெல்லாம் அழைப்பின் பேரில் வந்து ஆடிக் காட்டினார்களென்றால், பார்த்துக்கொள்ளுங்களேன்!

தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பல நாடகங்களில் நடித்தவர் தீரர் சத்தியமூர்த்தி.

ஆனால் – தெய்வ வேடங்களைத் தாங்கி நடிக்க அவருக்குப் பிடிக்காது, அப்படி நடிப்பதானது தெய்வங்களை அவமதிப்பதாகும் என்பார். ஆனால் இதிகாச புராண நாடகங்களை அவர் வெறுக்கவில்லை.

"நாடகங்களானாலும் சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக்காட்டுபவைகளாக அவை தயாரிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட சமூக நாடகங்களுக்குக் கலைஞர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்" என்றார், அவர்!

பிற்காலத்தில் (1967) பொதுத்தேர்தல் நடைபெற்ற காலத்தில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்டது.

நாடகத் துறையிலும் திரைப்படத் துறையிலும் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தவர்கள். ஆகையால், திரு. கு. காமராஜர், காங்கிரஸ் கட்சிப் பிரச்சார மேடைகளில் பேசும்போது தி.மு.க.வினரைக் 'கூத்தாடிகள் கட்சியினர்' என்று குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா, அதற்குப் பதிலளிக்கும் வகையில் மேடைகளில் இவ்வாறு பேசினார் – . "தீரர் சத்தியமூர்த்தியைத் தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டவர் காமராஜர். சத்தியமூர்த்தி பல நாடகங்களில் வேடங்களேற்று நடித்தவர் என்பதும், கலைத்துறையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்பதும் அவருக்குத் தெரியாதோ என்னவோ – நம்மைக் கூத்தாடிகள் என்கிறார்!" . – அவர் இப்படிப் பேசியதிலிருந்து காமராஜர் 'கூத்தாடிக் கட்சி' என்ற பிரச்சாரத்தை நிறுத்திக்கொண்டார்.

– பி.எல்.ஆர்.

# வாசகர் இதயம்

புதுப்பொலிவு மட்டுமல்ல; கருத்துச் செறிவும் இப்போது 'தமிழரசி'ல் கூடிவருவது மகிழ்ச்சி தருகிறது.

**எஸ். முத்துச்செல்வன்** — அருப்புக்கோட்டை

சமூக நலத்துறை திட்டங்கள் பற்றி வெளியிட்ட கையேடு பயனுள்ளதாக இருந்தது; அதேபோல், ஒவ்வொரு துறை பற்றியும் வெளியிட்டால் நல்லது.

**புலவர் இரா. சொக்கலிங்கம்** — கும்பகோணம்

கடலில் மூழ்கி முத்தெடுப்பது போல், வேறு சில நூல்களில் தேடிப்பிடித்து வெளியிடும் செய்திகள் அற்புதம்.

**பழ. முருகேசன்** — திருச்செங்கோடு

'கிராமியக் கலை இயக்கத்தால் வளரும் தமிழ்' கட்டுரை, தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாகும்.

**ஜெ. காட்வின் ஜெபநேசர் மில்ராய்,** — திருவனந்தபுரம்

தாங்கள் வெளியிட்டிருந்த 'மரமொழி'களில் - ஒருவரி தவறு; அது 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்று இருந்திருக்க வேண்டும்.

**செ.மா. அரசு** — வேலூர்-9

திருநீற்றுப் பச்சிலை மருத்துவக் கட்டுரை பல அரிய செய்திகளின் அறிவிப்பாக இருந்தது.

**பி. சூரன்** — இடையபட்டி

சட்டமன்றப் பேரவை பவளவிழாக் கட்டுரைகள் - மேதைகள் வாழ்விலே தொகுப்பு ஆகியவை அருமையாக இருந்தன.

இதுகுறித்து ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.

**மு. செல்வம்** — கீரப்பாளையம்

கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய கட்டுரை வெளியிட்டுப் பல விஷயங்களைத் தெரிவித்தமைக்குப் பாராட்டுகள்.

**கி. ராமதாஸ்** — சென்னை-23

சின்னச் சின்னச் செய்தித் துணுக்குகள் அதிகம் வெளியிடவும்.

**கே. கோடீஸ்வரன்** — தக்களூர்

பழங்கால இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை மதிப்பீடு செய்யச் சில பக்கம் ஒதுக்கலாமே?

**எஸ். முத்து** — பன்னப்பட்டி, சேலம்

கலைஞரின், அண்ணா மறுமலர்ச்சித் திட்ட உரையினைப் போல அடிக்கடி வெளியிட வேண்டுகிறேன்.

**ஆ. வேல்சாமி** — மேற்பனைக்காடு


காமராசர் வாழ்க்கைக் குறிப்புகள், மற்றவர்கள் வாழ வழிகாட்டுபவை.

**க. குழந்தைவேல்** — மேட்டுத் திருக்காம்புலியூர்

மாணவர் பக்கம்:

# தென்னை மரம்

மு. இளங்கோவன்



எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இரண்டு தென்னை உள்ளன !
உங்கள் வீட்டுத் தோட்டத்தில்
உண்டா ? உண்டா ? சொல்லுங்கள் !

அறிஞர் ஒருவர் வந்தாரே !
அழகுத் தென்னை தந்தாரே !
நட்டு நீரும் ஊற்றினோம் !
நாளும் நன்றாய்ப் போற்றினோம் !

குறைந்த ஆண்டில் தென்னைதான்
குலைகுலையாய்க் காய்த்தது !
எங்கள் அண்ணன் குரங்குபோல்
ஏறிப் பறித்துப் போடுவார் !

உழைத்து வாழும் மாந்தர்கள்
உதவி செய்து மகிழ்வதுபோல்
வளர்ந்து செல்லும் தென்னையும்
வகைவகையாய் உதவுமே !

## எது கல்வி ?

மிக நுண்ணிய செய்திகளை மனத்தில் திணித்து மனனம் செய்வது, அனைவருக்கும் எடுத்துரைப்பது மட்டுமே கல்வியல்ல; அது, பார்வையற்றவர்களுக்குக் கண்களைக் கொடுப்பதற்குப் பதிலாக, கண் போன்ற எதையோ அவர்களுக்கு ஒட்டவைப்பது போலாகிவிடும்!



- டாக்டர் இராதாகிருஷ்ணன்

## கடவுள் !

எதையும் மனம்திறந்து பேசக்கூடியவர் பெரியார். ஒருமுறை அவரிடம் - 'கடவுள் இல்லை இல்லை என்று சொல்கிறோமே, திடீரென்று கடவுளே நம்முன் அவதரித்துவிட்டால் என்ன செய்வீர்கள் ?' என்று கேட்டார்கள்.

'கடவுள் இருக்கிறார் என்று சொல்லி விட்டுப்போவோம்!' என்று சட்டெனப் பதில் சொன்னார், பெரியார்.

## கணக்கு வேண்டும் !

'ஒவ்வொரு சல்லிக்காசுக்கும் கணக்கு வேண்டும். உனது காசாக இருந்தாலும், பொது காசாக இருந்தாலும் கணக்கு வேண்டும்.



பொதுப் பணத்தில் ஒரு சல்லிக் காசைக்கூட செலவிட உனக்கு உரிமையில்லை. அதற்கான காரணத்தை முறையாக - அதுவும் பொது மக்களுக்குப் பயன்படும்படி அதனைச் செலவிட வேண்டும்.

ஏதோ நாம் கையெழுத்துப் போடுவதால் பணத்தை எடுத்துச் செலவிடலாம் என்று யாருமே எண்ணக்கூடாது.

பொதுப் பணத்தைக் கையாள்பவர்கள் எல்லாருக்குமே இந்த எண்ணம் அச்சடித்ததுபோல இருக்க வேண்டும்!'

- மகாத்மா காந்தி
தகவல்: வீ.பி.கே. மூர்த்தி

# அச்சம்!

- டாக்டர் மா. பா. குருசாமி

ஒரு வீட்டில் ஒரு சுண்டெலி வாழ்ந்து வந்தது. வீட்டில் சாமான்கள் வைக்கும் அறையில் ஒரு பொந்து இருந்தது. அதுதான் சுண்டெலியின் இருப்பிடம், வீடு. அதிலிருந்து கொண்டு அது வீடெல்லாம் சுற்றிவந்தது.

சுண்டெலிக்கு வீட்டில் உள்ளவர்களைப் பார்த்தால் பயமில்லை. ஆதலால் வீட்டிற்குள் எங்கும் போகும், எங்கும் வரும். சிறு பிள்ளைகள் சிந்துகின்ற சோற்றுப் பருக்கைகளைக் கூடத் துணிச்சலாக வந்து பொறுக்கித் தின்னும்.

சுண்டெலி சின்னஞ்சிறு எலியாகையால் அதனை எளிதாக அடிக்க முடியாது. அடிக்க வந்தால் தாவிக் குதித்துத் தப்பித்துவிடும்.

ஒரு நாள் அந்த வீட்டிற்கு ஒரு பூனை வந்தது. அந்தப் பூனை சாம்பல் நிறத்தில் பெரியதாக இருந்தது. அது வந்த தோரணையே எலிக்குக் கிலியாகிவிட்டது.

பூனை உடலை வளைத்து அங்கும், இங்கும் தாவியது. அதன் கண்கள் சுழன்று, சுழன்று ஏதாவது அகப்படுமா என்று தேடின.

பயந்துபோன சுண்டெலி, ஓடிப்போய் தனது பொந்துக்குள் ஒளிந்து கொண்டது. அங்கிருந்து "இறைவா, இறைவா என்னைக் காப்பாற்ற வா", என்று கடவுளை அழைத்தது.

சுண்டெலியின் பக்தியைக் கண்டு கடவுளின் மனம் இறங்கியது. கடவுள் எலிக்கு முன்னால் காட்சியளித்தார். "எலியே, எலியே, உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"இறைவா, நான் இவ்வளவு காலமாக இந்த வீட்டில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்து மகிழ்ச்சியாக இருந்தேன். இப்பொழுது இங்கே பூனை உருவத்தில் எனக்கு ஆபத்து வந்துவிட்டது. என்னையும் பூனையாக்கிவிடு; நான் பயமில்லாமல் வாழ்வேன்'', என்று எலி இறைவனிடம் வேண்டிக்கொண்டது.

எலியிடம் இரக்கம் கொண்ட இறைவன், அதனைப் பூனையாக மாற்றினார்.

இப்பொழுது பூனையாகிவிட்ட எலிக்குத் தன்னைப் பார்க்கப் பெருமையாக இருந்தது. பயமில்லாமல் வீட்டிற்குள் உலவியது. பூனையை வீட்டிலுள்ளவர்கள் அடிக்கவில்லை. ஆதலால் நிம்மதியாக இருந்தது.

வீட்டிற்குள்ளேயே வளைய வந்துகொண்டிருப்பது பூனைக்குச் சலித்துப் போய்விட்டது. ஆதலால் ஊரைச் சுற்றிப் பார்க்கத் தீர்மானித்தது. தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கியது.

'மிஞ்ஞா மிஞ்ஞா' என்று குரலில் பாட்டுப் பாடிக் கொண்டு தெருவில் நடந்துகொண்டிருந்த பூனை, 'லொள், லொள்' என்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தது.

அங்கு ஒரு பெரிய நாய் நின்றுகொண்டிருந்தது. வெள்ளை நிறத்தில் அது கம்பீரமாகக் காட்சியளித்தது. அது வேட்டை நாய், அது பூனையைப் பிடிக்க நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடிவந்தது.

நாயைக் கண்ட பூனைக்குப் பயம் வந்துவிட்டது. அதனிடம் அகப்பட்டால் தன்னைக் கடித்துக் குதறிவிடுமென்பது பூனைக்குப் புரிந்தது. ஆதலால் ஒரே ஓட்டமாகத் தான் இருந்த வீட்டிற்கு ஓடியது. அங்குச் சென்று பாதுகாப்பாக வீட்டின் ஒரு மூலையில் நின்று கொண்டது. நாயைக் கண்ட பயத்தால் அதன் உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது.

பூனையாக இருந்தால் நிம்மதியாக வாழ முடியாதென்று நினைத்தது. ஆதலால், "இறைவா, இறைவா என்னைக் காப்பாற்ற வா" என்று கடவுளை நோக்கி வேண்டிக்கொண்டது.

இறைவன் பூனையின் முன்பு காட்சியளித்தான். அதனிடம் "எலியாக இருந்தபோதுதான் பயந்தாய். இப்பொழுது பூனையாகிவிட்டாய். பிறகு ஏன் என்னை அழைத்தாய்?" என்று இறைவன் கேட்டான்.

"இறைவா, நாயைக் கண்டால் எனக்குப் பயமாக இருக்கின்றது. என்னை ஒரு வேட்டை நாயாக மாற்றிவிடு; நான் பயமில்லாமல் வாழ்வேன்'' என்று கேட்டுக்கொண்டது. இறைவனும் அதனை நாயாக மாற்றிவிட்டுச் சென்றான்.

பூனை இப்பொழுது பெரிய வேட்டை நாயாக மாறியிருந்தது. கறுப்பும், வெள்ளையும் கலந்த நிறத்தில் அது கம்பீரமாகக் காட்சியளித்தது. அதனைப் பார்த்துப் பூனைகளும், பிற நாய்களும் பயந்து ஓடின. அதற்குப் பெருமையாக இருந்தது.

வேட்டை நாய்க்கு இப்பொழுது ஊருக்குள் சுற்றிச் சுற்றி வருவது சலித்துவிட்டது. காட்டிற்குள் சென்று வேட்டையாடி வாழ விரும்பியது.

நாய் காட்டிற்குள் வந்து முயல், நரி, மான் போன்றவற்றை வேட்டையாடித் தின்றது. காட்டில் மனம் போன போக்கில் ஓடி, ஆடித் திரிந்தது. ஒரு நாள் அந்த வேட்டை நாய்,

"எனக்கு நிகர் யாரோ ?
எதிரில் வந்து பாரு !
கணக்காய் வேட்டை யாடி
களித்து வாழ்வேன் நானே" - என்று
பாடிக்கொண்டு சென்றது.

அப்பொழுது தூரத்தில் ஒரு பயங்கரமான உறுமல் ஒலி கேட்டது. அந்தச் சத்தத்தில் காடே கதிகலங்கிப் போனது. காட்டு மிருகங்களெல்லாம் அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பயந்து ஓடி ஒளிந்துகொண்டன.

முதலில் நாய்க்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு உறுமல் சத்தம் வந்த திக்கில் நின்று கவனித்துப் பார்த்தது. அங்கு ஒரு புலி வரக்கண்டது.

அது ஒரு வரிப்புலி. பெரியதாக இருந்தது. அதன் கண்கள் தீக்கங்குகள் போல் இருந்தன. அதன் மீசையும், கோரைப் பற்களும் பார்க்கப் பயமாக இருந்தன. அதனிடம் அகப்பட்டால், தன்னைச் சட்டினி ஆக்கிச் சாப்பிட்டு விடுமென்பதை வேட்டை நாய் உணர்ந்து கொண்டது. உடனே நாலுகால் பாய்ச்சலில் ஓடி ஒரு புதருக்குள் ஒளிந்துகொண்டது.

பயத்திலும், பதற்றத்திலும் குளிருக்குள் அகப்பட்டது போல் வேட்டை நாயின் உடல் வெடவெட வென்று நடுங்கியது. கண்ணை மூடிக்கொண்டு, வேட்டை நாய், "கடவுளே, கடவுளே, நான் மறுபடியும் ஆபத்தில் மாட்டிக் கொண்டு முழிக்கின்றேன். என்னைக் காப்பாற்ற வா, ஆபத்பாந்தவா", என்று உள்ளமுருகி அழைத்தது.

இறைவன் மறுபடியும் வேட்டை நாய்க்கு முன் காட்சி அளித்தான். "எதற்காக என்னை அழைத்தாய்?" என்று கேட்டான், அவன் குரலில் சிறிது சலிப்பு இருந்தது.

வேட்டை நாய் மிகவும் பணிவோடு "இறைவா, நாய்க்கு நிகர் இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இன்று ஒரு புலியைப் பார்த்தேன். எனக்கு கிலி வந்துவிட்டது. என்னைப் புலியாக மாற்றிக் காப்பாற்று", என்று முறையிட்டுக்கொண்டது.

இறைவன் இந்த முறை, "போனால் போகிறது" என்று, வேட்டை நாயைப் புலியாக்கிவிட்டுச் சென்றான்.

புலியான வேட்டை நாய் இப்பொழுது மிகவும் குஷியாக இருந்தது. பக்கத்திலிருந்த ஒரு குளத்திற்குச் சென்று நீரில் தனது உருவத்தைப் பார்த்து மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டது. அதனைக் கண்டு காட்டு மிருகங்கள் ஓடி ஒளிவதைக் காண அதற்குச் சந்தோஷமாக இருந்தது. தன்னைப்பற்றித் தானே கர்வப்பட்டுக் கொண்டது.

ஒரு நாள், காட்டில் உற்சாகமாகப் புலி உலா வந்த பொழுது, எதிரில் ஒரு வேட்டைக்காரன் வரக்கண்டது. அவன் கையில் நீண்ட இரட்டைக் குழாய் துப்பாக்கியிருந்தது. அந்த வேட்டைக்காரன் புலியைப் பார்த்துப் பயப்படவில்லை. அதனைச் சுட்டு வீழ்த்தக் குறி பார்த்தான்.



புலிக்கே இப்பொழுது கிலி வந்துவிட்டது. உயிர் பதைக்க அடர்ந்த காட்டுக்குள் நாலுகால் பாய்ச்சலில் ஓடியது. அங்கு ஒரு குகை இருக்கக் கண்டது. அதற்குள் சென்று மறைந்துகொண்டது.

நீண்டதூரம் ஓடி வந்ததாலும் அச்சத்தாலும் புலிக்கு மூச்சு வாங்கியது. அதன் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

புலி மிகவும் பரிதாபமான குரலில் இறைவனை மீண்டும் அழைத்தது. இறைவனுக்குத் திரும்பத் திரும்ப வந்து உதவி செய்ததில் மனத்திற்குள் அலுப்பு ஏற்பட்டு விட்டது. இருந்தாலும் புலிக்கு முன்னால் இறைவன் காட்சியளித்தான்.

புலி இறைவனிடம், "பகவானே, என்னால் புலியாக நிம்மதியாக வாழ முடியவில்லை. என்னை ஒரு வேட்டைக்காரனாக மாற்று. என் கையில் ஒரு இரட்டைக்குழாய் துப்பாக்கியும், குறிபார்த்துச் சுடுகின்ற ஆற்றலும் கொடு. நான் கவலையில்லாமலும், பயமில்லாமலும் வாழ்வேன்" என்று கூறியது.

இறைவன் அந்தப் புலியைப் பார்த்துச் சிரித்தான். "புலியே, நீ முதலில் எலியாக இருந்தபோது பூனையைப் பார்த்துப் பயந்தாய். பூனையான பிறகு நாயைப் பார்த்து நடுங்கினாய். நாயாக மாற்றினேன். ஆனால் நீயோ புலியைக் கண்டு கிலி கொண்டாய். புலியாக மாற்றினேன்; இன்னும் பலனில்லை; உன்னிடம் கிலி போகவில்லை, தன்னம்பிக்கையோடு அச்சமில்லாமல் வாழ உனக்குத் தெரியவில்லை. எப்பொழுதும் எனது உதவியையே நாடுகின்றாய். ஆதலால் நீ புலியாக இருப்பதும் ஒன்றுதான்; எலியாக இருப்பதும் ஒன்றுதான், மறுபடியும் எலியாகப் போ" என்று கூறிவிட்டு இறைவன் மறைந்தான்.

புலி மறுபடி சுண்டெலியாகியது. சோகமாகத் தனது பொந்தைத் தேடிப் போனது.

இறைவன் நமக்கு உதவுவான். ஆனால் நம்மிடம் தன்னம்பிக்கையும், துணிச்சலும் வேண்டும். அப்பொழுதுதான் இந்த உலகில் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழமுடியும்.

(வினோபா பாவே கூறிய குட்டிக் கதையின் தழுவல்.)
**மதுரை-காந்திய இலக்கியச் சங்கம் வெளியிட்டுள்ள 'காந்தி வழிக் கதைகள்' புத்தகத்திலிருந்து.**

# விடுதலைப் போரில் திருப்பங்கள் !

- எஸ். நடராஜன்

நம் நாட்டின் விடுதலைப் போராட்டம் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக நடந்து வந்திருக்கிறது. அடிமைகளாக ஆர்வமிழந்து ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திர உணர்ச்சி பெற்று வீறு கொண்டு எழுந்தது, ஒரு நாளில் நடந்துவிடவில்லை. நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காகப் பல தலைவர்கள் பல முறைகளைக் கையாண்டனர். தம் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அளித்து, தியாகிகளாக விளங்கியவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்கா.

தீங்கு செய்வதிலும் நன்மையுண்டு என்பது உலகறிந்த உண்மை. பிரிட்டிஷ் ஆட்சியை நீடித்து நிலைக்கச் செய்யச் சிலர் நமக்குக் கொடுமையிழைத்தனர். அதுவும், நாட்டில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டச் செய்த நடவடிக்கைகள் சுதந்திர வெறியையே ஊட்டின.

## முதல் திருப்பம்

பிரிட்டிஷ்க்காரர்கள் நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள். அவர்களிடம் நியாயத்தை எடுத்துக்காட்டியே நாட்டின் விடுதலையைப் பெற்றுவிடலாம் என்று கனவு கண்டவர் தாதாபாய் நவரோஜி. சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்று அதனிடம் விளையாடுவதைப்போல, இவர் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குப் (காமன்ஸ் சபை) போட்டியிட்டு மூன்று முறை தோற்று, நான்காவது முறை வெற்றி பெற்று அம்மன்றத்தின் உறுப்பினராகி இந்தியாவிற்கு நியாயம் வழங்கவேண்டும் என்பதைப் புள்ளி விவரங்களுடன் எடுத்து விளக்கினார். வில்லியம் வெட்டர்பான், கெயின் ஹிண்ட்மான் போன்றவர்கள் இந்தியாவின் கோரிக்கைக்கு ஆதரவளிக்க முன்வந்தது தாதாபாயின் பணியின் காரணமாகத் தான். கெய்ன் ஒரு சமயம் குறிப்பிடும்போது ''ஆங்கிலேயர்களாகிய நீங்கள் ஏன் இந்தியர்களுக்காகப் பரிந்து பேசுகிறீர்கள்? பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள் சுகமாகத்தானே இருக்கிறார்கள். அவர்கள் யாரும் எதுவும் கேட்பதாகத் தெரியவில்லையே! என்று என்னிடம் கேட்கிறார்கள். இந்தியர்களாகிய நீங்கள் விடுதலை கோரும் ஆர்வமற்று, பாவம் இந்தக் கிழவரை (தாதாபாய்) தொல்லைக்குள்ளாக்குகிறீர்களே" என்று பேசினார். நம் நாட்டினர் விடுதலை வேண்டும் என்று கேட்கவும் துணிவற்று இருந்த காலம் அது.

## இரண்டாவது திருப்பம்

சிப்பாய்க் கலகம் என்று கூறப்படும் முதல் சுதந்திரப் போரை பிரிட்டிஷார் வெற்றிகரமாக ஒடுக்கிவிட்டனர் என்றாலும் நாட்டில் கொந்தளிப்பு மட்டும் முழுதுமாக அடங்கவில்லை. நீறுபூத்த நெருப்புப்போல் சுதந்திர வேகம் இருந்து கொண்டே இருந்தது. மக்கள் எப்போது மீண்டும் கிளர்ச்சி செய்வார்களோ என்ற பயம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு இருந்தே வந்தது.

இந்தியர்களின் துயரங்களுக்கு முடிவுகட்ட அவர்களுக்கென்று ஒரு தேசிய ஸ்தாபனம் வேண்டும் என்று எண்ணியவர் ஹியூம் என்பவர். இதற்கான முயற்சிகளையும் அவரே செய்தார். வைஸ்ராய் டப்ரினும் இந்த ஸ்தாபனம் ஏற்பட ஆதரவு அளித்தார். ஆளுபவர்களுக்கு அக்கறை ஏன்?

1857-ஆம் ஆண்டு புரட்சி போல மற்றொரு கிளர்ச்சி கிளம்பலாம் என்ற சூழ்நிலை நாட்டில் இருந்தது. 1870-ல் நாட்டில் பல இரகசிய சங்கங்கள் வேலை செய்வது கண்டுபிடிக்கப்பட்டன. மக்கள் உணர்ச்சி பயங்கர வழியில் பாயாமல் இருக்க ஒரு ஸ்தாபனம் நிறுவ முயற்சி நடந்தது. இதுதான் வைஸ்ராய் ஆதரவின் இரகசியம்.

பம்பாயில் நடைபெற்ற முதல் காங்கிரசுக்கு, பம்பாய் மாநில ஆளுநராக இருந்த 'ரே'யைத்தான் தலைமை வகிக்கச் சொல்வதாக இருந்தது. ஒரு இந்தியர் தலைமை வகிப்பது நல்லது என்று கருதப்பட்டதால் உமேஷ் சந்திர பானர்ஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோபாலகிருஷ்ண கோகலே ஹியூமைப் பாராட்டி லண்டனில் பேசியபோது இந்திய தேசிய காங்கிரசை இந்தியர் எவரும்

ஆரம்பித்திருக்க முடியாது. இந்தியர்களிடம் பிரிட்டிஷாருக்கு அவ்வளவு அவநம்பிக்கை என்று குறிப்பிட்டார்.

**மூன்றாவது திருப்பம்**

விடுதலைப் போரில் மகாத்மா காந்தி தலையிடுமுன் புரட்சியே தலைதூக்கி நின்றது. புரட்சிக்காரர்களைப் பயங்கரவாதிகள் என்று அந்நிய ஆட்சி வருணித்தது. உண்மையில் அவர்கள் பயத்தை இந்தியர் உள்ளத்திலிருந்து விரட்டிய தியாக சீலர்கள்.

புரட்சி நடந்தபோதெல்லாம் இந்து முஸ்லீம் ஒற்றுமையைக் கண்ட ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கம் வேரூன்ற பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடிக்கலாயினர். வங்காளத்தின் கீழ்ப்பகுதியில் முஸ்லீம்கள் அதிகம். மேற்குப் பகுதியில் இந்துக்கள் மிகுதி. ஆகவே, கவர்னர் ஜெனரலாக இருந்த கர்ஸான் பிரபு வங்காளத்தைக் கிழக்கு வங்கம் என்றும் மேற்கு வங்கம் என்றும் பிரித்தனர். 1905-ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ஆம் நாள் வங்கம் இரு துண்டாயிற்று. மக்கள் கிளர்ச்சிக்குப் பின்னர் வங்காளம் மீண்டும் ஒன்றாகியது. ஆனால் 1947-ல் பாகிஸ்தான் பிரித்தளிக்கப்பட்டபோதுதான் கிழக்கு வங்கம் மறுபடியும் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.

இப்பிரிவினையை எதிர்த்து நாடே கொதித்தெழுந்தது. இக்கிளர்ச்சி சுதேசி இயக்கமாகவும் அந்நியத் துணி பகிஷ்காரமாகவும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. பங்கிம் சந்தரரின் வந்தே மாதர கீதம் புரட்சி வேகத்தை அதிகரிக்கச் செய்தது. 'வந்தே மாதரம்' என்ற ஒலியைக் கேட்டே ஆங்கிலேயர்கள் நடுங்கினர். இப்புரட்சியின் எதிரொலியால் காங்கிரஸில் மனுப்போட்டுக் கொண்டிருந்த மிதவாதிகளின் செல்வாக்குக் குறைந்தது.

திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோர் சுதந்திர வேகத்தை மக்களிடையே பரப்பினர்.

**நான்காவது திருப்பம்**

அன்னிபெசன்ட் அம்மையார் தான் 'ஹோம்ரூல்' (சுயாட்சி) இயக்கத்தின் 'மாதா'. இந்தியாவின் கல்வியும், கலையும் கலாசாரமும் வரவரக் குறைந்துபோவதற்குக்காரணம் பிரிட்டிஷ் ஆட்சியே என்ற உண்மையை இவர் துணிந்து கூறினார். இந்தியாவுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று அவர் பாடுபட்டார்.

இதற்காக இவர் பிரச்சாரம் செய்து வந்ததுடன் அங்கங்கே சுயாட்சிச் சங்கங்களையும் நிறுவி வந்தார். இவருடைய ''நியூ இந்தியா' பத்திரிக்கையில் "ராஜத்துவேஷம்' கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன என்றும், இனி அம்மாதிரி எழுதப்படாமலிருக்க ரூ.20,000 ஜாமீன் கட்டவேண்டும் என்று சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. அப்போது சென்னை கவர்னராக இருந்த பெண்ட்லண்ட், அன்னிபெசன்ட் அருண்டேல், வாடியா இம்மூவரையும் காவலில் வைத்தார். இந்தியாவெங்கும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் நாடு கொதித்தெழச் செய்தவர் பெண்ட்லண்ட்.

**ஐந்தாவது திருப்பம்**

நாடு முழுவதும் சுதந்திரக் கனல் பறக்கச் செய்த பெருமை ஜெனரல் டயர் என்ற ஒரு ராணுவ அதிகாரியையே சாரும். சீக்கியர்களைக் கொண்ட பஞ்சாப் படை வீரத்திற்குப் பேர் போனது. இங்கு காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெறாமல் தடுக்க பஞ்சாப் கவர்னர் டயர் விரும்பினார். அப்போது பஞ்சாப் மக்களின் மனதைக் கவர்ந்த தலைவர்கள் டாக்டர் சத்யபால், டாக்டர் கிச்லு இவர்களைக் கைது செய்து எங்கோ அழைத்துச் சென்றுவிட்டார்கள். இது மக்களிடையே பெரும் கொதிப்பை ஏற்படுத்திவிட்டது.

அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டிக்க 1919 ஏப்ரல் 13-ம் நாள் ஜாலியன்வாலாபாக் மைதானத்தில் சுமார் 20,000 பேர் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இந்த மைதானத்திற்குக் குறுகலான ஒரே ஒருவழி, கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே திடீரென்று படைகள் வரும் சத்தம் கேட்டது. நூறு இந்தியச் சிப்பாய்களுடனும் ஐம்பது வெள்ளை சோல்ஜர்களுடனும் டயர் என்று ராணுவ அதிகாரி வந்தார். அரை மணிநேர கூட்டத்தினர் மீது சுடச் செய்தார். சுமார் 1600 குண்டுகள் சுட்டுத் தீர்க்கப்பட்டன. 'தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன; இல்லையேல் மேலும் சுட்டிருப்போம்' என்று கொக்கரித்தார் டயர்.



ஜாலியன் வாலாபாக் படுகொலை

காந்திஜியும் சரோஜினிதேவியும் தங்களுக்கு பிரிட்டிஷார் அளித்த கெய்ஸ்ரி ஹிந்த் மெடல்களைத் திருப்பிவிட்டனர். ரவீந்திரநாத் தாகூர் ''சர்' பட்டத்தை உதறித் தள்ளினார். மிதவாதியாக இருந்த மோதிலால் தீவிரவாதியானார்.



## ஆறாவது திருப்பம்

இந்தச்சமயத்தில்தான் காந்தியடிகள் அரசியலில் நுழைந்து அகிம்சை வழியில் போராட்டத்தைத் திருப்பினார். இவருடைய ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம் ஆகியன அயல்நாட்டினரைத் திணற வைத்தன.

இந்திய விடுதலைப் போராட்டச் சரித்திரத்திலேயே காந்தியடிகள் நுழைவு ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. உலகத்திற்கே வழிகாட்டும் ஒரு புதுப்பாதையை அடிகள் இந்தியாவிற்கு வகுத்துக் கொடுத்தார்.

தியாகிகள் உயிர்ப் பலியாவதைத் தடுக்க முயற்சி எடுத்தவர் காந்தியடிகள். இவர் இந்திய அரசியலில் தோன்றிச் சத்தியம், அகிம்சை என்ற இரு ஆயுதங்களையும் உபயோகிக்காமல் இருந்திருந்தால் இன்னும் கணக்கில்லாத பேர் நாட்டிற்காக மாண்டு மடிந்து போயிருப்பார்கள்.

நாட்டிற்குச் சுதந்திரம் எதனால்? பிரிட்டிஷாரின் மனம் மாறியதாலா? புரட்சியாளர்களின் கிளர்ச்சியாலா? சுபாஷ் சந்திர போஸ் தனி ராணுவம் அமைத்துப் படையெடுத்ததாலா? சாத்வீகப் போராட்டத்தினாலா? அல்லது 'வெள்ளையனே வெளியேறு' என்ற ஆகஸ்டுப் புரட்சி காரணமாகவா?

இவ்வளவும் ஒரு காரணத்தினால்தான் என்று சொல்ல முடியாது. இவை எல்லாம் ஒவ்வொரு வகையில் சுதந்திரம் கிடைக்க உதவியிருக்கலாம். எது எப்படியானாலும் நாட்டைப் பிரிவினை செய்யாமல் சுதந்திரம் பெற முடியவில்லை. காந்தியடிகள் கடைசி வரை நாட்டின் பிரிவினையை ஆதரிக்கவில்லை. வேறு வழியில்லாமல் நாடு பிரிவினையாகிச் சுதந்திரம் அடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த அன்று காந்தியடிகள் கல்கத்தாவில் உண்ணாநோன்பிருந்துதான் கொண்டாடினார். அவர் வாழ்த்துச் செய்தி இல்லாமலேயே நாட்டின் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது விந்தையல்லவா?

# நீலன் சிலையகற்றும் போராட்டம்

டாக்டர் ந.க. மங்களமுருகேசன்

இந்திய விடுதலைப் போரில், தமிழகம் தலையாய பங்கினை ஆற்றியிருக்கிறது. 1857ஆம் ஆண்டு வடபுலத்தில் நடைபெற்ற பெருங்கிளர்ச்சியின் தாக்கம் தென்னகத்தில் இல்லை என்று கூடத் தவறாகக் கணித்தனர். நீறுபூத்த நெருப்பாக வெடி மருந்து கெட்டிக்கப்பட்ட பீரங்கியாகத் தமிழ்மண் வெடிக்கத் தயாராய் விளங்கி வந்தது.


1857ல் இந்திய மக்களைக் கொன்று குவித்த நீல் என்னும் ஆங்கிலேயன் சிலை அகற்றப்படவேண்டும் என்று எண்பது ஆண்டுகள் கழித்து ஒரு மாபெரும் அறப்போரினைச் சென்னையில் நிகழ்த்தினர் என்றால், சிந்தையில் அந்த 1857ஆம் ஆண்டு போர் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்னும் உண்மை விளங்கும்.

நீலன் என்னும் நீல் யார்? 1857ல் முதல் இந்திய விடுதலைப் போர் என்றும், முதல் மாபெரும் கலகம் என்றும், சிப்பாய்க்கலகம் என்றும் பல்வகையாகக் கூறப்பட்ட அந்த மாபெரும் நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆங்கிலேயத் தளபதிகளில் ஒருவனே நீல். அப் பெருங்கலகத்தை ஒடுக்க டெல்லிக்கு இந்தியா முழுமையிருந்தும், அன்று ஆண்ட ஆங்கிலேயர் தங்கள் படைகளைத் திரட்டியே பாரதப் போராளிகளை ஒடுக்க முயன்றனர். அவ்வாறு சென்னையிலிருந்து துப்பாக்கிப் படையொன்று நீல் தலைமையில் வடபுலம் சென்றது. அங்கு நம்மவர்களுக்கு எதிராக இயங்கியது.

துப்பாக்கிப் படைக்குத் தலைமையேற்ற நீல், அவன் கடமையைத்தானே செய்திருப்பான் என்று



கூறலாம். ஆனால் நீல் என்னும் நீலன் இந்திய வீரர்களை ஒடுக்குவதில், அடக்குவதில் எல்லை மீறிச் செயல்பட்டான். வீரசவர்க்கார் 'எரிமலை' என்னும் தலைப்பில் இப்பெரும் புரட்சி குறித்து நூல் ஒன்று தீட்டினார். அந்நூலில் 1857ஆம் ஆண்டுப் போரில் நீல் செய்த கொடுங்கோன்மைகள் குறித்து நெஞ்சம் பதைக்கத் தீட்டியிருந்தார்.



அந்த நீலனுக்கு அன்றைய ஆங்கிலேய அரசு 1857ல் பணியாற்றிய திறனுக்குப் பரிசாகச் சிலை ஒன்றைச் சென்னையில், ஸ்பென்சர் நிறுவனம் அருகில் அமைத்திருந்தது. நீல் யார்? என்பது தெரியாமலேயே அச்சிலை நீண்ட நாட்களாக அங்கே இருந்து வந்தது.

வீரசவர்க்காரின் 'எரிமலை' நூலைப் படித்த தமிழக இளைஞர்கள் விழித்துக்கொண்டனர். சென்னையில் உள்ள சிலை கொடுங்கோலன் நீல் சிலை என்று உணர்ந்தனர். போராட்ட உணர்வு, அந்நிய ஆதிக்கத்தின் ஒவ்வோர் எச்சத்தையும் எதிர்த்துத் தூளாக்கும் உணர்வு கொண்ட இளைஞர் கூட்டம் நீல் சிலை அகற்றப்படவேண்டும் என்ற அவாவினை நெஞ்சத்தில் ஏந்தினர்.

இதற்கு முன்னோடியாக விளங்கியவர் என்.கே.திருமலாச்சாரியார். 'இந்து' இதழில் நீல், கொடுங்கோலன், சென்னையில் சிலை இருப்பது அவமானம், அச்சிலை அகற்றப்படவேண்டும் என்று அறிக்கை ஒன்று வெளியிட்டார். இதனைப் படித்த இளைஞர்களின் தேசிய உணர்வு பட்டை தீட்டப்பெற்ற கூர்வாளாயிற்று.

1927 ஆகஸ்டு 11ஆம் நாள் காலை முகம்மது சாலியா, சுப்பராயலு என்னும் விடுதலைப்போர் வீரர்கள், சிலையின் ஏணியில் ஏறி நீல் சிலையினைச் சிதைக்கத்தொடங்கினர். நீல் சிலையின் கையிலிருந்த வாள் முனையினை ஒன்றரைஅடி சிதைத்தனர். வெண்கலச் சிலையாயிற்றே. அவ்வளவு எளிதாக நீக்கிட இயலுமா?

அவ்வழியே பலரும் சென்றனர். இன்று போல் அன்றைய 'மவுண்ட் சாலை' அவ்வளவு மக்கள் கூட்டம் செல்லும் சாலை இல்லை-என்றாலும், பலரும் அவ்வழியே சென்றனர். சென்றவர் எவருக்கும் சிலை அழிப்புப் போர் நடைபெறுகிறது, சிலை சிதைப்பு வேலை நடைபெறுகிறது என்ற எண்ணமில்லை. சிலையைத் தூய்மைப்படுத்துகிறார்கள் என்றே பலரும் எண்ணிச் சென்றனர்.

ஆனால் அவ்வழியாகச் சென்றவர்களில் ஒருவரான 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகை ஆசிரியர் 'வெல்பி' என்ற ஆங்கிலேயர் மட்டும், சிலையில் நடப்பது துடைப்புப்பணியல்ல, உடைப்புப்பணி என்று உணர்ந்து தெளிந்துகொண்டார். அலுவலகம் சென்றவர் காவல் துறைக்குத் தகவல் அளிக்கவும் தயங்கவில்லை. காவலர்கள் வந்தனர், கைது செய்தனர் அவர்கள் இருவரையும். ஆறு மாதச் சிறைத்தண்டனை ஏற்றனர் அவ்விருவரும்!

இதனைப் பொதுமக்களுக்கு அறிவித்து அவர்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிடப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. சிலையை அகற்றும் போராட்டம் குறித்துப் பொதுக்கூட்டம் நடத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் குடியாத்தம் சாமிநாதன், சேலம் சுப்பிரமணியம், டி.ஜி. இலட்சுமணசாமி, பண்ருட்டி தேவநாகய்யா முதலியவர்கள்.

விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.என்.சோமையாஜுலு நீல் சிலையகற்றும் போராட்டம் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தியதற்காக ஐந்து மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

அதன்பின் புலுசு சாம்பமூர்த்தி சிலையகற்றும் போராட்டத்தைத் தொடர்ந்தார். இப்போராட்டம் ஆடவர்கள் மட்டுமே பங்கேற்ற போராட்டமல்ல. விடுதலை வேள்வியில் பெண்களும் பங்கேற்ற வீரப்போராட்டம் என்றும் கூறலாம். இப்போராட்டத்தில் பங்கேற்ற வீரப்பெண்மணி கடலூர் அஞ்சலையம்மாளின் பங்கு குறிப்பிடத்தக்கது.



அஞ்சலையம்மாளின் குடும்பமே சிலையகற்றும் சீரிய போராட்டத்தில் பங்கேற்றது. கைக்குழந்தையோடு காராக்கிரகம் சென்றார் அஞ்சலையம்மாள். அன்றைய நாளில் கைக்குழந்தையோடு சிறைசென்ற நிகழ்ச்சி இல்லம்தோறும் பரபரப்பாகப் பேசப்பட்ட நிகழ்ச்சி.

இப்போராட்டத்தில் பங்கேற்றவர்களில் குறிப்பிடத்தகுந்த வேறுசிலர், திருமங்கலம் நித்தியானந்தம் அடிகள், டி.செ.சொக்கலிங்கம், செ. வெங்கட்டராமன், மதுரை சிதம்பர பாரதி, சேலம் சுப்பிரமணியம், விருதுநகர் முத்துசாமி, டி.ஜி.இலட்சுமணிசாமி ஆகியோர்.

நீல் சிலையகற்றும் இப்போராட்டம் காந்தியண்ணலின் வாழ்த்தைப் பெற்ற போராட்டங்களில் ஒன்று.

இராஜாஜி முதலமைச்சராகப் பதவியேற்றதும் இந்தக் கொடுங்கோலனின் சிலையகற்றப்பெற்றுச் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

இன்றும் அச்சிலை விடுதலைப்போரின் ஒருபெரும் உணர்ச்சிப் போராட்டத்திற்கு மௌன சாட்சியாக அங்கே இருக்கிறது.

# சுதந்திரப் போராட்ட காலத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்கள்

இந்த இருபதாம் நூற்றாண்டில் பெருகியுள்ள அறிவியல் சாதனங்கள் அனைத்து வகைச் செய்திகளையும் சுருக்கித் தெரிவிக்கின்றன.



சென்னை மாநகரிலே நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் சிகாகோ நகருக்கே சில நிமிடங்களில் போய்ச் சேர்ந்துவிடுகின்றன.

அந்தக் காலத்தில், அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய நாட்டில் சுதந்திரக்கனல் மூண்டிருந்த நேரத்தில், என்ன விலை கொடுத் தேனும் இந்தியாவை மீட்கத் தியாகச் செம்மல்கள் பலர் துணிந்து நின்ற போது - இத்தகைய செய்தித்துறை எதுவும் இருந்திடவில்லை; தனியே இப்போதுள்ள அளவிற்கு அறிவியல் துறையும் உடனுக்குடன் செய்திகளை அனுப்பிடும் வகையில் முழு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் களத்தில் நின்ற வீரருக்குச் செய்தித் தாள்கள் சில கை கொடுத்தன; தப்பித்தவறி-தத்தித் தவழ்ந்து வெளியிடப்பட்ட செய்திப்படங்கள் சில தெம்பூட்டின.

**பிரச்சார அதிகாரி**

நாம் சுதந்திரமடைவதற்குச் சில காலத்திற்கு முன்பே கூட, செய்திகளைப் பரப்ப பிரிட்டிஷ் அரசு என்ன செய்தது தெரியுமா?

பிரிட்டனின் நியாயத்தை, இட்லரின் ஏதேச்சதிகாரத்தை நம் இந்திய மக்களிடையே பரப்பி - நமது ஒத்துழைப்பைப் பெற்றிட 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 16ஆம் நாள் போர்ப் பிரச்சார அதிகாரி ஒருவரை நியமித்தது. அப்போது, வட்டாரப் போர் ஆலோசனைக் குழுச் செயலாளராக இருந்த ஹார்வி என்பவரே, அவ்வாறு நியமிக்கப்பட்ட முதலாவது பிரச்சார அதிகாரியாவார். 1946ல் போர் முடிவடைந்த போது தான் அவர் பதவி விலகினார்.

ஆனால், அந்தப் பணி சென்னை மாகாணப் பிரதமராக இருந்த, ஆந்திர கேசரி பிரகாசம் அவர்களால் மீண்டும் புத்துயிர் பெற்றது.



சுதந்திரப் போராட்டக் காலத்தில் - ஏடுகள், நாடகங்கள், சொற்பொழிவுகள் கவிதைகள், மேடைப்பாடல்கள் போன்றவைகளே தலைசிறந்த மக்கள் தொடர்புச் சாதனங்களாக விளங்கின.

இந்த வகையில் மகாகவி பாரதியார், திரு.வி.க.,வ.உ.சி., வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய சிவா, தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, சத்திய மூர்த்தி, விசுவநாத தாஸ், கிருஷ்ணசாமிப் பாவலர், சங்கரதாஸ் சுவாமிகள், சுந்தரவாத்தியார் - போன்ற சான்றோர் பலரும் மேற்கொண்ட முயற்சிகளை, பட்ட பாடுகளை - அதனால் அடைந்த கேடுகளை நம்மால் மறக்கமுடியாது.


தமிழகத்தில் தமிழ்ப் பத்திரிகை உலகைப் பொறுத்தவரையிலே - ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களே தமிழ்ப்பத்திரிகை உலகின் தந்தை எனப்படுகிறார். 1882-ல் அவரால் முதன்முதல் தொடங்கப்பட்டது 'சுதேசமித்திரன்' தமிழ் வார ஏடு; அடுத்த ஏழாண்டுகளில் அது தினசரி ஏடாயிற்று. ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் அதற்கு முன்பாக 1878-ல் 'இந்து' நாளிதழ் சென்னை மாநகரிலே, ஆங்கிலத்திலே தொடங்கப்பட்டது.

1885ல், இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றத்திற்குப் பின், செய்தித் தாள்களின் வளர்ச்சி அதிகமாயிற்று.

பிறகு அடுத்ததாகப் பாரதியார் சொல்லப்படுகிறார். 'இந்தியா' 'சக்கரவர்த்தி', 'கர்மயோகி' 'விஜயா' போன்ற ஏடுகள் அவரால் ஆவேசக் கருத்துகளோடும் இனிய இலக்கிய மணத்தோடும் வெளியிடப்பட்டன.

**பிரிட்டிஷ் இந்தியா**

இந்தியாவை நம் இந்தியப் பெருமக்களில் பெரும்பாலான வர்களே 'பிரிட்டிஷ் இந்தியா' என்று குறிப்பிடும் அளவிற்கு மதி மயங்கிக்





கிடந்த காலம் அது. 'நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி' அப்படிக் கிடந்தவர்களைக் கண்டு, மகாகவி பாரதியார் பெரிதும் குமுறினார்.

'நாமிருக்கும் நாடு நம தென்பதறிந்தோம்...' என்று அவர்களை உணரச் செய்தார்.

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே !....'

- என்று பாடி நம்மவர்களை மகிழ்வித்தார்.

'அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே !....'

– என்றெல்லாம் பாடி நம் நாட்டு மக்களிடையே எழுச்சியூட்டினார். அதன் விளைவு ஆங்கில ஏகாதிபத்தியம் அவருக்குக் குறி வைத்தது. 'ஞானக் கிறுக்கன்' என்று தன்னைச் சொல்லிக் கொண்டிருந்த அவரா அதில் சிக்குவார்?

'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே...'

- என்று இந்தியா சுந்திரம் பெற்றிடு முன்பே பாடிக்களித்த பாரதியார் இங்கிருந்து தப்பி, புதுச்சேரிக்குச் சென்றார்.

அங்கே அந்நிய வெயில் அவர்மீது படாமல் நிழல் கொடுத்தவர்களில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிடத் தக்கவராவார். அவர் அந்நாளில் எழுதிய 'ராட்டினப் பாட்டுப்' போன்றவை இந்திய விடுதலைப் போராட்டத் தீயினுக்கு எண்ணெய் வார்ப்பதாக அமைந்தன.



## இரவில் பெற்ற விடுதலை

நம் இந்திய நாடு விடுதலை பெற்றதற்குப் பின்னாலேகூட, நலிவு தீராமல் அவதிப்பட்ட நாட்டு மக்களுக்குப் பெரிதும் கவலைப்பட்டார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

'...மக்களுக்குள்ள சிக்கல் அறுக்காமல்

எல்லார்க்கும் எல்லாம் என்னும் உரிமை

சொல்லால் செயலால் தொடவும் எண்ணிடார்!

இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார்அறி குவரே ?...'

- என்கிற பாடலே அதற்குத் தகுந்த சான்றாகும்.

இன்று புதுக்கவிதை எழுதும் பலருக்கு, அந்தக் கவிதையே இப்போதும் கை கொடுப்பதை நாம் பார்க்கிறோம்.



இந்திய விடுதலைக்கு மக்களை ஒன்று திரட்டக் குரல் கொடுத்த அந்நாளைய கவிஞர்கள் என்று பார்த்தால் - பாரதியும் பாரதி தாசனும் மட்டுமல்ல; கவியோகி சுத்தானந்த பாரதியார், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் போன் றோரையும் இங்கே நாம் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

## திரு.வி.க.வின் தேச பக்தன்

1917ல், திரு.வி.க.வை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தேசபக்தன்' பிறகு அவரே தொடங்கிய 'நவசக்தி' ஆந்திரத்தைச் சேர்ந்த டி.பிரகாசம் ஆங்கிலத்திலே நடத்திய 'சுயராஜ்யா' நாளிதழ் - சுப்பிரமணிய சிவாவின் 'ஞானபாது', 'பிரபஞ்சமித்திரன்', 'இந்திய தேசாந்திரி' வ.வே.சு. ஐயர் நடத்திய 'பாலபாரதி' போன்ற ஏடுகளெல்லாம் அந்நாளில் ஊட்டிய எழுச்சி அளவிடற்கரியது.

'தென்னாட்டுத் திலகர்' என்ற பெருமைக்குரிய டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு தொடங்கிய 'தமிழ்நாடு' நாளேடு, 1930ல் தொடங்கப் பெற்ற 'இந்தியா' நாளிதழ், 1934ல் வெளிவந்த 'எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் 'தினமணி', 1933ல் வெளியிடப் பட்ட 'ஜெயபாரதி' என்று பார்த்துக்கொண்டே போனால் - 1935ல் ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்கள் தொடங்கிய 'குடியரசு', 1942ல் திருவாரூரில் கையெழுத்தேடாகத் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கிய 'முரசொலி', அதே 1942ல் தேசிய ஏடாகவே சி.பா. ஆதித்தனார் தொடங்கிய 'தந்தி' வரை பார்ப்போமானால், இந்திய மக்கள் எதற்கும் அஞ்சாமல் நெஞ்சுறுதியுடன், பாடுபட அந்த ஏடுகள் யாவுமே ஒவ்வொரு வகையில் பெரிதும் பணியாற்றி யுள்ளன என்பது விளங்கும்.

அதன் காரணமாகவே - மக்கள் தொடர்புச் சாதனமாகப் பயன்பட்ட பத்திரிகைகளை அடக்க 'அச்சகச் சட்டம்' (PRESS ACT) என்ற பெயரால், பிரிட்டிஷ் வைஸ்ராய் அடக்குமுறைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். 1870ல் அதற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. பிறகு 1878ல் இந்திய மொழி பத்திரிகைச் சட்டம் **(VERNACULAR ACT)** என்றெல்லாம் ஏதேதோ சட்டமெல்லாம் போடப்பட்டன.

அடக்குமுறைச் சட்டம் அப்போது மட்டும் தானா? இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலேயும்.அதன் வேகத்தை நாம் அனுபவித்திருக்கிறோம். 1975ல் தமிழகத்தில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது - படங்களையும் செய்திகளையும் கூட மத்தியத் தணிக்கை அதிகாரிகளிடம் காட்டி அனுமதி பெற்ற பிறகுதான் பத்திரிகைகளில் வெளியிட வேண்டும் என்றொரு நிலை இருந்தது நமக்குத் தெரியும்.

ஒருநாள் 'முரசொலி'க்கான எந்தச் செய்தியையுமே அவர்கள் அனுமதிக்காத நிலை வந்தபோது - 'வெண்டைக்காய் விலை குறைவு விளக்கெண்ணெய் உடம்புக்கு நல்லது' என முதல் பக்கமே வேடிக்கையாக ஒரு 'பேனர்' செய்தியையே முரசொலியில் வெளியிட்ட வேதனையான வேடிக்கையையும் இந்த நாடு கண்டிருக்கிறது.

எனினும், அவ்வாறான கெடுபிடிகளையெல்லாம் தாண்டி - நெருப்பில் பூத்த மலராக உருவான மகத்தான மக்கள் தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகளின் பணி துப்பாக்கித் தோட்டாக் களைவிட எழுத்தின் வலிவே இணையற்றது என்பதை உலகுக்கு உணர்த்திவிட்டது.

**இன்னல்கள் தீர்ந்தன !**




இந்தியா சுதந்திரம் பெற்று விட்டது; நம் இன்னல்கள் யாவும் தீர்ந்து பொய்யாகிவிட்டன!

'செய்தி' என்கிற சொல்லுக்கு நமது தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் ஒருமுறை வேடிக்கை யாகச் சொன்ன விளக்கம் இங்கே குறிப்பிடத்தக்கது:

"செய்யப்படுகிற காரியங்கள், தீப்போலப் பரவுவதால் 'செய்தி' என்கிற சொல் உண்டாகி யிருக்கலாம் போலும்!"

- அவர் இப்படிச் சொன்னது உண்மைதானே? செய்திகள்தான் எத்தனை வேகமாகப் பரவு கின்றன! வேகம் சரிதான், ஆனால் விவேகம் தேவையில்லையா? உங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்.

- பி.எல். ராஜேந்திரன்





சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பண்டித ஜவஹர்லால் நேரு 15.8.1947 அன்று பதவி ஏற்கிறார்.

மருத்துவம்:

# இரத்தக் கொதிப்பு

டாக்டர் என். சுவாமிநாதன்

பொதுவாகவே, மக்களுக்கெல்லாம் வரவரத் தேவைகள் அதிகமாகிவிட்டன; இதனால், தேவையில்லாத பரபரப்புக்கு அவரவரும் ஆளாகிவிடுகின்றனர்.

பணம், பணம், பணம் - இதுதான் எல்லோருடைய வேகத்திற்கும் அவசரத்திற்கும் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. பிள்ளைகளை மேல்படிப்பு படிக்கவைக்க, ஊரே மெச்சும்படி திருமணம் நடத்த, மாடிமேல் மாடி வைத்து என்று கூட அல்ல; ஒரே ஒரு மாடியுடனாவது வீடுகட்ட, வண்டி - வாகன வசதியை உண்டாக்கிக் கொள்ள, பார்ப்பவர்கள் வியக்கும்படியான பரவச வாழ்க்கை வாழ, எப்பாடுபட்டாவது - நகை நட்டுகளை, நிலபுலன்களைப் பெருக்கிக் கொள்ள என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான ஆசைகளுக்கு உள்ளாகி, அதையும் அவசரமாகச் சாதித்துவிட வேண்டும் என்கிற பரபரப்போடு பம்பரம்போல இயந்திர கதியில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டனர்.

வீணான இந்த வேகம்தான் பலவகையான நோய்களுக்கும் மூலகாரணமாகி விடுகிறது. குறிப்பாக - சாதாரணமாக அவரவருக்கும் உள்ள இரத்த அழுத்தமானது - உயர் இரத்த அழுத்தமாக, இரத்தக் கொதிப்பாக மாற இவ்வாறான பரபரப்பும், படபடப்பும் முக்கியக் காரணங்களில் ஒன்றாக அமைகிறது.

## இரத்த அழுத்தம்

நம் உடலில், இரத்தம் இதயத்திலிருந்து வெளியேறி, இரத்தநாளங்கள் வழியாக உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, திரும்பவும் இதயத்திற்கு வருவதற்கு ஒரு குறிப்பிட்ட அழுத்தம் (Pressure) இரத்த நாளங்களில் தேவைப்படுகிறது. இதையே இரத்த அழுத்தம் என்கிறோம்.


உதாரணத்திற்கு நம் வீட்டில் உள்ள தண்ணீர்க் குழாய்களில் தண்ணீர் சீராக வரவேண்டுமென்றால் அதற்கு ஒரு குறிப்பிட்ட அழுத்தம் (Pressure Head) தேவைப்படும் அல்லவா? அதைப் போல்தான் இதுவும். தோராயமாக நார்மல் இரத்த அழுத்தம் என்பது 120/80 இருக்க வேண்டும். நார்மல் இரத்த அழுத்தத்தின் வரையறை வயதிற்கேற்ப மாறுபடும்.

இதில் 120 என்பது சிஸ்டாலிக் (Systolic BP) எனவும் (இதயம் சுருங்கும்போது ஏற்படும் அழுத்தம்), 80 என்பது 'டயஸ்டாலிக்' (diastolic BP) எனவும் (அதாவது இதயம் விரியும் போது டயஸ்டாலிக் உள்ள அழுத்தம்) அழைக்கப்படுகிறது. இரத்த அழுந்தம் ஒரு சராசரி மனிதனுக்கு 140/90 என்பதற்குமேல் இருக்குமானால், அது உயர்இரத்த அழுத்தம் என்று அழைக்கப்படுகிறது. இதையே பேச்சு வழக்கில் 'ஹை/பிபி' (High BP) எனவும், இரத்தக் கொதிப்பு எனவும் குறிப்பிடுகிறோம்.

## இரத்தக் கொதிப்பினால் ஏற்படும் விளைவுகள்

இயல்பிலேயே, ஒருவருக்கு வயது ஏறஏற இரத்தக் குழாய்களில் அவர்களின் வயதிற்கேற்பக் கொழுப்பு (Cholesterol) படியும் அவ்வாறு கொழுப்புப் படிவதனால் இரத்தக் குழாயின் விட்டத்தின் அளவு குறைந்துவிடும். இதுமட்டுமன்றி, அதனுடைய விரிவடையும் தன்மையும் குறைந்துவிடும். உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு, இந்தக் கொழுப்பு படிவதானது மிகவும் விரைவில் நடைபெறும்.

அளவுக்கு அதிகமாகவும், விரைவாகவும் இக்கொழுப்பு படியும்போது, இரத்தக் குழாயின் விட்டம் மேலும் குறைந்து, இக் காரணத்தால் அதனூடே செல்லும் இரத்த ஓட்டத்தின் வேகம், மட்டுமன்றி அளவும் குறைந்துவிடுகிறது. மேலும் இரத்த ஓட்டத்தின் வேகக் குறைவு இரத்தம் நாளங்களுக்குள் உறைவதற்கும் (clotting) ஏதுவாகிறது.



அதுமட்டுமல்ல; இரத்த அழுத்தம் மிகவும் அதிகமாகும்போது இரத்த நாளங்கள் வெடித்து, இரத்தக் கசிவு உண்டாவதற்கும் வாய்ப்பாகிவிடுகிறது.

இவ்வாறு ஏற்படும் இரத்த ஓட்டக்குறைவு, உறைதல், இரத்தம் கசிதல் காரணமாகப் பல்வேறு உடற்பகுதிகளின் இயக்கம் மிகவும் பாதிக்கப்படுகிறது. மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை அதற்கு உதாரணங்களாகும்.


மேலும், புகைபிடித்தல், சர்க்கரை வியாதி, பருமனாயிருப்பவர்கள் மற்றும் உணவில் அதிக அளவு கொழுப்புச் சத்து சேர்த்துக் கொள்பவர்களுக்கு மேற்கண்ட பாதிப்புகள் - குறைந்த வயதிலும்கூட மிகவும் தீவிரமாகவும் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

இதயத்திற்குச் செல்லும் இரத்த நாளங்களில் இரத்த ஓட்டம் தடைபடுவதால் மாரடைப்பு நோய் ஏற்படுகிறது. (Heart attack). இது, உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் மிகவும் கொடிய நோயாகும். ஏறத்தாழ இந்நோய்கண்ட 50 சதவிகிதத்தினர் மருத்துவமனையை அடையுமுன்னரே இறந்துவிடுகிறார்கள்.

மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் அடைபடுவதால் பக்கவாதம் (Paralysis) மற்றும் இரத்தக் கசிவு ஏற்படுவதால் மயக்கநிலை (coma) ஆகியவை ஏற்படலாம். கண்களுக்குச் செல்லும் இரத்தநாளங்கள் உயர் இரத்தம் காரணமாகப் பாதிக்கப்படுவதால் கண்பார்வை குறையலாம் (Hypertensive Retinopathy); மேலும் சிறுநீரகத்தின் இயக்கமும் இதனால் பாதிக்கப்படக்கூடும் (Renal Failure).

**காரணங்கள்**

ஏறத்தாழ 95 சதவிகிதம் பேர்களைப் பரிசோதித்தோமானால் -



இந்நோய்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் இருப்பதில்லை. இதனை 'எசன்ஸியல் ஹைபர்டென்ஷன்' (Essential Hypertension) என்று குறிப்பிடுகிறோம்.

மீதமுள்ள 5 சதவிகிதம் பேர்களில், உயர் இரத்த அழுத்தமானது கீழ்க்கண்ட ஏதாவது ஒரு காரணத்தினால் இருக்கலாம்.

1. சிறுநீரக நோய்கள்
2. கட்டிகள் - அட்ரினலின் சுரப்பி கட்டிகள் (Phaeochromocytoma, Conn's Syndrome)
3. பிறவி இதயவியாதிகள் முக்கிய இரத்தக் குழாய் சுருங்கி இருத்தல் (Coarctation Aorta)
4. நீண்ட நாட்களுக்குக் கருத்தடை மாத்திரைகள் உட்கொள்ளுதல்
5. கர்ப்பத்தினால் ஏற்படும் உயர் இரத்த அழுத்தம் (Pregnancy Induced Hypertension)

**நோய் அறிகுறிகள்**

உயர் இரத்த அழுத்ததிற்கென்று குறிப்பிட்ட அறிகுறிகள் என்று தனிப்பட ஏதும் கிடையாது. பெரும்பாலானவர்களுக்கு உயர்இரத்த அழுத்தத்தினால் ஏற்படும். பின்விளைவுகள் (complications) தான் அவர்களை மருத்துவக் கவனிப்பின் கீழ் கொண்டுவரும்.

உதாரணம் மாரடைப்பு, பக்கவாதம் ஆகியவை ஏற்பட்ட பின்பே மருத்துவக் கவனிப்பின்கீழ் அவர்கள் வருகின்றனர்.

தலைவலி, தலைசுற்றல், மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் ஆகியவை உயர்இரத்த அழுத்தத்தின் அறிகுறிகளாகக் கருதப்பட்டாலும், பெரும்பாலான இரத்தக்கொதிப்பு நோயாளிகளுக்கு அறிகுறிகள் ஏதும் இருப்பதில்லை. இதையே வேறுவிதமாகக் கூறினால் சமுதாயத்தில் உள்ள இரத்தக்கொதிப்பு நோயாளிகளில் 50 சதவிகிதத்தினரே இனம் கண்டுபிடிக்கப்படுகின்றனர். அவர்களில் 50 சதவிகிதத்தினரே தொடர்ந்து முறையாக மருத்துவரிடம் பரிசோதித்துக் கொண்டு மருந்துகள் உட்கொள்கின்றனர். அவர்களிலும்கூட 50 சதவிகிதத்தினர்க்கே இரத்த அழுத்தம் மருந்துகளுக்கு முழுமையாகக் கட்டுப்படுகின்றது.

ஆனால், மக்களிடையே உள்ள இது குறித்த விழிப்புணர்வு காரணமாக மேற்கூறிய புள்ளிவிவரத்தில் இப்போது மெச்சத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொல்லலாம். இப்போதுள்ள உடல்நலம் பற்றிய விழிப்புணர்வு காரணமாகவும், அறிவியல் முன்னேற்றம் காரணமாகவும் பெரும்பாலான இரத்தக் கொதிப்பு நோயாளிகள் ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடிக்கப்பட்டு, தற்போதைய மிகச்சிறந்த பயனளிக்கும் மருந்துகளால் இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படுகின்றனர்.

ஆயினும், இன்னமும் சிலர் தமக்கு இரத்தக்கொதிப்பு நோய் என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகும், அதன் காரணமாகத் துவக்க காலத்தில் எந்த ஒரு சங்கடமும் (Symptoms) இல்லாததால், மிகவும்

# பெரியாரின் பிரிவாற்றாமை !

பெண்களுக்கு எதிலும் சமத்துவம் தரவேண்டும் என்று பாடுபட்டவர் தந்தை பெரியார். போராட்டங்களிலே கூட, ஆண்களோடு பெண்களும் இணைந்து போராட வேண்டும் என்று வலியுறுத்திவந்தார். தனது மனைவி

நாகம்மையாரையும், தம்மோடு போராட்டங்களிலே ஈடுபடுத்தி அவர் சிறைபுகுந்ததும் உண்டு.

நாகம்மையார் மறைந்தபோது, பெரியார் அந்தத் துயரம் ஆற்றொணாது எழுதிய வரிகள் நம் கண்ணிலும் கண்ணீர் வரவழைத்துவிடும்.

இதோ, தம் மனைவியின் பிரிவாற்றாமல் பெரியார் எழுதியதைத்தான் பாருங்களேன்.

“நான் சுயநல வாழ்வில் ‘மைனராய்’ ‘காலியாய்’ ‘சீமானாய்’ இருந்த காலத்திலும், எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்க முடியாத காரியம்!”

“நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை ஒவ்வொரு விநாடியும் நான் நன்றாய் உணர்ந்து வந்தேன்.



நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு

அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா?

ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா?

இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா?

உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா?

ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா?

எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா?

எதுவும் விளங்கவில்லையே!”

- அடடா, எவ்வளவு மனக்கிரக்கம் இருந்தால் இவ்வாறெல்லாம் எழுதியிருப்பார் பெரியார்?

-செய்தி : ந. தியாகராசன்

---

அலட்சியமாக இருந்துவிடுகின்றனர்; மருத்துவர் அறிவுரைகளையும் பின்பற்றுவதில்லை.

இதனால் பிற்காலத்தில் இவர்கள் இரத்தக் கொதிப்பின் மோசமான பின்விளைவுகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்; மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரகக் கோளாறு (Heart attack, Paralysis, Renal failure) போன்றவற்றுக்கு ஆளாகிறார்கள்.

## மருத்துவ அறிவுரைகள்

35 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தங்களது இரத்த அழுத்தத்தைக் கட்டாயமாகப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

உயர் இரத்த அழுத்தம் கண்டுபிடிக்கப்பட்டால், தக்க மருத்துவரின் ஆலோசனையை தவறாது பின்பற்ற வேண்டும். குறிப்பாக உணவில் உப்பின் அளவை மட்டுப்படுத்தவேண்டும்.

1. உடல் பருமன் அதிகமாக இருந்தால் குறைக்க வேண்டும்.
2. புகைபிடித்தல், மது அருந்துதலைத் தவிர்க்கவேண்டும்.
3. சர்க்கரை வியாதி இருந்தால், அதற்கான மருத்துவம் செய்துகொள்ள வேண்டும்.
4. கொழுப்பு மிகுந்த உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.
5. மருத்துவரின் ஆலோசனைப்படி உடற்பயிற்சி, யோக முறைகள், தியான முறைகள் ஆகியவற்றையும் கடைப்பிடிக்கலாம்.
6. முடிந்தவரையில் வாழ்க்கைப் பிரச்சினைகளை நிதானமாகவும், படபடப்பில்லாமலும் எதிர்கொள்ளப் பழக வேண்டும்.
7. இதனுடன் இரத்தக்கொதிப்பைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகளையும் மருத்துவர் பரிந்துரைப்படி உட்கொள்ள வேண்டும்.
8. மேலும் இதற்கான மாத்திரைகளைப் பெரும்பாலானவர்கள் வாழ்நாள் முழுவதும் உட்கொள்ள வேண்டியிருக்கும். மாத்திரை போட்டதும் ‘இரத்த அழுத்தம் சீராக (Normal) வந்துவிட்டது, ஆகையால் இனி மாத்திரை தேவையில்லை’ என்று விட்டுவிடுதல் கூடாது.
9. குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனையும், ஆண்டிற்கு ஒரு முறை இரத்தப் பரிசோதனை, எக்ஸ்-ரே, ஈ.சி.ஜி. சோதனை ஆகியவையும் செய்துகொள்ள வேண்டும்.
10. மருத்துவரின் ஆலோசனைகளைத் தவறாது அப்படியே பின்பற்றவேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி, இரத்தக்கொதிப்பை மட்டுப்படுத்தி, நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தைப் பெற மக்கள் முயலவேண்டும்.

இதைப் பற்றி ஒரு தனிப் புத்தகமே எழுதும் அளவுக்குச் செய்திகள் உண்டென்றாலும், சுருக்கித் தரப்பட்டிருக்கிறது; இரத்தக் கொதிப்பு பற்றி மேலும் விவரம் அறிய விரும்பினால், தக்க மருத்துவரிடமே ஆலோசனை கேட்கலாம். ●

ஆசியாவிலே முதன் முதலில் கலர் பட்டாசுகளை
பொட்டாசியம் குளோரைடு இல்லாமல்
தயார்செய்து அறிமுகப்படுத்தியவர்கள்

Telex : 0448-245 CORO IN

Office : 72043
24346

☆☆☆☆

☆☆☆

☆☆

☆

# SRI CORNATION FIRE WORKS

☆

☆☆

☆☆☆

☆☆☆☆

**Post Box No.278,**
**Sivakasi - 626 123.**
**Tamil Nadu.**
**Grams : STORK**

# தமிழகத்தின் முதல் கல்வியமைச்சர்

அண்ணல் காந்தியடிகள் சிறப்பான விஷயங்களைப் பற்றியே சிந்தித்தார்; அந்தச் சிந்தனைகளைச் செயல்படுத்தவே கண்துஞ்சாமல், பசி நோக்காமல் பாடுபட்டார்; தன்னலத்தைவிடப் பொது நலத்தையே அவர் பெரிதும் கருதினார்; வீட்டுப் பிரச்சினைகளைவிட, நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே நாட்டம் செலுத்தினார்; மற்றவர்களின் துயர்துடைக்கும் பணியில் ஈடுபடும்போது, அதன் காரணமாகத் தனக்கு வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சினாரில்லை; தெய்வபக்தி கொடுத்த தெம்போடு தியாகத் தழும்புகளை ஏற்றார்; தன்னை இம்சைக்குள்ளாக்க முயன்றவர்கள் முன்பும் அகிம்சையே வலிமை மிக்கதென வாதாடினார்; அவரது தலைமையை நம்பி ஏற்றவர்கள் கெட்டதில்லை; நம்பாதவர்கள் மனநிம்மதியோடு வாழ்ந்ததில்லை.

இத்தகைய இணையற்ற தன்மைகளாலும், பண்புகளாலும்தான், காந்தி - மகாத்மா காந்தியானார் என்பதே உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

### காந்தி வழி நடந்தவர்

அந்தத் 'தேசப் பிதா'வின் கொள்கைக் கோட்பாடுகளிலே பெரிதும் நம்பிக்கை வைத்து, அன்னாரின் அடியொற்றி நடந்தவர்கள் தமிழ்நாட்டில் பலர் உண்டு; அவர்களில் குறிப்பிடத்தக்க ஒரு பெருந்தகையாளரே திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களாவார்.

மகாத்மா காந்தியடிகளாரைத் 'தலைவர்' என்றழைத்துத் தம் இதயம் பூரிக்கும் அவர், தமது அணுக்கத் தொண்டர்களாலே "ஐயா" என்றே அன்புடன் அழைக்கப்பட்டார்.

இருபது வயது இளமைக் காலத்திலேயே - ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், மஹாபுருஷ்ஜி மஹாராஜ் என்றழைக்கப்படும் சுவாமி சிவானந்தா ஆகியோரின் பக்தி மார்க்கமே சக்தி மார்க்கம் என்ற எண்ணம் அவர் நெஞ்சில் ஆழப் பதிந்திருந்தது. நாளடைவில் மகாத்மா காந்தியடிகளாரின் பெரு முயற்சியால் இந்தியாவில் மூண்ட விடுதலை எழுச்சி அவரை முழுவதுமாக ஆட்கொண்டுவிட்டது.

அரசியல் ஈடுபாடு கொள்ளும் தம் விருப்பத்தை அவர் மிகுந்த பணிவோடு சுவாமி சிவானந்தாவிடம் தெரிவித்து அனுமதி வேண்டினார். மக்களுக்குத் தொண்டாற்றுவதும், இறைவனுக்குத் தொண்டு புரிவதும் வெவ்வேறல்ல என்ற கருத்தில் சுவாமிகள் அவரை ஆசீர்வதித்தார்.



"அச்சத்தை விடு, அன்புமகனே! நீண்ட நெடுங்காலம் நலமுற நம்மோடு வாழ்ந்திருக்கப் போகிற உனக்கு, எமது இதய அன்பும் நல்வாழ்த்தும் எப்போதும் உண்டு.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரை என்றும் எண்ணிச் செயல்படு; அவரிலிருந்து உன்னையோ உன்னிலிருந்து அவரையோ பிரிக்க முடியாதிருக்கையில் உனது செயல்கள் யாவும் வெற்றி பெறும். அவர் அருளாசியால் உன் கொள்கைகளுக்கு உறுதி சேரும்; வெற்றிப் பாதையில் சுவாமிகள் உன்னை வழி நடத்துவார்..." என்றெல்லாம் வாழ்த்தி வழியனுப்பி வைக்கப்பட்டார் அவர்.

மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுவதற்கல்ல; மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்வதற்கே வாழ்க்கை என்கிற உயரிய நெறிப்படி வாழ்ந்துவந்தார். இந்த ஒப்பற்ற மனிதர் உன்னத சேவைகள், நல்லிதயங்களால் பெரிதும் மதிக்கப்பட்டதுண்டு. 1920ல், முதன்முதல் சந்தித்தபோதே அண்ணல் காந்தியடிகள் அவரை மனந்திறந்து பாராட்டி மகிழ்ந்தார்.

### நான்கு முறை சிறைவாசம்

நாடு நலம் பெறுவதற்காகவும், அடிமையிருள் விலகி நாமெல்லாம் சுதந்திர ஒளி பெறுவதற்காகவும் எழுச்சிமயமாக மூண்ட விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டதனாலே 1930, 1932, 1941, 1942 ஆகிய ஆண்டுகளில் அவர் நான்கு முறை சிறைவாசம் சென்றதுண்டு. அப்போதெல்லாம் கிடைத்த ஓய்வில் கம்பராமாயணத்திலும், திருக்குறளிலும் அவர் மனம் லயித்தது.

துவளாத தொண்டுள்ளத்திற்குச் சொந்தக்காரரான அவர், 1934ல் மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1951ல் லோக் சபை உறுப்பினராகத் தேர்வு பெற்றார். 1957ல் ராஜ்ய சபை உறுப்பினராகிப் பெருமை பெற்றார். 1964ல் மீண்டும் லோக் சபைக்கும் சிபாரிசு செய்யப்பட்டார்.

1946ல் அவர் கல்வியமைச்சராக இருந்த காலம், தமிழ்நாட்டின் பொற்காலம் என்றே குறிப்பிடப்படும் அளவுக்குப் பெருமை பல பெற்றதாகும். ஆம்; அப்போதுதான், தமிழகத்தில் அடிப்படைக் கல்வித்திட்டம் - கொண்டுவரப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட மேநிலைக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பண்டிதர்கள் மட்டுமே படித்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்த திருக்குறளை இன்றைக்குப் பாமரரும் கற்றுக் களித்திடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதே? அதற்கு முழுமுதல் காரணகர்த்தாவே அவர்தான்!

ஆம்; அவர் கல்வியமைச்சராக இருந்த காலத்திலேதான், ஆறாம் வகுப்புப் பாடத் திட்டத்தில் திருக்குறள் சேர்க்கப்பட வேண்டும் என்ற சட்டம் வகுக்கப்பட்டது.

தமிழை முதன்முதலில் நம் பாடமொழியாக்கிய புகழுக்குரியவரும் அவர் தான். மகாகவி பாரதியாரின் கவிதைகளையும், அவரது படைப்புக்களையும் நாட்டுடைமை ஆக்கி அரசுப் பதிப்பாக முதன்முதல் வெளியிட்ட பெருமையாளரும் அவர்தான்.

### கலைக்களஞ்சியம்

தாயாம் தமிழில் உள்ள நம்மைத் தலை சுற்ற வைக்கும் சொற்களுக்கு விளக்கம்பெற 'கலைக் களஞ்சியத்'தைப் புரட்டுகிறோமே? 'குழந்தைகள் கலைக் களஞ்சியத்'தைக் கண்டு குதூகலிக்கிறோமே? அவைகளெல்லாம் உருவாக முதல் விதை ஊன்றியவரே திரு.தி.சு. அவினாசிலிங்கம்.

தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமங்களிலே கூட இன்று நூலக இயக்கம் காலூன்றிக் கவின் பெற்றிருக்கிறதல்லவா? அவர் அரும்பாடுபட்டு வகுத்த நூலகச் சட்டதிட்டங்களே அதற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

தன்னுடைய தந்தையார் பெயரிலும், தாயார் பெயரிலும் இரண்டு பாடசாலைகளை நிறுவ அவர் மேற்கொண்ட முதல் முயற்சி - இன்னும் பல்வேறு கல்விச் சாலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

தீண்டாமையின் வேரறுக்கப் பாடுபட்ட மகாத்மா காந்தியடிகள் அடிக்கல் நாட்ட, அவர் உருவாக்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம், கோவை மாவட்டத்தில் உள்ள பெரியநாயக்கன் பாளையத்தில் இப்போதும் ஒப்பற்ற ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

அதைத் தொடர்ந்து உருவான கலைக் கல்லூரி, அறிவியல் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, தொழில்பயிற்சிக் கல்லூரி, வேளாண்மைக் கழகம் - ஆகிய பலவும் அவர் புகழைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற தேசிய கவி பாரதியின் வாக்கை மெய்ப்பிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சி மகத்தானது. கோவையில் உள்ள மகளிர் மனைஇயல் கல்லூரி அதற்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

கிராமப்புற வளர்ச்சி கருதி அவர் தோற்றுவித்த விவேகானந்தாபுரம் மையம் நூற்றுக்கணக்கான கிராமங்களை அரவணைத்து ஆக்கம் பெறச் செய்து வருவது, உலகறிந்த உண்மையாகும்.

இப்படிப்பட்ட - இன்னும் ஏராளமான இணையற்ற சேவைகளுக்காக, புகழத்தகுந்த புனிதத் தொண்டுகளுக்காக இந்திய அரசு அவருக்குப் 'பத்மபூஷன்' விருது வழங்கிப் பாராட்டியது. தமிழ் நாடு அரசு 'செந்தமிழ்ச் செல்வர்', 'தமிழ்ச் செம்மல்' விருதுகளை வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்ப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் அளித்துப் பெருமை கொண்டது. 'ஜம்னாலால் பஜாஜ் விருது'ம் அந்த சரித்திர புருஷருக்குத் தந்து சிறப்பிக்கப்பட்டது.

இவ்வளவு அரிய சிறப்புகளுக்கெல்லாம் உரியவரே திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களாவார்.

- ராஜீ

# தென்னாட்டுத் திலகர்

- ஆர்.ஆர்.தளவாய்,
- டாக்டர் எம்.அசோகமித்திரன்

தென்னாட்டுத் திலகர் என்கிற அளவுக்குச் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டு அரியது செய்த பெருமையாளர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள்.

சேலம் மாவட்டத்தில் உள்ள ராசிபுரத்தில் 4.6.1887-ல் பெருமாள் நாயுடுவுக்கும் குப்பம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர் அவர். எளிய குடும்பத்தில் பிறந்து வீர வாழ்வு வாழ்ந்தவர். தனது எட்டாவது வயதில் தந்தையையும் பனிரண்டாம் வயதில் தாயாரையும் இழந்தவர்; பிறகு கோவையில் உள்ள தன் தாயாரின் சகோதரியின் ஆதரவில் தான் அவர் கல்வி பயின்றார்.

இளைய வயதிலேயே வங்கப் பிரிவினை இயக்கம் வரதராஜுலுவைக் கவர்ந்தது. "வந்தே மாதரம் என்போம்; எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்!" என்ற முழக்கத்தோடு வந்தேமாதர இயக்கத்தில் இணைந்தார். தனது உயர்நிலைக் கல்வியைத் தொடராமல் தேசப்பற்று மிக்கவராய், நாட்டுப் பணியில் முழுக்க முழுக்கத் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டார்.

பின்பு, கல்கத்தா தேசிய கல்லூரியில் சேர்ந்து இரண்டாண்டுகள் சித்த வைத்தியத்தை முறையே பயின்று தேர்ந்தார். தொடர்ந்து பர்மா மருத்துவக் கல்வித் துறையில் சேர்ந்து, தன்னை வளப்படுத்திக்கொண்டார். பிறகு திருப்பூரில் மருத்துவத் தொழில் தொடங்கி அங்கேயே வசித்துவந்தார். ஆண்டுக்கு ரூ.24,000 வருமானத்துடன் சிறந்து விளங்கி, சேலத்திலும் மருத்துவப் பணியை மேற்கொண்டார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில், தொழிலாளர் இயக்கமும் பங்கு கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்ட நேரம் அது. எனவே 1918-ல் மதுரை ஹார்வி மில்லில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் தாமும் கலந்துகொண்டு பல பொதுக்கூட்டங்கள் நடத்தி, மிகப்பெரிய வெற்றியும் கண்டார். இவரது பேச்சு தீவிரமுடையதாக இருப்பதைக் கண்ட இந்திய அரசு, இவரைக் கைது செய்து சிறையிலடைத்தது. அவ்வமயம் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இவருக்காக வழக்கை நடத்தினார்கள்.

இவ்வழக்கின் விசாரணை அகில இந்திய அளவில் பத்திரிகைகளில் வெளியிடப்பெற்று ராஜாஜியின் வாதத் திறமையை வெளிப்படுத்தியது. ஆயினும் டாக்டர் நாயுடு 18 மாதங்கள் கடுங்காவலில் இருந்தார். இதனை எதிர்த்து "சுதேசமித்திரன்" பத்திரிகை ஆசிரியர் தலைமையில் எஸ்.சத்தியமூர்த்தி டி.வி. வெங்கட்ராமய்யர் முதலியோர் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர்.

திருச்சியில் டாக்டர் நாயுடுவின் அஞ்சா நெஞ்சத்தைப் போற்றிப்புகழ்ந்து மாபெரும் கூட்டம் ஒன்று ராஜாஜி



தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 'தமிழ்த்தென்றல்' திரு.வி.கல்யாணசுந்தரனார் அவர்கள் கலந்துகொண்டு நாயுடுவின் வீரத்தை வானளாவப் புகழ்ந்துரைத்தார்கள். மராட்டியத்தில் திலகர் அவர்கள் தனது 'கேசரி' நாளிதழில், டாக்டர் நாயுடுவிற்கு வீர வணக்கம் செலுத்துவதாக எழுதினார்.


அவரது தண்டனையை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அப்போது ராஜாஜியுடன் கே.சீனிவாச ஐயங்கார், 'அல்லாடி' கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோரும் நாயுடுவுக்காக வாதாடினார். ராஜாஜியின் சட்ட நுணுக்கத்தில் டாக்டர் நாயுடு விடுதலை பெற்றார்.

டாக்டர் நாயுடு தமிழ்நாடெங்கும் காங்கிரஸ் இயக்கத்தை மிகவும் முனைப்போடு பிரச்சாரம் செய்து வளர்த்த பெருமைக்கு உடையவராவார். 1917-ல் 'சென்னை மாகாணச் சங்கம்' என்று காங்கிரஸ் நோக்கத்திற்கேற்ப தென்னாட்டில் உள்ள பிராமணர் அல்லாதவர் நலனுக்காகத் திவான் பகதூர், குத்தி கேசவப்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு, ஈ.வெ.ராமசாமி நாயக்கர், தஞ்சை சீனிவாசபிள்ளை, தி.வி.கோபாலசாமி முதலியார், டாக்டர் குருசாமிநாயுடு, டாக்டர் வரதராஜுலு நாயுடு, சர்க்கரை செட்டியார், திரு.வி.க. இவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

இச் சென்னை மாகாணச் சங்கத்தின் கொள்கையை அனைவரும் அறிந்திட வேண்டி, டாக்டர் வரதராஜுலு நாயுடு பிரச்சாரம் செய்தார்.

தென்னிந்தியாவில் பிராமணர், பிராமணர் அல்லாதார் தகராறு தீவிரமாக இருந்தபோது டாக்டர் நாயுடு அந்த வகுப்புக் கலவரங்களில் கலந்துகொள்ளாமல் ஒரு தேசியவாதியாகவே விளங்கினார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில ஏட்டை முதலில் தொடங்கியவர் டாக்டர் நாயுடு அவர்களே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் நாயுடு தமிழ்நாடு, தினசரி, ஆந்திரபிரஜா, இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற மூன்று பத்திரிகைகளின் ஸ்தாபகராவார். அரசியல், தொழிற்சங்கம், மருத்துவ


I want world
sympathy in
this battle of
Right against
Might
Gandhi MKGandhi
5.4.'30

காந்தியடிகளின் கையெழுத்து



வரலாற்றுச் சிறப்புமிக்க 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் கொண்டுவரப்பட்ட பம்பாய் கூட்டத்தில் காந்தியடிகள் (1942).

மாநாடு, விவசாய முன்னேற்றம் சாதி ஒழிப்புக் கூட்டங்களிலும் தொடர்ந்து அவர் பங்காற்றினார்.

டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் வாழ்க்கைத் தொகுப்பை மையமாக வைத்துப் பல்கலைக்கழகத்தில் (Ph.D.) பட்டம் பெற்ற மூவரில் தற்போது போக்குவரத்துத்துறைஅமைச்சராக இருக்கும் டாக்டர் பொன்முடி அவர்களும் ஒருவராவார்.

தமிழ்நாடு அரசு, 9.8.1988 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அப்போது அரசு சார்பில் ''தேசிய சங்கநாதம்'' டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு வாழ்க்கைச் சுருக்கம் என்ற புத்தகமும், டாக்டர் நாயுடு நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்பட்டன.

டாக்டர் நாயுடு அவர்கள் தேசியப் புகழ் வாய்ந்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர் மறைந்த அன்று அரசுப் பணிகள் நிறுத்தப்பட, அன்றைய முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

இறுதிச் சடங்கிற்கு வேண்டிய ஏற்பாட்டை அவரே முன்னின்று செய்தார். இறுதி ஊர்வலத்தில் மூதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார், ஈ.வெ.ரா., இஸ்மாயில் சாகிப் ஆகிய பெருந்தலைவர்கள் கலந்துகொண்டு இரங்கல் கூட்டத்திலும் பேசினார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நாங்கள் தீவிரமாகச் செயல்படவும், அரசியலில் எங்கள் செயல்பாடு வேகமடையவும் காரணமாக இருந்தவர் தியாகி டாக்டர் நாயுடு அவர்கள் தான் எனவும் சமூக சீர்திருத்தத்திற்கு அரும்பாடு பட்ட மாமனிதர் அவர் என்றும் அக்கூட்டத்தில் அனைவரும் புகழ்ந்துரைத்தனர்.

1920 ஆகஸ்ட்டில் மகாத்மா காந்தியடிகள் திருப்பூர் வந்தபோது டாக்டர் வரதராஜுலு வீட்டில் தான் தங்கினார். தொடர்ந்து செப்டம்பரில் காந்தியடிகள் சேலம் சென்ற போதும் டாக்டர் நாயுடுவின் வீட்டில் தங்கினார். அவர் தங்கியதால் அந்தத் தெருவுக்குக் 'காந்திரோடு' என்று பெயர் இடப்பெற்றது.

டாக்டர் நாயுடு 'தமிழ்நாடு' என்ற வார இதழைத் தொடங்கி, பின்பு நாளேடாக நடத்தினார். 1922-ல் காந்தியடிகள் சிறை வைக்கப்பட்டபோது நாயுடு அவர்கள் அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய ரூ.3000 வருமான வரியைக் கட்ட மறுத்து, ஒருபுது முறையைக் கையாண்டார்.

அந்த வரியைக் காந்தியடிகள் விடுதலைக்குப் பிறகே கட்டமுடியும் எனவும் கூறிவிட்டார். அதனால், அவரது மோட்டார் காரையும், நிலத்தையும் அரசாங்கம் ஜப்தி செய்ய உத்தரவிட்டது.

நாயுடுவின் இச்செயலைக் காந்தியடிகளின் இளைய இந்தியா (Young India), திலகரின் 'மராட்டா' இதழ்கள் மிகவும் பாராட்டின.

டாக்டர் நாயுடு தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இந்திய அளவில் செயற்குழு உறுப்பினராகவும் 1925, 1926ல் பணியாற்றினார்.

1951-ல் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் மேலவை உறுப்பினராக சேலத்தில் இருந்து போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சேலம் நகரத்தில் கம்யூனிஸ்ட் வேட்பாளர் மோகன் குமாரமங்கலத்தை நாயுடு எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று, சட்டமன்றம் சென்றார்.

மக்கள் நலனைப் பெரிதும் போற்றி உரை நிகழ்த்தினார்.

அரசியலில் ஈடுபடுவதற்கு முன்பே டாக்டர் நாயுடு சமூக சீர்திருத்தப் பணியில் ஈடுபாடு கொண்டிருந்தார். அரிசன மக்கள் மேம்பாட்டுக்காகத் தொண்டாற்றினார். தீண்டாமையைக் குறித்து திருப்பூரில் மேல் சாதியினருடன் பேசி சமமாகப் பழகும் படி செய்தார். தன் வீட்டில் ஒரு அரிசனனையே சமையல் வேலைக்கு அமர்த்திக்கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார் அவர்.

1926-ல் நடந்த 3-வது ஆந்திர சமூக மாநாட்டில் ஆற்றிய தலைமையுரையில் டாக்டர் நாயுடு தீண்டாமையை ஒழிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். 1941-ல் கடலூரில் அரிசன ஆலயப்பிரவேசத்தை நிகழ்த்தினார் என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாக் கொண்டாடும் இந்நாளில், டாக்டர் நாயுடு அவர்கள் தன்நலம் கருதாமல் தேச விடுதலைக்காக ஆற்றிய அரும்பணியை யாரும் மறக்கமுடியாது! ★

சிறுகதை:

# வள்ளி திருமணம்

- அறிஞர் அண்ணா

வள்ளியின் 'ஆலோலம்' அந்தக் காட்டுக்கே ஓர் கீதம்; பறவைகள் அதைக்கேட்டு இன்புறவே தினைப்புனம் வரும், கதிர்களைக் கொத்துவதுபோலப் பாசாங்கு செய்யும், வள்ளி கவணை வீசிச் 'சோ! சோ!' என்று பாட்டிசைத்ததும், பறவைகள் தம்மை மறந்து மரக்கிளையில் அமர்ந்து இன்புறும். கீதம் நின்றால் ஒன்ஸ்மோர் கேட்பதுபோல், மீண்டும் தினையைத் தின்ன வரும்! மீண்டும் வள்ளியின் சங்கீத வாய்மொழி ஆரம்பமாகும். வேட்டையாடச்செல்லும் வீரர்கள், கொஞ்ச நேரம் வள்ளியின் விருந்தை அனுபவித்து விட்டுத் தான் போவார்கள்.

வரகவி சோமசுந்தரர், வள்ளி கலியாண காலட்சேபத்திலே மகா திறமைசாலி! வள்ளி, அன்று எண்ணாதனவெல்லாம் இவர் கூறுவார். வேலன் அன்று பேசாததை இவர் செப்புவார். பாட்டும் சுவையாக இருக்கும். மக்கள் அவருடைய காலாட் சேபத்தைக் கேட்டு மிக மகிழ்வர். அன்று அவர் ஆறுமுகம் பிள்ளையின் வீட்டிலே நடந்த திருமணத்திலே, வள்ளி கலியாணத்தை விமரிசையாக நடத்திக்கொண்டிருக்கையிலே, வள்ளி என்னும் ஓர் வனிதை, - குறக் குலப் பெண்ணல்ல, பிள்ளைவாள் வீட்டுப் பந்து... கேட்டு இன்புற்றாள். பிறகு தாகவிடாய் தீர்ந்ததடி தத்தையே! என் மோகவிடாய் தீர்க்காயோ தத்தையே! என்று விருத்த வேலர் கேட்ட பகுதியும், அவர் ஆணை வைத்த பகுதியும், பின்னர் மணந்ததுமாகிய பகுதிகளைக் காலட்சேபக்காரர் மிக ரசமாகக் கூறினார். வள்ளி அதனைக் கேட்டுக் களித்தாள். விடியற் காலை மூன்று மணி வரையிலே தூக்கம் வராமல் வீட்டின் மூன்றாவது கட்டிலே படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள். காலட்சேபக்காரரின் குறட்டை சங்கீதமாகவும், கொசுவை விரட்ட அவர் தட்டிக்கொண்டிருந்த சத்தம் தாளமாகவும் இருந்தது. மற்றவர் களும் உறங்கிக் கொண்டிருந்தனர். வள்ளியின் கண் மூடவில்லை. கருத்தும் தூங்க மறுத்தது.

> 'வள்ளிக் கணவன் பேரை
> வழிப்போக்கன் சொன்னாலும்'

என்ற கிளிக்கண்ணியை எவ்வளவு அருமையாகப் பாடினார். தள்ளாடித் தள்ளாடி நடந்து காட்டினார் என்று காலட்சேபக்காரரின் திறமைகளை வியந்த வண்ணம் வள்ளி புரண்டுகொண்டிருந்தாள். காலடி சத்தம் கேட்டு, திடுக்கிட்டு யார் என்று பார்க்க – காலையிலே மணமான மாப்பிள்ளை நிற்கக் கண்டு, கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தாள். மாப்பிள்ளை 'வள்ளித்திருமணம்' நடக்கும் போதே வள்ளியைத்தான் பார்த்துக்கொண்டே இருந்தான். நெடுநாட்களாகவே வள்ளியை அவன் உள்ளத்திலே வைத்துக் கொண்டிருந்தான். அவனுக்குத் தான் இந்த வள்ளியைக்கட்டுவதாக, ஆறுமுகம் பிள்ளை முதலிலே நினைத்தார்.

ஆனால் வள்ளி, ஏழை வீட்டுப் பெண் மூன்றாவது கட்டு. பெரிய இடமாகக் கிடைக்கவே மாப்பிள்ளையின் தகப்பனார், வள்ளி திருமணத்திற்கு ஒப்ப வில்லை. சாவித்திரி கலியாணம் நடந்தது. சகல சம்பத்துகளுடனும், சாவித்திரி அன்று காலையில், சிங்காரவேலனைத் திருமணம் செய்துகொண்டாள். அன்று இரவே வேலன், வள்ளியைத் தேடிக் கொண்டு மூன்றாவது கட்டுக்கு வந்து நின்றான். அங்கு படுத்திருந்தவர்களைச் சாடையாகப் பார்த்தாள். வள்ளி தெரிந்தாள்.

மெள்ளக் கால்மாட்டுப் பக்கமாக நின்று, சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே, கால் விரலை மிதித்தான். வள்ளிக்கு உடல் ஜிவ்வென்றாகிவிட்டது. பயத்தால் காலை இழுத்துக் கொண்டாள். அந்த வேகத்திலே வேலன் கீழே இடறினான். சத்தம் கேட்டுப் படுத்துக்கொண்டிருந்த வர்களிலே யாரோ... விழித்துக்கொண்டு "என்ன சத்தம்?" என்று கேட்க, சமையற்கட்டுக்குள்சந்தடியின்றிச் சென்றுவிட்டான் மாப்பிள்ளை. வள்ளிக்கு அடக்க முடியாத சிரிப்பு! "எதுவோ பூனை வந்தது தூரத்தினேன்" என்று கூறி விட்டாள்.

விழித்தவர் மீண்டும் குறட்டை விட்டார். "இவ்வளவு ஆசை என்மீது வைத்திருப்பவன், எவனோ பணத்தோடு வரவே, அவளைப் பந்தலிலே பத்துப்பேர் முன்னிலை யில் தாலிகட்டிவிட்டு, விடியற் காலை என்காலை மிதித்து வாடி என்று அழைக்கின்றான். எவ்வளவு சூது. அக்ரமம் என்று வள்ளிக்குக் கோபம். வாயைத் திறக்க முடியுமா, பாபம்! காலையிலே கலியாண மானவன். இந்தக் கதியிலே காணப்பட்டால், கலியாணத்திற்கு வந்தவர் கைக்கடிகாரம் சிரித்து, ஊர் கூட்டிச் சொல்லி விட மாட்டார்களா!

நம்மால் அவருக்கு ஏன் தொல்லைதரவேண்டும் என்று அம்மங்கையின் தூய உள்ளம் நினைத்து உள்ளே நுழைந்த மாப்பிள்ளையின் மனம் துடித்தது. வெளியே வருவதும் தூங்குபவர் கைச்சத்தமோ, கால் சத்தமோ கேட்டால், உள்ளேபோய்ப் பதுங்குவதுமாக இருந்தான். என்ன முட்டாள்தனமாகச் செய்து விட்டோம் என்று துக்கித்தான்.

வள்ளி அதே நேரத்தில் தும்மினாள், அவள் விழித்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்ததும் பயம் போய்விட்டது 'அந்த எண்ணம்' மேலிட்டது. 'வள்ளி' என்று மெல்ல அழைத்தான். அவளருகே சென்று, படுத்திருந்தவள் எழுந்து "ஏன்? யார்?" என்று கொஞ்சம் உரத்தகுரலிலே கேட்டாள். "மெதுவாகப் பேசு வள்ளி, வேலன் பின் தொடர, தோட்டத்தருகே வந்ததும்-

"இதோ பாருங்க! யாராவது விழித்துக்கொண்டால், என் கதி என்ன ஆவது? கன்னி கழியாத பெண்ணுக்கு இந்த நேரத்திலே ஆண் பிள்ளையுடன், அதிலும் காலையிலே கலியாணமானவுடன் என்னடி பேச்சு, என்று என்னை ஏசுவார்கள். போய்ப் பேசாமல் தூரமா நில்லுங்க. நான் கூவி வீட்டை கலக்கிடுவேன்".

'ஒரு பெண்ணுக்காக, ஆண் எத்தனைப் பொய் சத்தியமும் வைப்பான் என்று பாகவதர் இராத்திரி சொன்னாரே, நான் கேட்டேன்'.

மீண்டுமோர் காலடிச்சத்தம் கேட்டது. வள்ளி கைகளைப் பிசைந்து கொண்டு "என் மானம்



ஒன்றுமில்லை ஒன்றுமில்லை, ஒரு விஷயம்-தனியே இப்படி வாயேன்".

"ஊஹூம். இதென்ன அக்ரமம்? நான் மாட்டேன்".

"சீ! நான் என்ன உன்னை ஏதாவது செய்துவிடுவேன் என்று பயமா? அதெல்லாம் இல்லை இங்கே வாயேன்".

பேச்சை வளர்த்திக்கொண்டே இருந்தால், தூங்குபவர் விழித்துக் கொண்டு தன்னைத் திட்டு வார்கள் என்று அந்த ஏழைப்பெண் பயந்தாள். மெள்ள எழுந்து, தோட்டத்துப் பக்கம் சென்றாள் படுத்துத் தூங்குங்கள், இவ்வளவு ஆசை என்மீது இருக்கிறவர்தானா அந்தத் தேய்ந்து போன சிறுக்கியைத் தேடிக் கட்டிக்கிட்டீர். ஏன்- மணை ஏற அவள், மஞ்சத்துக்கு நானா? நாங்கள் ஏழைகளானாலும், மானத்துக்கு அஞ்சினவங்கோ, மகராஜா! நாம் குழந்தைகளா இருந்ததிலிருந்து விளையாடினோம், போதும் போங்கள், நானல்ல மசிபவள்".

"வள்ளி! நான் கெட்ட நினைப்புடன் வந்தேனென்றா எண்ணுகிறாய்?"

"தொட்டுகிட்டுப் பேசாதீங்க. போகுமே! நீ போயேன் எங்காவது தொலைந்து, யாரோ வருகிறார்களே" என்றாள்.

வேலன், பாய்ந்து சென்று, அங்கிருந்த பெரிய மரத்தின் பின்புறம் மறைந்துகொண்டான்.

வந்தது, வள்ளியின் அத்தை. மகா கைகாரி, வள்ளியும் வேலனும் தோட்டத்துப் பக்கம் புகுந்ததைத் தெரிந்துகொண்டே வந்தாள், அவளுக்கு ஓர் மகன். அவனைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்னு வள்ளி ஒரே பிடிவதமாக இருந்தாள். அதனால் வள்ளிமீது வேதத்துக்குக் கோபம்.

பழிதீர்க்கச் சமயம் கிடைத்தது என்று எண்ணி தொலைவில் வரும்போதே, ''ஏண்டியம்மா வள்ளி! பத்தினி! உன் யோக்யதை இதுதானா'' என்று அடித்துப்பேசினாள்.

''என்ன அத்தை என்னென்னமோ பேசறீங்க, வயித்தை வலிச்சுதுன்னு தோட்டத்துக்கு வந்தேன். விபரீதமா அர்த்தம் செய்து கொண்டு பேசறீங்க".

"துணைக்கு வந்தானா வேலன்!"

"அவரு எங்கே வந்தாரு?"

''ஐயோ! அத்தை சத்தியமா சொல்கிறேன் – நான் வரச்சொல்லலே, இவரே வந்தாரு. காலை மெதிச்சாரு. இந்தக் கோலத்துக்கு என்னைக் கொண்டுவந்தாரு".

''இல்லை, நான் கேக்கறேன், இந்த நேரத்திலே, உங்க ரெண்டு பேரையும் தனியாக இங்க கண்டா என்ன எண்ணுவாங்க, ஏண்டி வள்ளி! விலையாகிற பண்டமாச்சே நீ. விஷயம் தெரிஞ்சா, எவண்டி உன்னைக் கட்டிக்கொள்வான்? இதோ போய், வீட்டிலே எல்லோரையும் எழுப்பி இங்கே கொண்டுவந்து உங்க ரெண்டுபேர் மானத்தையும் வாங்குகிறேன்'.

''அத்தே உன் காலைக் கும்பிடுகிறேன். எங்க பாட்டி வந்தா என்னைப் பிணமாக்கிடுவாங்க. காரி உமிழ்வார்களே நான் ஒரு பாபமும் அறியேன், அட பாவி உன்னாலே இந்த தீங்கு வந்ததே!"

"அவனை ஏண்டி சபிக்கிறே! உனக்கு எங்க போச்சு புத்தி?"

''என்னைக் காப்பாத்துங்க அத்தை! உங்க காலிலே விழறேன்".

''சரி! நான் சொல்றபடி கேட்பதாகச் சத்தியம் செய். கை போட்டுக்கொடு!"

''சத்தியமா, உங்க பேச்சைக் கேட்டு நடக்கிறேன். மாரியாயி சாட்சியா!"

'சரி! நான் இங்கே கண்டதை ஒரிவரிடமும் சொல்லவில்லை. என் மகனைக் கட்டிக்கொள்ள வேண்டும்'.

''பழனியையா? நான் மாட்டேன்".

"சத்தியத்தை மறந்தா சாப்பிட மண்கூடக் கிடைக்காது! மாரிமேல் சத்தியம் செய்ததை மறந்துடாதே!"

"ஐயோ! இது என்ன கஷ்ட காலம், நான் என்ன செய்வேன்?"

"சத்தியத்தின்படி நடக்கிறாயா, இல்லையானா வீட்டிலே இருப்பவர்களைக் கூப்பிடவா!"

'கூப்பிடாதீங்க. பழனியைக் கட்டிக்கொள்கிறேன், சத்தியமாகத்தான்!'

"இப்ப சரி! வேலா! இன்னம் எவ்வளவு நாழிதாண்டா, மரத்தின் பின்னாலே இருக்கப்போறே?"

வள்ளியை மிரட்டி தனக்கு இணங்க வைத்த அத்தை மரத்தின் மறைவிலே போய்ப்பார்க்க, அங்கு, வேலன் இல்லாதது கண்டு திடுக்கிட்டாள்.

'வள்ளி! இதென்னடி மாயம்! மரத்துக்குப் பின்னாலே போனவனைக் காணோமே' என்று அத்தை கேட்க, வள்ளியும் தேடிப் பார்த்துத் திகைத்தாள். இவர்கள் பேசிக்கொண்டிருப்பதற்குள், மரத்தின் கிளையிலே ஏறி, பக்கத்துத் தெருபக்கமாகக் குதித்து, அந்தத் தெருவைத் தாண்டி, பாகவதரின் பக்கத்திலே பரம சாதுபோல் படுத்துக்கொண்டான்.

''எங்கே போய்விட்டான், கிடக்கட்டும். போய்ப்படு உள்ளே. சத்தியத்தின்படி அடுத்த மாசம் பழனிக்கும் உனக்கும் கலியாணம் தெரிஞ்சுதா, பாட்டி வேண்டான்னு சொன்னாக்கூட நான் பழனியைத் தான் கட்டிக் கொள்வேனென்று சொல்லணும் தெரியுமா? போ உள்ளே, படுத்துத்தூங்கு".

"அத்தே! அவரு கூத்தாடுகிற வேலையை விட்டுட்டாப் போதும். அதிலேயும் பொம்பளை வேஷம் போடுகிறாரே அதுதான் கூடாது".

''ஆகட்டும், சொல்கிறேன். ஆனால், அவன் பொம்பளை வேஷம் போட்டா, பேச்சு, நடை அவ்வளவும் அசல் பொம்பளை போலவே இருக்கும்".

வள்ளி, சிரித்துவிட்டு, வீட்டுக்குள் போய், பழையபடி படுத்துக்கொண்டாள். ஆனையைக் காட்டி அவன் கலியாணத்தை முடித்துக் கொண்டான். அத்தை நமது அசட்டுத்தனத்தைக் கண்டு நம்மை மருமகளாக்கிக் கொண்டாள் என்று எண்ணினாள்; வள்ளிக்குச் சிரிப்பும் வந்தது; தூங்கும்போதுகூட புன்னகை தவழ்ந்தது.

தோட்டத்திலே, அத்தை, டோப்பா, சேலை முதலிய வேஷங்களைக் கலைத்து, பழனியானான். "ஸ்திரீ பார்ட்டிலே திறமை இல்லையானால், நமது தாயாராகவே நடித்து வள்ளியிடம் சத்தியம் வாங்கியிருக்க முடியுமா?" என்று பூரித்தான். உள்ளே தூங்கிய வள்ளி மட்டும், விளக்கெடுத்துக் கொண்டு படுத்திருந்தவர்களை பார்த்திருந்தால், உண்மையான அத்தை உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டிருக்கலாம்! அவள் சத்தியம் செய்தாகி விட்டது; இனி பழனியே கணவன் என்று தூங்கிக் கொண்டிருந்தாள்.

பொழுது விடிந்ததும், மாப்பிள்ளை வள்ளியின் முகத்தைக்கண்டு வள்ளி நாணமடைந்தாள். அந்தப் பந்தலிலேயே வள்ளி திருமணத்துக்கு நிச்சய தாம்பூலம் மாற்றிக் கொள்ளப் பட்டது. பழனி தன் தாயாரிடம் நாடகம் பலித்ததைக் கூறினான். மறு மாதம் வள்ளி கலியாணம் நடந்தது!

**-''அண்ணாவின் ஆறு சிறுகதைகள்'' தொகுப்பிலிருந்து.**

**வெளியீடு:**

**திராவிடப் பண்ணை,**

**திருச்சி-2.**

✻

# The Arasan Match Industries

*We two fireworks industries*

**THE ARASAN ALUMINIUM INDUSTRIES PVT. LTD.**
**VIJAYARAJAN TEXTILES LIMITED**
**SARASWATHI GANESAN FINANCE COMPANY LIMITED**

*Regd. Office*:
**ARASAN SARASWATHI GANESAN COMPLEX**
**18, CHAIRMAN A SHUNMUGAM ROAD,**
**SIVAKASI 626 123 (INDIA)**

*Phone :*
Off : 23101 (4 lines)
Resi : 72179 & 20117

*Telex :*
0448-201 TAMI IN
Fax : 04562-72105

Cable : "TAMI" & "WETWO"

# எங்கள் ஊர் பிரச்சினை

### பிரச்சினை

எங்கள் ஊர் நெல்லை மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வாகைக்குளம் பஞ்சாயத்துக்குட்பட்ட இராமசந்திராபுரம் ஆகும். இங்குள்ள மக்கள் அனைவரும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள். இங்குள்ள மக்களின் அன்றாட பிரச்சினையாக மின்விளக்கு உள்ளது. அனைவரும் கூலிவேலை, சிறு விவசாயம் செய்கின்றவர்கள். இப் பஞ்சாயத்தின் வருமானம் எதுவும் இல்லை. இங்குள்ள மக்கள் இதுவரை பல ஆண்டுகளாக முயற்சி செய்தும் இதுவரை மின்விளக்கு வசதி செய்து தரப்படவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் இரவு நேரங்களில் வெளியே சென்றுவர முடியவில்லை. இதுநாள் வரை இக்கிராமத்தில் இருள் சூழ்ந்தே உள்ளது. எனவே, இங்குள்ள மக்களின் முக்கியப் பிரச்சினையான மின்விளக்கு அமைத்துக்கொடுக்க வகை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

-பி. காளிமுத்து
தலைவர், ஊராட்சி மன்றம்,
வாகைக்குளம்.

### தீர்வு

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் வாகைக்குளம் ஊராட்சி இராமச்சந்திராபுரம் கிராமத்தில், புதிதாக நான்கு தெருவிளக்குகள் அமைக்க, கலிங்கப்பட்டி தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர்க்கு 12.3.97 அன்றே உரிய ஆவனங்களுடன் முறையான விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- செ. ராமையா
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், குருவிகுளம்.

### பிரச்சினை

சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம் குரும்பட்டி கிராமம் தலைவாய்ப்பட்டியில் இருக்கும் மக்கள், எடப்பாடிக்குத்தான் அன்றாடப் பிழைப்புக்காகச் சென்று வேலைபார்த்துச் சம்பாதித்து வருகிறார்கள். அது சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. எடப்பாடி - தாரமங்கலம் டவுன் பஸ் செல்லுகிறது. அதன் நேரம் காலை 4.30 க்குப் போய் 6 மணிக்கு அவ்வழியே வருகிறது. அடுத்து, மதியம் 12.30க்குப் போய், 2.30க்கு வருகிறது. பின்பு 5.30க்குப் போய் 6 மணிக்கு வருகிறது. இந்த நேரத்தைக் கொண்டு கூலி வேலை செய்யப் போய்வர முடியவில்லை. இந்த நேரத்திற்கு இடையில் இன்னும் ஒரு டவுன் பஸ், அத்துடன் எடப்பாடி - சேலம் செல்லும் சர்வீஸ் பஸ் ஒன்றும் விட ஏற்பாடு செய்து கொடுக்கவும்.

- பெ.கந்தன்
தலவாய்ப்பட்டி காலனி
குரும்பப்பட்டி.

### தீர்வு

மனுவில் குறிப்பிட்டது போல் தற்போது தளவாய்ப்பட்டி வழியாக இடைப்பாடி முதல் தாரமங்கலம் வரை இயக்கப்படும் ஆறு நடைகளில் பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைவாகவே உள்ளது (45% மட்டுமே). எனவே தற்போது அளிக்கப்பட்டு வரும் பேருந்து வசதியே பயணிகளின் தேவையை நிறைவு செய்து வருவதாகக் கருதப்படுகிறது.

இதே மனுவில் கேட்கப்பட்டிருந்தபடி சேலம் முதல் இடைப்பாடி வரை நேர்வழியில் இயக்கப்படும் நடைகளைத் தளவாய்ப்பட்டி வழியாக மாற்றி இயக்கினால் தூரம் 30 கி.மீ. அதிகமாகிறது என்பதால், பயணிகளுக்குக் கூடுதல் பயணக்கட்டணம், கூடுதல்



பயண நேரம் முதலான அசௌகரியங்கள் ஏற்படும்.

மேற்கூறிய 'காரணங்களின் அடிப்படையில் தலவாய்ப்பட்டிக்குக் கூடுதல் பேருந்து வசதி அளிக்கத் தற்போது தேவை நிலவவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- மேலாண் இயக்குநர்
அண்ணா போக்குவரத்து கழகம்
சேலம்.

### பிரச்சினை

எங்கள் ஊர் பழுவூர். பழுவூர் ஊராட்சியில் இரண்டு குக்கிராமங்கள் உள்ளன. அவை பழுவூர், கே.சி. பழுவூர். எங்களது மாவட்டம் திருநெல்வேலி, வள்ளியூர் ஒன்றியம் ஆகும். எங்களது ஊராட்சியில் பழுவூர் கஸ்பாவில், அரசால், சுமார் இரண்டு இலட்சம் மதிப்பீட்டில் அரசு கிளை நூலகம் கட்டப்பட்டுள்ளது. இருந்தும் நூலக நிர்வாகமானது கடந்த சில ஆண்டுகளாகச் சரிவர இயக்கப்படாமல் உள்ளது. பொது மக்களாகிய நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பலமுறை புகார் செய்தும், எவ்வித நடவடிக்கையும் இதுநாள்வரை எடுக்கப்படவில்லை. இந்தக்கிளை நூலகத்தில், இரண்டு அலுவலர்கள் பணிபுரிந்தார்கள். ஆனால், தற்சமயம், ஒரு பணியாளர் மட்டுமே உள்ளார். அவர் தற்போது பணிக்கு வராமல் வாரத்தில் ஒருசில நாட்கள்-அதுவும் மாலைப் பொழுதில் 4 மணி அல்லது 5 மணிக்கு வந்து நூலகத்தைத் திறந்து வராத நாட்களுக்கும் வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு, நூலகத்தை பூட்டிச் சென்றுவிடுகிறார். நூலகத்தில் சுமார்

ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. இருந்தும் அவை பொதுமக்களுக்குப் பயன்தராத வகையில் முடங்கிக் கிடக்கின்றன. ஆகவே தாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, இனியாவது எங்கள் கிராமத்தில் கிளைநூலகம் சரிவர இயங்க ஆவண செய்யவேண்டும் என்பது இந்தக் கிராமப் பொதுமக்களின் அன்பான வேண்டுகோள்.

- கிராமப்பொதுமக்கள்
பழுவூர்.

தீர்வு

*பழுவூர் கிளை நூலகத்தில், திரு.கே.வீரபாகு மூன்றாம் நிலை நூலகர் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ஜெ.கபிரியேல்மெல் ஆகிய இருவர் பணியாற்றி வந்தனர். பணியாளர் பற்றாக்குறைவினால் திரு.கே.வீரபாகு என்பவர் கரைச்சுத்துத்தும்புத்தூர் கிளை நூலகத்தில் மாற்றுப்பணியில் ஈடுபடுத்தப் பட்டபோது, பழுவூர் கிளை நூலகர் திரு.ஜெ.கபிரியேல்மெல் அலுவலக உதவியாளர் ஒருவர் மட்டுமே பணியாற்ற நியமிக்கப்பட்டார். இவ்வூழியர் நூலகப் பணிக்கு ஒழுங்காக வராமல் நூலகத்தைச் சரிவர செயல்படுத்துவதில்லையென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மனுநீதி நாளில் பொதுமக்கள் புகார் கொடுத்ததின் அடிப்படையில், திரு.ஜெ.கபிரி யல்மெல் அலுவலக உதவியாளர் பாளையங்கோட்டை மாவட்ட மையநூலகப் பணிக்கு மாற்றப்பட்டுள்ளார். பழுவூர் கிளைநூலகம் செவ்வனே செயல்படும் பொருட்டு, திரு.கே. வீரபாகு என்பவர் மீண்டும் பழுவூர் கிளைநூலகத்தில் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளார்.*

*எனவே, இனி பழுவூர் கிளைநூலகம் சிறப்பாகச் செயல்படுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

- இரா.கண்ணன்,
பொது நூலக இயக்குநர்
அண்ணாசாலை, சென்னை-2.

பிரச்சினை

எங்கள் ஊர் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் குளத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த மொட்டையாண்டி கிராமமாகும். எங்கள் ஊருக்குத் தமிழக அரசால் கொடுக்கப்படும் தொலைக்காட்சிப் பெட்டி, பொதுத் தொலைபேசி, வானொலிப்பெட்டி போன்றவைகள் வைத்து இயக்க ஊரில் ஒரு பொதுவான கட்டிடம் இல்லாத நிலையில், மேற்கண்ட நலன்கள் யாவும் பாதிக்கப்படுகிறது. எனவே எங்கள் ஊரில் அரசின் நிதி உதவியால் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி, பொதுத்தொலைபேசி போன்றவைகள் வைத்து இயக்க ஊரின் மாரியம்மன் கோவில் அருகாமையில் ஒரு நிரந்தரமான கட்டிடம் கட்டித் தர வழிவகை செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

- மா.மு.கருப்பையா
(முன்னாள் குளத்தூர் ஊராட்சி துணைத்தலைவர்)
மொட்டையாண்டி.

தீர்வு

*நடப்பு நிதியாண்டில் (1997-98ஆம்) ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் புதிதாகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

- அ.பழனியாண்டி
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி.

பிரச்சினை

நாங்கள் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, கறம்பக்குடி ஒன்றியம், தீத்தான்விடுதி ஊராட்சியில் உள்ள ஊரணிபுரம் சந்தைப்பகுதியில் காலங்காலமாக வியாபாரம் செய்துவருகிறோம். அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தில், தடைசெய்யப்பட்ட சந்தை அமைந்துள்ளது. மேற்கண்ட இடம் தற்சமயம் தனியார் ஆக்கிரமிப்பில் சிக்கிச்சீரழிந்து உள்ளது. குப்பைகளும், கழிவுகளும், நிறைந்து சுகாதாரக் கேடுகளால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். சந்தைக்குள் சட்டத்திற்குப் புறம்பான பாலியல் வன்முறை, சூதாட்டம், கள்ளச்சாராய விற்பனை போன்ற சில மோசமான சமூக விரோத செயல்கள் நடைபெறுகின்றன. சமூக விரோத செயல் நடைபெறுவதால், சமூக விரோதிகளால் தினந்தோறும் அச்சுறுத்தப்படுகிறோம். எங்களால் வியாபாரமும் செய்யமுடியவில்லை. இதை யாரும் தட்டிக்கேட்க முன்வந்தால், அவர்களின் உயிர் உடைமைக்குஎந்தப் பாதுகாப்பும் கிடையாது என்ற நிலை உள்ளது; எனவே தாங்கள் தான் சந்தையில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டுப் புதிய கடைகள் அமைத்துத்தரவும், சுகாதார மேம்பாடு செய்யவும், சமூக விரோத செயல்களைத் தடுத்து நிறுத்தியும், சந்தைப்பகுதியிலுள்ள குளத்தைத் தூர்த்துவிட்டுச் சந்தையினை விரிவுபடுத்தித்தரவும் தகுந்த நடவடிக்கையினை மேற்கொண்டு, எங்கள் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

- பொதுமக்கள்
ஊரணிபுரம் சந்தைப்பகுதி
கறம்பக்குடி.

தீர்வு

*புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, ஊரணிபுரம் கிராமம், சந்தைப்பேட்டையில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றியும், மேற்படி சந்தையையொட்டியுள்ள குட்டையைத் தூர்த்தும், புதிய ஷெட்டுகள் அமைத்துச் சந்தையினை நன்கு பராமரிக்கவும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் முதல் கட்டமாகச் சந்தையில் உள்ள 52 ஆக்கிரமிப்பாளர்களுடன், கலந்துபேசி அதன் அடிப்படையில் அவர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ளத் தாமாக முன்வந்து சம்மதம் தெரிவித்தனர். ஆனால் மேற்படி சந்தைக்கு ஊரணிபுரம் சாலையிலிருந்து வண்டி, வாகனங்கள் செல்ல இயலாத நிலையில், அச்சந்தையை ஒட்டியுள்ள நெடுஞ்சாலைத்துறையில் 15 ஆக்கிரமிப்புகள் இருந்துவருகின்றன. இவைகளையும்*

அகற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சந்தைப் புறம்போக்கு ஆக்கிரமணங்களை அகற்றித் தூய்மையாகவும், சுகாதாரமிக்கதாகவும் மாற்ற, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைப்படி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- எஸ்.மூக்கையா
வட்டாட்சியர், ஆலங்குடி
புதுக்கோட்டை மாவட்டம்.

### பிரச்சினை

கடலூர் மாவட்டத்தில் உள்ள மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்ன நெற்குணம் கிராமத்தில், பல ஆண்டுகளாக நீர்த்தேக்கத்தொட்டி இயங்காமல் இருந்தது, பாழடைந்துவிட்டது என்று புதிதாக நீர்தேக்கத்தொட்டி கட்டினார்கள். அதுவும் இயங்கவில்லை. 1947-1997 வரை எங்கள் ஊர்ச் சாலை முள்செடிகளாலும் குறுகிய பாதையிலும் தான் உள்ளது. எங்கள் ஊரில் இருந்து 300 மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரும் அதன் வழியாகத்தான் செல்கின்றனர். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் ரோடுகள் அதிகமாக அரிக்கப்பட்டுள்ளது. அதை இதுவரை சரி செய்யவில்லை. நமது ஆட்சியிலாவது இந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- க.தாமஸ்
சின்ன நெற்குணம்

### தீர்வு

மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்னநெற்குணம் கிராமச் சாலையை, வெள்ள நிவாரணத்திட்டத்தின் கீழ் ரூ.20,000 மதிப்பீட்டில் சீர்செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாண்டு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ், எறும்பூர் சின்னநெற்குணம் சாலை 2.8 கி.மீ. ரூ.6.24 இலட்சம் மதிப்பீட்டில் 3 மீட்டர் அகலத் தார்ச்சாலையாக அமைக்கப்பட, அனுமதி அளிக்கப்பட்டு, இவ்வேலையின் முதல் கட்டப்பணியாகச் சரளைக்கல் பரப்பி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் சாலை சரியானதும், இன்னும் ஒருமாத காலத்தில் இச்சாலையில் தார் வேயப்பட்டு முழு அளவிலான தார்ச்சாலையாக அமைக்கப்பட உள்ளது. இவ்வேலை முடிவுற்றதும் இச்சாலை பேருந்து செல்லத்தக்க வகையில் பயன்படும்.

இக்கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி சீர்செய்து, தற்போது நல்லமுறையில் இயங்கிவருகிறது. மேலும் இக்கிராமத்தில் மார்க் 2 ஆழ்துளைக் கைபம்புகள் 5ம், நல்ல முறையில் இயங்கிவருவதால் குடிநீர்ப்பற்றாக்குறை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஒட்டெம் டாய், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர் மாவட்டம்.

### பிரச்சினை

எங்கள் ஊரான தானிப்பாடி செங்கம் வட்டத்திலேயே மிகப் பெரிய ஊராட்சி. இங்குள்ள மக்கள் குடிநீருக்காக வெகுதூரம் செல்லக்கூடியநிலை உள்ளது. ஊரில் உள்ள குழாய்களில் எப்போதோ ஒரு தடவைதான் நீர் வரும். மூன்றாம் வார்டு மற்றும் இரண்டு, ஒன்று வார்டு மக்கள் நீருக்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். எனவே மேற்கண்ட வார்டுகளில் பொதுக்குழாய் அமைத்துக்கொடுத்தால், நீர் வரும்போதாவது பிடிப்பார்கள். இல்லையெனில் ஆழ்துளைக்கிணறுகள் அமைத்து, எங்களின் குடிநீர்ப்பிரச்சனையைப் போர்க்கால அடிப்படையில் தீர்த்துவைக்குமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்ப் பொதுமக்கள்
தாணிப்பாடி கிராமம்.

### தீர்வு

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், தானிப்பாடி கிராமம் வார்டு எண்.1,2 மற்றும் 3ல் புதியதாகக் குழாய் இணைப்புகள் ஊராட்சி மூலம் செய்து முடித்து, குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. ஊத்தங்கரை தெருப்பகுதிக்குப் புதியதாகக் கைப்பம்பு அமைக்கத் திட்டம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- சிவ.சூரியன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

### பிரச்சினை

கம்பம் நகராட்சியில் 31, 32வது வார்டில் உள்ள வீடுகளுக்குச் சீரான மின்சாரம் கிடைக்காத காரணத்தால், பலமுறை மனுக்கள் செய்து, கடந்த 5 மாதங்களுக்கு முன்பாக நகராட்சி சமீபம் நகராட்சிப் புறம்போக்கு இடத்தில், ஒரு டிரான்ஸ்பார்ம் நிறுவினர். டிரான்பார்ம் வேலைகள் முடிக்கும் தருவாயில், அதன் அருகில் உள்ள வீட்டுக்காரர், ஏற்கெனவே, தான் 10 செண்டுக்கு மேல் நகராட்சிப் புரம்போக்கு நிலத்தைக் கையகப் படுத்தியுள்ளது போதாது என்று, இந்த டிரான்ஸ்பார்ம் அவரது ஆக்கிரமிப்புப்பகுதியில், ஒரு கோடியில் வருவது பொறுக்கமாட்டாமல் வாய்மொழியாகத் தனது மறுப்பினைத் தெரிவித்து, கம்பம் டவுன் இளநிலைப் பொறியாளர் அவர்களின் யோசனையின் பேரில் டிரான்ஸ்பார்ம் ஷிப்டிங்காகப் பணம் கட்டி, மேற்கொண்டு வேலை செய்யாமல் நிறுத்திவிட்டார். பொதுமக்களாகிய நாங்கள் மின்சாரம் சீராகக் கிடைக்காமல் மிகவும் அல்லல் படுகின்றோம். எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



-31,32வது வார்டு பொதுமக்கள்,
கம்பம்.

# STANDARD GRANITES

Registered Off :

**5-2-15C, SATTUR ROAD,**

**SIVAKASI - 626 123.**

**PHONE : 21142, 20952**

**FAX : (04562) 72378**

*WE PRODUCE SIVAKASI YELLOW AND TROPICAL GREEN GRANITE BLOCKS*


**தீர்வு**

கம்பம் நகராட்சிப் பகுதியில் குறைவழுத்த மின்சாரத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு, புதிய மின் மாற்றி 3.5.97 அன்று இயக்கிவைக்கப்பட்டு, குறைவழுத்த மின்சாரம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- பொறியாளர் ச. மாணிக்கம்
மேற்பார்வை பொறியாளர்
தேனி மின் பகிர்மான வட்டம், தேனி.

**பிரச்சினை**

எங்கள் பஞ்சாயத்தில் நெடுங்காலமாக உள்ள ஒரே பிரச்சினை, கள்ளச்சாராயம். இன்றும் எட்டு இடங்களில் சாராயம் விற்கப்படுகிறது. காவல் துறை இதைக்கண்டும் காணாமலுமாக உள்ளது. சில காவலர்கள்தான் சாராய அரக்கர்களின் கூட்டாளிகள். இந்தப் பிரச்சினையை அரசு தீர்த்துவைக்குமா? தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்குமா?



- பொதுமக்கள்,
எடக்குடி வடபாதி.

**தீர்வு**

எடக்குடி வடபாதி கிராமத்தில் 1996 மற்றும் 1997ஆம் ஆண்டுகளில் மதுவிலக்கு "ரைடு' செய்து சாராயம் வைத்திருந்தவர்களையும், விற்றவர்களையும் கைது செய்து, வழக்குப் பதிவு செய்து, தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் யாரும் தற்சமயம் சாராயம் விற்கவோ, காய்ச்சவோ இல்லை. இருப்பினும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

- அமரேஷ் புஜாரி, இ.கா.ப,
காவல் கண்காணிப்பாளர்
நாகப்பட்டினம்.

**பிரச்சினை**

மின்பாறை, அட்டகட்டி, ரொட்டிக்கடை, வால்பாறை, முடீஸ், சிங்கோனா, சோலையார், டேம் ஆகிய இந்த ஊர்களிலெல்லாம் 10ஆம் வகுப்பு வரையுள்ள உயர்நிலைப் பள்ளிகளே உள்ளன.

எட்டு அல்லது ஒன்பது உயர்நிலைப்பள்ளிகளுள்ள இந்தப்பகுதியில், ஒரே ஒரு மேல்நிலைப்பள்ளி மட்டுமே வால்பாறையில் உள்ளது. மேலே குறிப்பிட்ட ஊர்களிலிருந்து 1, 2வது படிக்கும் மாணவ-மாணவிகள் சுமார் 10, 15, 20 கி.மீ. தூரத்திலிருந்து பஸ்ஸிலோ அல்லது நடையாகவோ வால்பாறையிலுள்ள மேல்நிலைப்பள்ளிக்கு வரவேண்டிய இக்கட்டான சூழ்நிலை உள்ளது. தவிரவும், இதனால் இவர்களின் படிப்பும் கெடுவதுடன், கல்வித் தரமும் குறைந்துவருகிறது. ஆதலால், கல்வித்தரம் உயரவேண்டுமானால், அட்டகட்டி, சிங்கோனா, முடீஸ், சோலையார்டேம் ஆகிய இந்த ஊர்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக மாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

-ஆ. மாசிலாமணி,
தலைவர், நுகர்வோர் நலச்சங்கம்,
ஈட்டியார் எஸ்டேட்.

**தீர்வு**

வால்பாறையில் மேலும் ஓர் அரசு மேல்நிலைப்பள்ளி துவங்க, தற்போது வால்பாறையில் உதவிபெறும் பெண்கள் உயர்பள்ளி ஒன்றும், அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளது. அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மட்டுமே மேல்நிலைப் பள்ளியாக மாற்ற இயலும். மேலும் பொதுமக்கள் நன்கொடை ரூ.1 இலட்சம் மற்றும் போதுமான கட்டிட இடவசதியும் செய்து தரப்படவேண்டும் என்று நிபந்தனையின் பேரில், கருத்துக்களைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மூலம் பணிந்தனுப்பினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

-திருமதி நே.உதயகுமார்
முதன்மைக்கல்வி அலுவலர்-கோவை மற்றும்
மாவட்டக் கல்வி அலுவலர் (பொறுப்பு)
பொள்ளாச்சி.

## எப்போது நியமித்தார்?

ஒருமுறை, அயர்லாந்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகின்ற வாய்ப்பு தீரர் சத்தியமூர்த்திக்குக் கிடைத்தது. இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையைத் தம் சொற்பொழிவில் ஆணித்தரமாக திறம்பட ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்தார் அவர்.


அப்போது, கூட்டத்தின் நடுவே எழுந்து நின்ற ஆங்கிலேயன் ஒருவன் 'இந்தியாவில் சமூகக் கலவரங்களே நடப்பதில்லையோ?' என்றான் கிண்டலாக.

உடனே சிரித்த முகத்தோடு தீரர் சத்தியமூர்த்தி அவனைப் பார்த்து இதுபோலத் திருப்பிக்கேட்டார்:



'ஐயா! இந்தியாவில் சமூகக் கலவரங்கள் நடப்பதாகவே வைத்துக்கொள்வோம்; ஆனால், கடவுள் எப்போது உலகமக்களின் ஸ்பெஷல் போலீஸ்காரனாக ஆங்கிலேயனை நியமித்தான்?'

-அவர் இப்படிக் கேட்டதும், ஆங்கிலேயர்களே அதிகமிருந்த அக்கூட்டத்திலும் பலத்த கைதட்டலும் சிரிப்பொலியும் எழுந்தது.



# பெரியாரின் மனிதநேயம்!

**-கயல்விழி ஜோசப்குமார்**

திருச்சிராப்பள்ளி வரகனேரி வேங்கடேச அய்யருக்கு மைந்தராய் பிறந்த வரகனேரி சுப்பிரமணிய அய்யர், பின்னாளில் சுருக்கமாக வ.வே.சு.என்று அழைக்கப்பட்டார்.

சட்டம் பயின்றார்; மேற்படிப்புக்காக இலண்டன் சென்றார். ஆனால் பாரிஸ்டர் பட்டம் பெறுமுன்னரே நாட்டு விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி, இலத்தீன் ஆகிய மொழிகளில் புலமை உடையவர். திருக்குறளை ஆழ்ந்து பயின்றவர்; கம்பராமாயணத்தின் சுவை முழுவதையும் துய்த்து உணர்ந்தவர். இவ்விரு நூற்கள் குறித்து இவர் எழுதிய கட்டுரைகள் மிகவும் உன்னதமான இலக்கியத் தரம் வாய்ந்தவை.

சுதந்திரப் போராட்டத்தில் குதித்ததன் விளைவாக, இவர் காந்தியடிகளின் தொண்டரானார். ஆங்கிலேயரின் கல்வி முறைக்கு மாறாக இந்தியப் பண்புகளையும், தமிழ்மண்ணின் ஒழுக்கலாறுகளையும் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு தம் இறுதிக் காலத்தில் ஒரு ‘குருகுலம்’ தொடங்க எண்ணினார்.

முதலில் கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரில், நாட்டு விடுதலையில் ஈடுபாடு கொண்ட காரணத்திற்காக ஆங்கிலேய அரசால் பணிநீக்கம் செய்யப்பட்ட சில ஆசிரியர்களுடன் இணைந்து ‘திலகர் குருகுலம்’ என்ற பள்ளியைத் துவங்கினார். சில காலம் கழிந்தபின், திருநெல்வேலி அருகே, சேரன்மாதேவி என்னும் ஊர் அருகில் 30 ஏக்கர் நிலம் விற்பனைக்குத் தயாராய் இருந்ததை அறிந்த அவர், அந்நிலத்தை எப்படியேனும் வாங்கிட முனைந்தார்.

வ.வே.சு.வின் இவ்வெண்ணம் ஈடேற, அவருக்கு உதவி செய்ய முன்வந்தார் செட்டிநாடு கானாடுகாத்தானைச் சேர்ந்த சுயமரியாதை செம்மல் வயி.சு.சண்முகனார். அவர் தந்துதவிய 3000 ரூபாயைக் கொடுத்து வ.வே.சு. நிலம் வாங்கினார்.

அப்போது, தமிழ்நாட்டின் காங்கிரசுக் கட்சியின் தலைவராக சேலம் வரதராஜுலு அவர்களும், செயலர்களாக பெரியார், கே.சந்தானம் ஆகிய இருவரும் பணியாற்றி வந்தனர். காங்கிரஸ் கட்சியும் வ.வே.சு.அவர்களுக்குக் குருகுலம் நிறுவுவதற்காக 10,000 ரூபாய் நிதி உதவி செய்ய முன்வந்தது. தொடர்ந்து செயலர் என்ற முறையில், பெரியார் முதல் தவணையாக 5,000 ரூபாய்க்கு காசோலை எழுதி அனுப்பினார். கடல் கடந்து வாழும் தமிழர் பலரும் பெரும் பொருளுதவி செய்தனர்.

ஆயினும், தீவிர காந்திய வாதியாக விளங்கிய வ.வே.சு., சாதி வேற்றுமை கூடாது என்ற கருத்தை மேடைதோறும் பேசிவந்த வ.வே.சு., ஆதிதிராவிடர்க்கும் வேதம் பயிற்றுவித்துப் பூணூல் அணிவித்தால் அவரும் அந்தணர் ஆகிவிடுவர் என்ற கருத்தைப் பரப்பி வந்த வ.வே.சு. தன், குருகுலத்தின் அன்றாட நிர்வாகத்தில் ஒரு மாபெரும் தவறைச் செய்தார்.

அதாவது பிராமணச் சிறுவர்களுக்கும், பிராமணர் அல்லாச் சிறுவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாற ஏற்பாடு செய்தார்.

1924.25 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இந்நிகழ்வுகளின் போது, ஓமந்தூரார் (இவர் பின்னர் 1948ல் முதல்வராய் பொறுப்பேற்றவர்) அவர்களின் மகனும், வ.வே.சு. அவர்களின் குருகுலத்தில் கல்வி பயின்று வந்தான். குருகுலத்தின் மாணவர்கள் உணவு அருந்தும் முறையில் சாதிவேற்றுமை பாராட்டப்படுகிறது என்பதை அறிந்த ஓமந்தூரார் அவர்கள் மனம் நொந்தார்.

உடனடியாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எண்ணி, தன் மகனைப் பெரியாரிடம் அனுப்பினார். பையனிடமிருந்து செய்திகள் அனைத்தையும் அறிந்த பெரியார்- வ.வே.சு. அவர்களைத் தொடர்பு கொண்டு விளக்கம் கோரினார்.

ஆனால் வ.வே.சு. தன் குருகுலத்தில் சாதிவேற்றுமைக் கொடுமையைக் களைவதற்குப் பதில் அதை நியாயப்படுத்த விழைந்தார். ஆகவே, தன் அடுத்த கட்ட நடவடிக்கையாகப் பெரியார் குருகுலத்திற்குக் காங்கிரஸ் கட்சி தருவதாக வாக்களித்திருந்த இரண்டாவது தவணைத்தொகை 5000 ரூபாயைத் தர இயலாது என அறிவிக்க நேர்ந்தது.



ஆயினும், வ.வே.சு., பெரியாருக்குத் தெரியாமல் கட்சியின் இன்னொரு செயலரான கே. சந்தானம் அவர்களிடமிருந்து ரூ.5000 பெற்றுவிட்டார். இதனை அறிந்த பெரியார், மிகவும் சினமுற்று, குருகுலத்தில்

# சுவரும் மனமும்



என்வீட்டுச் சுவர் போலவே
என் மனமும்
இப்போதெல்லாம்
வெறுமையாய் இருப்பதில்லை;

யாராவது
எதையாவது
கிறுக்கிவிட்டுப் போய்விடுகிறார்கள்!

சுவரின் கிறுக்கலை
சுண்ணாம்புகொண்டு
அழித்துவிடுகிறேன்;

மனதின் கிறுக்கலை
எதைக்கொண்டு அழிக்க?

விவரம் தெரியாமலேயே
விரயமாகி வருகிறது
எனது எஞ்சிய காலம்...

— நந்தன் குமார்

---

கடைப்பிடிக்கப்படும் தனித்துண்ணல் முறை நிறுத்தப்படாவிட்டால் குருகுலம் உடனடியாகக் கைப்பற்றப்படும் என்று அறிவித்தார்.

காந்தியார் தலையிட்டும் இப்பிரச்சினையில் தீர்வு ஒன்றும் காணமுடியவில்லை.

தமிழ்நாட்டில் சாதி வேற்றுமையைக் களைவதே தனது தலையாய பணி என்று அறிவித்த பெரியார், 1925ல் காங்கிரசில் இருந்து விலகினார்.

இதனைத்தொடர்ந்து, பெரியார் சுயமரியாதைக் கழகம் கண்டதும், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு முதலியவற்றைத் தமிழகம் எங்கெனும் பரப்பி, விழிப்புணர்வைத் தோற்றுவித்ததும், 1925ல் பெரியார் எடுத்த சபதம் 1967ல் திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததின் மூலமாக நிறைவேறியதும் வரலாற்று நிகழ்வுகள்.

பெரியார் தனிச்சிறப்புடைய குணங்கள் வாய்த்தவர். வர்ழ்நாள் முழுவதும் சாதி ஒழிப்பு என்ற தன் கொள்கைக்காகப் போராடியவர். மேலும் அஃதன்றி வேறு ஒன்றும் அறியாதவர். போராட்டங்களும், போராட்டக் களங்களும், காயங்களுமே அவரது வாழ்க்கை ஆகிவிட்டபடியால், அவருடைய பேச்சிலும், செயலிலும் எப்போதாவது மென்மையான உணர்வுகள் தோன்றியதாக வரலாறு பதிவுசெய்யவில்லை. பின்னாளில் அவரது தொண்டராகி கொள்கை பரப்புப் பணியை மேற்கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள், ஆங்கிலத் திரைப்படங்களை விரும்பிப் பார்த்ததைப் போல், பெரியார் திரைப்படங்கள் பார்த்தவர் அல்லர்.

அன்றி . பிறிதொரு தொண்டரான, தமிழகத்தின் இற்றை நாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் விளையாட்டுப் போட்டிகளைத் தொலைக்காட்சி பெட்டியில் ஆர்வத்துடன் பார்ப்பது போல் பெரியார் பார்த்தவர் அல்லர். ஏறக்குறைய 20 ஆண்டுகள் அவர் நடத்தி வந்த குடியரசு பத்திரிக்கையின் இதழ்களை நாம் ஆய்வு செய்தோமானால், அவ்வப்போது அவர் வெளியிட்ட இரங்கற்பாக்கள் மட்டுமே அவர் வலிய மனத்தின் ஒரு மென்மையான கோணத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன என்ற செய்தியை அறியமுடிகின்றது.

திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம், பனகல் அரசர், பெரியாரின் துணைவியார் திருமதி நாகம்மையார், அவரது அண்ணன் திரு.கிருஷ்ணசாமி, நண்பர் திரு. தங்கசாமி ஆகியோர் மறைந்தபொழுது அவர் இரங்கற்பாக்கள் வெளியிட்டு இருந்தாலும், அவர் குடியரசு பத்திரிக்கை துவங்கிய ஒருசில வாரங்களுக்குள்ளேயே நிகழ்ந்த வ.வே.சு. அவர்களின் மரணம் குறித்து 21.6.95 தேதியிட்ட இதழில் வெளியிட்ட இரங்கற்பா தான் அனைத்திலும் முதன்மையானது.

அதற்குமுன் சிலநாட்கள் வரை வ.வே.சு. அவர்களுடன் கடுமையான கொள்கைப் போரில் ஈடுபட்டிருந்த பெரியார், தான் கொண்டிருந்த முரண்பாடுகள் அனைத்தையும் மறந்து, சினத்தைத் துறந்து, நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற அற்புதமானதோர் கண்ணீர்க் கவிதையை வெளியிட்ட செயல், அவரது ஆழ்ந்த மனித நேயத்திற்கு ஒரு நல்ல சான்று.

“இந்த 1925 ஆம் ஆண்டு துவங்கி, இனிவரும் பல ஆண்டுகளில், தமிழக மாந்தரின் உள்ளங்கள் அனைத்திலும் என் கொள்கைத் தீயை, சீர்திருத்தத் தீயை மூட்டப்போகின்றேன்; ஆனால் நான் தூண்ட நினைக்கும் விழிப்புணர்ச்சி மனிதநேயம் என்ற உறுதியான பாறையின் மீது எழுப்பப்படப் போவதால் அது எக்காலத்திலும் நிலைத்து நிற்கும்; எவ்வெதிர்ப்பையும் வெல்லும்” என்று பெரியார் எழுதாவிடினும் அவரது இச்செயல் நமக்குத் தெரியப்படுத்தும் உண்மையும் செய்தியும் இதுதான். ★

# Pioneer Asia Group

**Asia Match Company Limited,**
Sivakasi.

**Tenzing Match Works,**
Sivakasi.

**Asia Timber Products Pvt. Ltd.,**
Port Blair, Andamans.

**Sun Match Company Limited,**
Kandy, Sri Lanka.

**Sree Ayyanar**
**Spinning & Weaving Mills Limited,**
Mallanginar.

**Pioneer Overseas Finance Limited,**
Madurai.

**Pioneer Miyagi Chemicals Pvt. Ltd.,**
Cuddalore.
(In collaboration with Miyagi & Okura Group of Japan)

**Pioneer Asia Packaging Pvt. Ltd.,**
Karanodai, Madras.

**Pioneer Overseas Pvt. Ltd.,**
Sivakasi.
(Export Division of Pioneer Asia Group)

**Tenzing Transports (P) Ltd.,**
Sivakasi.
(Fleet Operators)

**Pioneer Press Pvt. Ltd.,**
Sivakasi.

PIONEER ASIA

BOOPATHY BUILDINGS, POST BOX No. 222, SIVAKASI - 626 123. INDIA.
PHONE : 22422. GRAMS : ASIAMATCH. TELEX : 0448-207 ASIA. FAX : (04562)72655.

# "காவல்துறை, மக்கள் நம்பிக்கையைப் பெறவேண்டும்!"

**- முதலமைச்சர் உரை**

சட்டம் - ஒழுங்கு சம்பந்தப்பட்ட குற்றங்கள் நிகழும்போது எந்தவித பாரபட்சமுமின்றி, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த நடவடிக்கைகள் மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக இருக்கவேண்டும். நடவடிக்கை என்ற பெயரால் தவறு செய்யாதவர்களைக் கைது செய்வதைத் தவிர்க்கவேண்டும்.


சட்டம் - ஒழுங்கு சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துவதிலும் தாமதங்கள் இருக்கின்றன. பல வழக்குகள் மாதக் கணக்கிலும், சில வழக்குகள் வருடக் கணக்கிலும் புலன் விசாரணையில் இருந்து வருகின்றன. தவறு செய்தவர்கள் மீது உடனடி நடவடிக்கையைக் காவல்துறை எடுக்கத் தவறினால் பொதுமக்களுக்குக் காவல்துறையின் மீது நம்பிக்கை இராது. காவல்துறை பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டுமானால் தவறு செய்தவர்கள்மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த வழக்குகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். இதற்கான வரைமுறைகளைப் பற்றிய ஆலோசனைகளை, நீங்கள் இந்தக் கூட்டத்தில் கூறலாம்.

காவல் நிலையங்களில் ஏற்படும் மரணங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். இருப்பினும், இது தொடர் நிகழ்வாக நடந்துவருகிறது. இந்தப் போக்கு மிகவும் வருந்துதற்குரியதாகும். இதனால், அரசிற்குப் பிரச்சினைகள் எழுவதுமட்டுமல்லாது, காவல் துறைக்கும், அரசிற்கும் மிகுந்த அவப்பெயர் ஏற்படுகின்றது. இது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். இதைப்பற்றி அனைத்துக் காவல்துறை அதிகாரிகளுக்கும் நீங்கள் எடுத்துக்கூறி, இனியேனும் காவல் நிலைய மரணங்கள் நிகழாவண்ணம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காவல்துறை மூலம் ஒருவரைக் கைது செய்யும்போது ஒரு சாட்சியின் கையெழுத்தைப் பெறவேண்டும் எனவும், கைது செய்து விசாரிக்கும்போது கைது செய்யப்பட்டவரின் நண்பர் அல்லது உறவினருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது. காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் அடிக்கடி காவல் நிலையங்களைப் பார்வையிட்டு, காவலர்களுக்கு அறிவுரை வழங்கினால், இந்தக் காவல் நிலைய மரணங்கள் தவிர்க்கப்படுமென்று நம்புகிறேன். இனிமேல் இதுபோன்று காவல் நிலைய மரணம் நிகழ்ந்தால், உயர் அதிகாரிகளையும் அதற்குப் பொறுப்பாக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கும்படி நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளேன். கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஓரளவு குறைந்திருந்தாலும்கூட, இது முழுமையாக ஒழிக்கப்படவில்லை. கள்ளச் சாராயத்தினால் சாவுகள் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காவல் நிலைய ஆய்வாளர்களைப் பொறுப்பாக்கி, இந்தக் கள்ளச் சாராயத்தை அறவே ஒழிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை கண்காணிப்பாளர்களுடைய முக்கியப் பொறுப்பு பொது மக்களின் குறைகளைக் களைவதாகும். இன்னும் நமது மக்கள் அவர்களுடைய பல பிரச்சினைகளைத் தீர்க்கக் காவல் துறையை அணுகுகிறார்கள். அவற்றினை மனிதாபிமானத்துடன் அணுகி, பிரச்சினைகளைத் தீர்க்க நீங்கள் அனைவரும் முயற்சி செய்யவேண்டும்.



இதற்காக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 'பொது மக்கள் தொண்டு பதிவேடு' என்ற ஒரு பதிவேடு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுடைய புகார்களையும், குறைகளையும் இந்தப் பதிவேட்டில் பதிவு செய்து இந்தப் புகார்களை உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இந்தப் புகார்களின் மீது தக்க நடவடிக்கை உடனுக்குடன் எடுத்தால், பல பிரச்சினைகள் தவிர்க்கப்படும். எனவே, ஒவ்வொரு புகாரின் மீதும் மூன்று நாட்களுக்குள் நடவடிக்கை

எடுக்கவேண்டுமென்று நான் முன்பே ஆணையிட்டுள்ளேன். இந்த ஆணை பின்பற்றப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், பொதுமக்கள் கொடுக்கின்ற புகார்களுக்கு ஒப்புதல் சீட்டு வழங்கவேண்டுமென அரசு ஆணை வெளியிட்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஒரு மாதத்திற்குள் இந்த ஆணையை நிறைவேற்றவேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மூன்று மாதங்களாகியும் இன்னும் பல காவல் நிலையங்களில் இந்த ஆணை நிறைவேற்றப்படவில்லையென அறிகிறேன். இது மிகவும் வருந்துதற்குரியது. இந்த ஆணையை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு எந்தவிதக் காரணமும் இருக்க முடியாது. இந்த ஆணையை அனைத்துக் காவல் நிலையங்களிலும் உடன் நிறைவேற்றி ஆக வேண்டும்.

அதேபோல், எந்தக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாலும், அந்தக் காவல் நிலையத்திற்கு அதிகார எல்லைவரம்பு இல்லையென்ற காரணத்தைக் காட்டி, அதனைப் பதிவு செய்ய மறுக்கக் கூடாது என்றும், அந்தப் புகாரைப் பதிவு செய்த பின், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்குத் தக்க நடவடிக்கைக்காக மாற்ற வேண்டுமென்றும் ஏற்கெனவே அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சில இடங்களில் இந்த ஆணை சரியாகப் பின்பற்றப்படவில்லையெனப் புகார்கள் வந்துள்ளன. இந்த ஆணையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

ஒரு மாவட்டத்தில் சட்டம் - ஒழுங்கு சரிவர காக்கப்பட வேண்டுமானால், குற்றங்கள் களையப்பட வேண்டுமானால், அதற்கு முக்கியப் பொறுப்பு அந்த மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரையே சேர்ந்ததாகும். காவல் துறையில் பணிபுரியும் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் செயல்பட வேண்டும். காவலர்களின் குறைகளைக் கேட்டு அவற்றினைத் தீர்க்க முயலவேண்டும். அனைத்துக் காவலர்களையும் அவர்கள் வழிநடத்திச் சென்று, குற்றங்களைக் குறைக்கப் பாடுபடவேண்டும்.

நீங்கள் அனைவரும் பொதுமக்கள் சேவையில் இருக்கின்றீர்கள் என்பதை உணர்ந்து, காவல் துறை செம்மையாகச் செயல்பட அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டியது உங்கள் கடமையாகும். அதேபோல், சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்கின்ற பணியைச் செவ்வனே செய்கின்ற காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கு , அரசு உறுதுணையாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மேலதிகாரிகள் காவல் நிலையம் சென்று ஆய்வு செய்வீர் !

ஒரு காவல் நிலையத்தில் ஒரு கைதி இறந்துவிட்டான் என்பதற்குப் பிறகு சென்று விசாரிப்பதை விட, அடிக்கடி மாவட்ட மேல் அதிகாரிகளாகிய நீங்கள் அந்தக் காவல் நிலையத்திற்குச் சென்று ஆய்வு செய்வதின் மூலமாக அங்கே அடைக்கப்பட்டிருக்கும் கைதியைப் பார்த்துக்கூட, குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பார்த்துக் கூட நீங்கள் விசாரிக்கலாம்.

போலீசார் அவர்களிடம் உண்மையை வரவழைப்பதற்காக அடித்தார்கள் என்ற செய்தி உங்களுக்குக் கிடைத்தால் கூட நீங்கள் அந்தப் போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அடிப்பதே குற்றம் என்பது அவர்களுக்குப் புலப்பட்டால்தான் அதற்கே எச்சரிக்கை உண்டு; நடவடிக்கை உண்டு என்பது அவர்களுக்குத் தெளிவாக்கப்பட்டால்தான் லாக்கப்பில் அடித்துக் கொலை செய்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை அவர்களால் உணர முடியும்.

"உங்கள் நண்பன்" என்ற சினிமாப் படம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே காவல்துறையினருக்காக எடுக்கப்பட்டது. உங்கள் நண்பன் என்பது படத்தின் பெயருக்கு மாத்திரம் என்று இருக்கக்கூடாது. எப்போதும் செயலிலே காட்டப்பட வேண்டும்.

மீண்டும் மீண்டும் சொல்கிறேன். ஒரு குற்றம் விசாரிக்கப்பட்டு, உண்மையே வெளிவராமல் போய் விட்டாலுங்கூட, குற்றஞ்சாட்டப்பட்டவன் கொலை செய்யப்பட்டான் என்ற செய்தி வராமல் பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டியவனாக இருக்கிறேன்.

## ஆற்றவேண்டிய பணிகளை முறைப்படுத்தி செயல்படுத்த வேண்டியது நீங்கள்தான் !

காலையிலே எழுந்து பத்திரிகையைப் பார்த்தால் காவல் நிலையத்திலே கைதி சாவு என்ற செய்தி வந்தால், நான் எந்த அளவிற்கு வேதனைப்படுகிறேன் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

நான் ஒன்றைச் சொல்வதற்காக நீங்கள் யாரும் வருத்தப்பட மாட்டீர்கள்; எல்லோரையும் சொல்வதாகவும் எண்ணிக் கொள்ள மாட்டீர்கள். நாம் சரியாக இருந்தால்தான் மற்றவர்கள் சரியாக இருப்பார்கள். உதாரணத்திற்கு நான் சரியாக இருந்தால்தான் என்னுடைய அமைச்சர்கள் சரியாக இருப்பார்கள். அதைப்போல மேல் அதிகாரிகள் சரியாக இருந்தால்தான் உங்களுக்கு அடுத்திருக்கின்ற அதிகாரிகள் சரியாக இருப்பார்கள்.

உங்களை நம்பித்தான் நாட்டின் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. சமுதாய ஒற்றுமை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் நலன்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. எனவே நான் உங்களை நம்புகிறேன்.

நீங்கள் கேட்ட நவீனமயக் கருவிகள், வேறு பல சாதனங்கள், காவல்துறைக்கு வேண்டிய நன்மைகள், நலத்திட்டங்கள்-இவைகளையெல்லாம் குறைக்காமல் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததையெல்லாம் நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம்.

மேலும் காவல்துறையினருக்கு வேண்டிய அவர்களுடைய நல்வாழ்விற்கு என்ன என்ன திட்டங்கள் தேவை என்று கருதுகிறோமோ அதையெல்லாம் செய்து கொடுப்பேன் என்ற நம்பிக்கையை என் மீது நீங்கள் வைக்கலாம். நான் அந்த அளவிற்கு உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றேன். அந்த நம்பிக்கை வீண் போகாமல் நாட்டுப்பணியாற்ற வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

*- 10.9.97 அன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் முதலமைச்சர் ஆற்றிய உரை.*




தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வளர்ச்சிப் பணிகளை விரைந்து செயல்படுத்திட ரூ.12.95 கோடி செலவில் 384 புதிய ஜீப்புகளை 15.9.97 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் சாவியைப் பெற்றுக்கொண்டார்.

# மதுரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில்...

## அரசு முயற்சிகளுக்குத் துணைநிற்போம்! - திரு. ஜி.கே. மூப்பனார்

## நல்லெண்ணங்களே நாட்டை நலப்படுத்தும்! - பேராசிரியர் க. அன்பழகன்

## சாதிபேதம் ஒழிக்கப் பாடுபடும் அரசு இது! - திருமதி சரோஜினி வரதப்பன்

## ஆண்டு முழுவதும் தீண்டாமை ஒழிப்புக்கூட்டங்கள் - திரு. சோ.பாலகிருஷ்ணன்

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பொனவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் - மிகச் சிறப்பாக, தமிழகத்திலே நாமும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதிலேயும் மிகக் குறிப்பாக, தமிழக அரசு பெரும் பங்கேற்று செயல்பட்டு வருகிறதென்று சொன்னால் அது மிகையாகாது. இதற்காக என்னுடைய நன்றியைத் தமிழக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, தன்னுடைய வாழ்க்கையை முன்மாதிரியானதொரு வாழ்க்கையாக அமைத்துக் கொண்டு வாழ்ந்து காட்டிய மறைந்த அமைச்சர் கக்கன் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்து இன்றைய தினம் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை முதல்வர் அவர்கள் கூட்டியிருப்பது பொருத்தமான ஒரு நிகழ்ச்சியாகும்.

சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, இந்தத் தீண்டாமை ஒழிப்பில் இன்னும் நாம் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மிகுந்த வேதனைக்கும் வெட்கத்திற்கும் உரியதுதான்!

தீண்டாமையை அறவே ஒழிப்பதில் தமிழக அரசு அதிக அக்கறை எடுத்து முழுமையான ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. அரசு எடுக்கும் எல்லா முயற்சிக்கும் நாங்கள் நிச்சயமாகத் துணைநிற்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாழ்த்தப்பட்ட சாதியிலே பிறந்த விஸ்வநாததாசின் தியாகத்தை நினைவுகூர்ந்து, அவருக்குப் பெருமை சேர்த்திடும் வண்ணம் அரசு மேற்கொள்ளும் இந்நடவடிக்கைகளுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- மூப்பனார்**
தலைவர், தமிழ் மாநில காங்கிரஸ்

தேச விடுதலைக்கு ஈடுபட்டவர்கள் எல்லோரும் ஓர் குலம் என்பது போல் வாழ்ந்தார்கள். அரிஜனப் பணியாளர்களை தங்கள் வீட்டில் வேலைக்கு அமர்த்தி தீண்டாமை ஒழிப்புக்கு முன்னோடியாக, எடுத்துக்காட்டாகத் தங்கள் பங்கை செலுத்தினார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

தமிழக அரசு தெருக்களிலே உள்ள சாதிப் பெயர்களை எல்லாம் நீக்கியது. தற்போது தென் மாவட்டங்களில் ஏற்பட்ட சாதிக் கலவரத்திற்குப் பின் போக்குவரத்துக் கழகங்களுக்கும் மாவட்டங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை எல்லாம் ஒரு நல்ல எண்ணத்தோடு நீக்கியிருக்கின்றது. மனிதாபிமான அடிப்படையில் ஒரு சாதி மக்கள் மற்றொரு சாதி மக்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**- சரோஜினி வரதப்பன்**

அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த ஆண்டு முழுவதும் தீண்டாமை ஒழிப்பு கூட்டங்களை மட்டுமே நடத்தவேண்டும்.

**சோ.பாலகிருஷ்ணன்**
சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர்

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று திருமூலர் சொன்னார். அது சமுதாய வாழ்க்கையில் ஓங்கி நிற்கவில்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கணியன் பூங்குன்றன் சொன்னார். சமுதாயம் முழுவதும் இந்த உணர்வு பரவலாக தழைப்பதற்குப் பதில், மாறான எண்ணங்கள் ஜாதி, குலம், கோத்திரம் என்ற இந்தப் பிரிவுகளில் உயர்வு, தாழ்வு என்று கருதி ஜாதியை வைத்து, ஆதிக்கம் செலுத்துகிற எண்ணம் தோன்றிய காரணத்தால், அதை அவன் விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ள, அதனால்



பாதிக்கப்படுகிறவன் தன்னுடைய வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொள்ள, அந்தப் பாதிப்பை ஏற்றுக்கொள்கிறவனாக மாறி பல தலைமுறை ஆகிவிட்ட காரணத்தால் அது நிலைத்துப் போய்விட்டது.

ஆனால் ஏறத்தாழ எண்பது ஆண்டுகளாக இந்த இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து மெல்ல ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. கடந்த காலத்தில்கூட இயக்கத்தை ஏற்படுத்தினார்.

-பேராசிரியர் க. அன்பழகன்
மாண்புமிகு கல்வி அமைச்சர்

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று சங்கப்பாடல் சொன்னாலும்கூட, நம்மிடம் இன்னும் சமத்துவ நிலை ஏற்படவில்லை. அதன் விளைவுதான் இன்றைக்கு இருபதாம் நூற்றாண்டில் ‘தீண்டாமையை ஒழிக்க வேண்டும்’ என்று முதல்வர் கலைஞர் அவர்கள் வேறு எப்போதும் ஒழிக்க முடியாது.

ஜாதிகள் உண்மையில் ஒழியவேண்டுமானால் பள்ளிகளில் நீதிபோதனை பாட வகுப்புகள் நடத்தப்படவேண்டும். அப்போது ஒரு இந்து மாணவன் குரான் படிக்கட்டும். பைபிள் படிக்கட்டும். இப்படிச் செய்தால் பிற்கால சந்ததி முன்னேறும்” என்றார்.

சலுகைகள் பெறவே ஜாதி உள்ளது. சுதந்திரம் பெற்று 50

## சாதி ஒழியும்வரை சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது!

- திரு. ஆர். நல்லக்கண்ணு

## அனைவரும் தீண்டாமை விஷம் நீக்கப் பாடுபடவேண்டும்!

- திரு. இராம. வீரப்பன்

## இந்தச் சூழலில் சாதிகளை ஒழிக்க முடியாதென்றால், வேறெப்போது ஒழிக்கமுடியும்?

- திரு. வை. பாலசுந்தரம்

## பேதங்கள் நீங்கினால் பந்தபாச உறவு தானே வளரும்!

- திரு. அ.க.அ. அப்துஸ் சமது

ஆங்காங்கு சில பெருமக்கள் இந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்கள். வைதீகக் குடும்பத்தில் பிறந்த பாரதியார் ‘ஜாதிகள் இல்லையடி பாப்பா’ என்று பாடினார். ஆக நல்லெண்ணங்கள் பல இடங்களில் அவ்வப்போது முகிழ்த்திருக்கிறது. ஆனால் நிலைக்கவில்லை; சமுதாயம் முழுவதும் பரவலாக இது ஊன்றப்படவில்லை.

இது ஊன்றப்படக்கூடிய நிலைமை 20-ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலே கல்வி வளர வளரத்தான் ஏற்பட்டது. ஓரளவு இந்த நாட்டில் மிகமிக மேம்பட்ட சமுதாயத்தைச் சாராத மக்கள் சேர்ந்து சில இயக்கங்கள் நடத்தத் தொடங்கியபோது, நமக்கு ஏன் கல்வி, சமத்துவம் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டு, அந்த வழியில்தான், இங்கே பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் சொன்னதைப்போல ஒரு பக்கம் காந்தியடிகள் தீண்டாமையை வெறுத்தார். அரிஜன இயக்கம் மூலமாக தீண்டாமையை ஒழிப்பதுதான், தான் ஆற்ற வேண்டிய ஒரு சமூகப் பணி என்று கருதி அரும்பணியாற்றினார்.

இன்னொரு பக்கம் டாக்டர் அம்பேத்கர் விழிப்புணர்ச்சி சொல்ல நாமெல்லாம் உறுதிமொழி எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த உறுதி மொழியை நாம் நிறைவேற்ற வேண்டும். சாதி என்று மனதிலே இருக்கக்கூடிய பேதம் ஒழிகின்ற வரை நமது நாட்டில் சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது.

ஆர். நல்லகண்ணு
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர்.

தீண்டாமை ஒழிப்பை அரசு மாத்திரம் செய்துவிட முடியுமா என்றால் முடியாது. இந்த நாட்டு மக்கள் பெரும்பான்மையாக எதைப் பின்பற்றுகிறார்களோ, யாரை வழிபடுகிறார்களோ அவர்கள் அனைவரும் இந்தக் கொடிய தீண்டாமை என்ற நோயை இந்த விஷத்தை நீக்குவதற்கு முயற்சி எடுத்தாக வேண்டும்.

- ஆர்.எம். வீரப்பன்
எம்.ஜி.ஆர். மன்றக் காப்பாளர்.

ஜாதி உணர்வுகளைத் தூண்டும் சமூக விரோத சக்திகள் நலிந்த பிரிவினரைக் கொத்தி சுவைக்கின்றனர்.

ஜாதி வெறி பிடித்த வேங்கைகள் அடித்தட்டு மக்கள் என்ற வெள்ளாடுகளைக் கடித்துக் குதறுகின்றன. கலைஞர், மூப்பனார் போன்ற தலைவர்கள் உள்ள நாட்டில் ஜாதியை ஒழிக்க முடியாது என்றால் ஆண்டுகள் ஆகிவிட்டது. சலுகைகளை மெல்ல மெல்லக் குறைத்துக்கொள்ள வேண்டும். சாதியை ஒழிக்க வேண்டும் என்றால் சலுகைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட விரோதங்களை அரசியல் ஜாதி தலைவர்கள் மிகைப்படுத்துகிறார்கள். அரசியல் தலைவர்கள் ஜாதி இல்லை என்ற விதமாகச் செயல்பட வேண்டும்.

- வை. பாலசுந்தரம்
அம்பேத்கர் மக்கள் இயக்கத்தலைவர்

நான் தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த பேதங்கள் எல்லாம் தவிர்க்கப்படுமானால் சிறந்த ஒரு பந்தபாச உறவு வளர உதவும் என்று கூறி, இந்தக் காலகட்டத்தில் கலைஞரைப் போன்ற உள்ளார்ந்த ஒரு நல்லுணர்வு ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒரங்கட்டப்பட்ட மக்களையெல்லாம் தூக்கிவிட வேண்டுமென்று ஒரு உள்ளார்ந்த உணர்வு கொண்ட ஒரு முதலமைச்சரின் தலைமையில்தான் இப்படிப்பட்ட ஒரு மாநாடு நடத்த முடியும். மாநாட்டின் நன்மையைப் பெறமுடியுமென்று நிச்சயமாக நான் நம்புகிறேன்.

- ஏ.கே.ஏ. அப்துஸ் சமது
பொதுச்செயலாளர்,
இந்திய யூனியன் முஸ்லீம் கட்சி.

காந்தியடிகளும், பெரியாரும் அம்பேத்கரும் இந்தச் சமயத்திலே எதை விரும்பினார்களோ அந்த லட்சியத்தை நிறைவேற்றுவபர்களாக நாம் இருந்திருக்கிறோம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் சமூகப் பொருளாதார மறுவாழ்வினை இந்த நாட்டு மக்களுக்கு வழங்கிப் பாடுபட்டிருக்கிறோம். தீண்டாமையை ஒழிக்கப் பல்வேறு தலைவர்கள் பாடுபட்டிருந்தாலும் தமிழகத்திலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் தேசியத்தலைவர்களும், திராவிட இயக்கத் தலைவர்களும், பாடுபட்டு இருக்கிறார்கள். அரசியல் கட்சிகளுக்குள்ளும் சாதி ஒழிக்கப்பட வேண்டும். இந்த விழாவிற்குக் கலைஞர் அவர்கள் தலைமையேற்பது மிகவும் பொருத்தமுடையது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் தேசியமும், திராவிடமும் கலந்துகொண்டிருக்கிற மேடை இது. மனரீதியாகச் சமத்துவத்தை ஏற்கும் நாளே சாதி ஒழியும் நாள்.

- கே.வி.தங்கபாலு

தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ்

தலைவர்களெல்லாம் ஒன்றுகூடி ஆதரவளிக்கவேண்டியது அவசியம். தீண்டாமை ஒழிக்கப்படவேண்டுமானால் - வட்ட அளவில் ஒரு கமிட்டி அமைக்கப்பட வேண்டும்; அதில், ஒரு ஆதிதிராவிடரையும் நியமிக்கவேண்டும். அந்தக் கமிட்டியின் ஆலோசனையைப் பரிசீலித்து அரசு செயல்படுத்தவேண்டும்.

- இளையபெருமாள்

தலைவர், மனித உ மை இயக்கம்.

நம்முடைய தமிழகத்தில் உள்ள சில கிராமங்களில் உள்ள டீக்கடைகளில் இன்னமும் இரண்டு வகை கிளாஸ்கள் வைக்கப்படும் நிலைமை இருக்கிறது. இம்மாதிரியான முறைகளைத் தவிர்க்க நாம் கடுமையான நடவடிக்கை எடுத்தாகவேண்டும். இல்லாவிட்டால் அப்படிப்பட்ட நிலைமை மாறுவதற்காகவே நாமெல்லாம் ஒரு சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியாகவேண்டும். அவ்வாறெல்லாம் தீவிரமாக முயன்றாலன்றித் தீண்டாமையை அவ்வளவு எளிதில்

---

## தீண்டாமை ஒழிய வட்ட அளவிலே ஒரு கமிட்டி அமைக்கவேண்டும்!

- திரு. இளையபெருமாள்

---

## கலைஞர் தலைமையேற்பதே பொருத்தம் உடையது!

- திரு. கே.வி. தங்கபாலு

---

## சாதியை ஒழிப்பதிலே நாமெல்லாம் முதல்வரோடு இருப்போம்!

- திரு. குமரி அனந்தன்

---

## சுடுகாடு - இடுகாடு அனைவருக்கும் ஒன்றே என்கிற நிலை வரவேண்டும்!

- திரு. சங்கரய்யா

---

சாதி என்பது ஒழிய வேண்டும். ஆனால் சிலர் அந்தச் சாதிக்குக் கொம்பு சீவி விட்டு, அதை முறுக்கி விடுகிறார்கள். எனவே சாதியானது சா-தீயாக மாறிப் பற்றிக்கொண்டு விடுகிறது. பற்றுதல்கூட இருக்கலாம், பற்றவைத்தல் இருப்பது என்பது எந்த நோக்கத்திற்கும் ஆகாத ஒன்று. சாதியை ஒழிப்போம்; சாதியை ஒழிப்பதிலே நாமெல்லாம் முதல்வரோடு இருப்போம்.

சாதித்துவேஷம் அறவே இல்லாத பஞ்சாயத்துகளுக்கு - ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்று தனி நிதியே கூட அளித்துச் சிறப்பிக்கலாம்.

- குமரி அனந்தன்

தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர்

மிக உயர்ந்த உள்ளத்தோடு இந்தத் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை நடத்துகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு - அந்த வகையில் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பிலே நான் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தீண்டாமை ஒழிப்பில் இங்குள்ள

விலக்கமுடியாது! சுடுகாடு, இடுகாடு ஆகியவை, எல்லோருக்கும் ஒன்றுதான் என்ற நிலை உருவாக நாமெல்லாம் பாடுபடவேண்டும்!

- சங்கரய்யா

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு செயலாளர்.

நாட்டில் - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் என்றெல்லாம் உள்ள நிலைமாற, கலைஞர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தீண்டாமை ஒழிப்பில் நாம் ஒரு கட்டத்தைத்தான் தாண்டியுள்ளோம். ஆனால், தெருவில் நடக்கக்கூடாது; தனிச் சுடுகாடு என்றெல்லாம் சில இடங்களில் இன்னும் இருப்பதை நாம் மறுக்க முடியாது. தீண்டாமை ஒழியவேண்டுமானால், அதற்கு மூல காரணமான சாதியை நாம் ஒழித்தே ஆகவேண்டும். இதில், அரசியல் கட்சிகள் உறுதியோடு செயல்படவேண்டும்.

- பேராசிரியர் தீரன்

பாட்டாளி மக்கள் கட்சி.



சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னால், ஆந்திர மாநிலத்தில் இதேபோல் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. அதற்குப் பிறகு எனக்குத் தெரிந்து, இப்போதுதான் இங்கே தமிழ்நாட்டில் நடை பெறுகிறது. சரியான நேரத்தில் இந்த மாநாட்டைக் கூட்டியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சாதி ஒழிப்பு என்பதற்கு இளம் வயது முதலே நாம் வித்திடவேண்டும்; பாடசாலைகளில் நீதிபோதனை வகுப்புகள் கட்டாயம் நடைபெறச்செய்து அதன்மூலமே இந்த உணர்வை ஊட்டலாம்.

- கோபாலன்
பாரதீய ஜனதா கட்சி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துகிற இந்தநேரத்தில் - அவர் உருவில் எனக்குப் பெரியாரின் உருவம்தான் ஒளிவீசுகிறது. எல்லாச் சாதி மதத்தினரையும் மதிக்கக்கூடியவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்தியா சுதந்திரம் அடைந்து ஐம்பதாண்டுகள் ஆகியும், தீண்டாமை ஒழியவில்லை என்பது வேதனைக்குரிய ஒன்று தான். அதை ஒழிக்க நாமெல்லாம் நம்மை நாமே அர்ப்பணித்துக்கொள்ள முன்வரவேண்டும்; அப்போதுதான் சாதி என்கிற தீமை தீயாக மாறாமல் தடுக்கமுடியும்!

மனிதன் உண்டாக்கிய சாதி மனிதனையே அழிக்கக்கூடாது, திராவிட இயக்கம் தோன்றிய பிறகே குனிந்த சமுதாயம் நிமிர்ந்தது-என்பதையும் மறக்கக்கூடாது.

- அப்துல் லத்தீப்
இந்திய தேசிய லீக்.

இதுவரை அரசு அலுவலகங்களில் மட்டுமே நடைபெற்றுவந்த விழா இப்போதுதான் மக்கள் மத்தியில் கொண்டாடப்படுகிறது; இதற்குக் காரணமான முதலமைச்சருக்கு நாமெல்லாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். கிராமங்களில் எல்லாம் ஒதுக்குப்புறமாக, அல்லது ஒரு ஓரமாகத்தான் ஆதிதிராவிடர்கள் வாழும் நிலை இதுவரை இருந்து வந்தது; மனிதனுக்கு மனிதன் பேதம் பாராட்டும் அந்த இழிநிலை நீங்கிட-சாதிமத பேதமெல்லாம் அழிந்தொழிய "சமத்துவபுரம்' அமைத்து எல்லா மக்களும் இணைந்து இன்புற்று வாழ வகைசெய்திருக்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களை வரலாறு வாழ்த்தும் என்பது உறுதி.

- குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

சாதிவேறுபாடுகளைத் தூண்டுகிற அல்லது தீண்டாமையை வலியுறுத்துகிற காரியங்களையும் பிரிவினைப் பேச்சுகளையும் நாங்கள் அடியோடு வெறுக்கிறோம். அவ்வாறான நடவடிக்கைகளையும் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். சாதிப்பிரிவுகள் எங்கள் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு எதிரானது. இந்தக் கொடுமையைத் தவிர்ப்பதில், இந்த ஆபத்தான, நோயை நீக்குவதில் நாங்கள் என்றும் அரசுக்குத் துணை நிற்போம். இதைச் சொல்கிற போது-அரசியல் கட்சிகள் சாதிச் சங்கங்களோடு சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பேராயர் ஆரோக்கியசாமி

சுதந்திரம் கிடைத்து 50 ஆண்டுகள் கழித்தும் இந்த தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துவது வேதனைதான். நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த போது தாழ்த்தப்பட்ட மக்கள் அக்கிரகாரத்தில் நுழையும்போது தோளில் துண்டு, காலில் செருப்பு

*தீண்டாமை ஒழிப்பில் அரசியல் கட்சிகள் உறுதியோடு செயல்பட வேண்டும்!*

- பேராசிரியர் தீரன்

*நீதிபோதனை வகுப்புமூலம் தீண்டாமை ஒழிப்பிற்கு வித்திடலாம்!*

- திரு. கோபாலன்

*சாதியை ஒழிக்க நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்!*


- திரு. அப்துல் லத்தீப்

*'சமத்துவபுரம்' கண்ட கலைஞரை வரலாறு வாழ்த்தும்!*

- குன்றக்குடி அடிகளார்

*அரசியல் கட்சிகள் சாதிச் சங்கங்களோடு சமரசம் செய்துகொள்ளக்கூடியது!*

- பேராசிரியர் ஆரோக்கியசாமி



போட்டுப் போகக்கூடாது என்று இருந்தது. அதை மீறும் தாழ்த்தப்பட்டவர்கள் போலீஸ் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அந்த சட்டம் நீதிக்கட்சி ஆட்சியில் உடைத்து எறியப்பட்டது. தமிழக முதல் அமைச்சராகக் கலைஞர் இருக்கும் இந்தக் காலத்தில் தீண்டாமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்க கட்சி வேறுபாடு இன்றி ஒத்துழைப்பு தரவேண்டும்.

- பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன்

சட்டப் பேரவைத் தலைவர்

ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கிற அறிஞர் அண்ணா அவர்களின் ஒப்பற்ற கொள்கையை இந்த உலகிற்கே உணர்த்தவும், இந்த மண்ணிலிருந்து தீண்டாமைத் தீமை அடியோடு நீங்கவும், தமிழ்நாட்டை அமைதிப்பூங்காவாக மாற்றவும் - கலைஞர் அவர்களால் இம் மாநாடு நமது மதுரை மாநகரிலே நடைபெறுவதானது நமக்கெல்லாம் பெருமையளிப்பதாகும்.

- குழந்தைவேலு - மதுரை மேயர்.

சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் கடந்த பின்பு, தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துவது மகிழ்ச்சிக்குரியது அல்ல. வட இந்தியாவில் முன்பு ஜாதிக்கொடுமைகள் அதிகமாக இருந்தன. இன்றும்கூட ஜாதிக் கொடுமைகள் இருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் நல்ல விழிப்புணர்வு உள்ளது. இது முற்றிலும் முழுமை அடைய வேண்டும்.

- ஜி.ஏ.வடிவேலு

ஜனதா கட்சி.

கக்கன் சிலை திறந்து இருப்பது நல்ல எடுத்துக்காட்டு, வைத்தியநாதய்யர் மீனாட்சி அம்மன் கோவிலில் ஆதிதிராவிடர்களுடன் ஆலய பிரவேசம் செய்ய உறுதுணையாக இருந்தவர் முத்துராமலிங்கத்தேவர். சாதி உணர்வைத் தூண்டி சிலர் தலைவராக நினைக்கிறார்கள், அவர்கள் எண்ணத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது.

- அய்யணன் அம்பலம்

பார்வர்டு பிளாக்.

(மதுரையில் 31.8.1997 அன்று மாண்புமிகு செய்தி விளம்பரத்துறைத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் அவர்கள் வரவேற்புரையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சமயநல்லூர் திரு.எஸ். செல்வராசு அவர்கள் நன்றியுரையும் ஆற்றிய தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் தலைவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்.)


# மகளிர்குல மணிவிளக்கு!

**- திருமதி சரோஜினிவரதப்பன்**

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற பொன்மொழிக்கும், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வாக்கின்படியும் நம்முன்னே வாழ்ந்துகாட்டியவர் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி அவர்கள், அவருடன் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புப் பெற்றதை என் பெரும் பேறாகக் கருதுகின்றேன். நாங்கள் அவர்களை டாக்டர் அம்மா என்றுதான் குறிப்பிடுவது வழக்கம்.

அனாதைகள் மட்டுமின்றி எல்லோருக்குமே தாயாக வாழ்ந்து காட்டினார்கள் டாக்டர் அம்மா. வாழ்க்கை முழுவதும் போராட்டங்களைச் சமாளித்து வெற்றிபெற்ற பெருமையை அவரது வாழ்க்கை வரலாறு கூறும். சிறுவயதிலேயே சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட அநீதிகளைக் களைய அவர் விரும்பினார். பாரதியாரின் புதுமைப் பெண்ணாகத் திகழ்ந்தார்.

புதுக்கோட்டையில் பிறந்த அவர், பல இடர்ப்பாடுகளைத் தாண்டி, மகாராஜா கல்லூரியில் முதல் பெண் மாணவியாகச் சேர்ந்ததைக் கேட்கும்போது, நாம் வியக்காமல் இருக்க முடியாது. இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் விடாமுயற்சி, தன்னம்பிக்கை, தளரா உறுதி, காரியத்தைச் சாதிக்கும் திறமை மூலம் அவர் பல முதல் ஸ்தானத்தைப் பிடித்துள்ளார் என்று பார்க்கும்போது அன்னாருடைய சாதனைகள் நமக்கு உற்சாகம் ஊட்டுகின்றன. முதல் பெண் மருத்துவ மாணாக்கராக, முதல் மேல்சபைப் பெண் அங்கத்தினராக, முதல் பெண் தலைவியாக, பல்வேறு சமூகச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வரக் காரணமாக இருந்த அம்மையார் அவர்களின் தொண்டு தமிழகப் பெண்களுக்குப் பெருமை தரக்கூடியது.



சிறந்த மருத்துவராக விளங்கிய டாக்டர் அம்மா பணம் ஈட்டுவதுதான் வாழ்க்கையின் இலட்சியம் என்று நினைத்திருந்தால் எவ்வளவோ சம்பாதித்திருக்கலாம். அடையாறில் தன் கணவருடன் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்த டாக்டர் அம்மா எங்கள் குடும்பத்தின் மருத்துவர் என்று கூறிக்கொள்ளுவதில் நான் பெருமை அடைகின்றேன்.

நான் பள்ளிச் சிறுமியாக இருந்த காலத்தில் எங்கள் வீட்டிற்கு டாக்டர் வந்துபோனது பசுமையாக எனக்கு நினைவு வருகின்றது. பளபளவென்று மின்னும் பெரிய வைரக் கம்மல், பட்டொளி வீசும் பெரிய கூரைபோட்ட காஞ்சிபுரம் புடவை உடுத்தி மிடுக்காக நடந்து வருவார். மயிலாப்பூரில் வசித்த பல செல்வந்தர் குடும்பங்களுக்கு மருத்துவராக விளங்கினார். ரொம்பக் கண்டிப்பு. அதே டாக்டர் அம்மா தேசியப்பற்று மிகுந்தவராக இருந்தமையால் பெருவாரியாகப் பொருளீட்டக் கூடிய மருத்துவத் தொழிலை விட்டுச் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டார்.

ஏழை, எளியவர்கள், அனாதைக் குழந்தைகளுக்குப் பணி செய்ய முற்பட்டார். தனக்குக் கிடைத்தபெரும் பதவியையும் உதறித் தள்ளினார். மகாத்மா காந்திஜியின் தேசிய இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். அதன் பிறகு அவருடைய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம். ஆடம்பர வாழ்க்கை அவருக்கு ஒத்துவரவில்லை. எளிய வாழ்க்கை, தூய கதராடை, ஒரு சன்னியாசி போலத் தன்னுடைய தேவைகளைக் குறைத்து, பெண்கள், குழந்தைகளின் நலத்திற்குத் தன் வாழ்நாள் முழுவதும் செலவிட முடிவு செய்தார்.

டாக்டர் ரெட்டி அவர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் மிக நெருக்கமான உறவு. என் தகப்பனார் புரசைவாக்கத்தில் குடியிருந்து தனது ஆரம்பக் கல்வி பெற்ற நேரத்தில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் குடும்பமும் புரசையில் வாழ்ந்ததாகவும் அவர்கள் சேர்ந்து பள்ளிக்குப் போவது குறித்து என் தகப்பனார் சொல்லியிருக்கிறார். அதன் பிறகு தேசிய இயக்கத்தில் ஒன்றாக ஈடுபட்டுள்ளார்கள். பிறகு சட்டசபையிலும் சேர்ந்து பணிபுரிந்துள்ளார்கள். என்னுடைய தகப்பனார் அமைச்சராக இருந்த காலங்களில் பலமுறை அவர்களுடன் சென்று நான் டாக்டர் அம்மாவைச் சந்தித்துள்ளேன்.

டாக்டர் அவர்கள் இந்திய மாதர் சங்கத்தின் ஆரம்ப நாட்கள் முதல் சிறந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்பது என் தாயார் மூலம் எனக்குத் தெரியும். ஸ்ரீமதி மார்கரட் கஸின்ஸ் அம்மையாருடன் டாக்டர் ரெட்டி இந்திய மாதர் சங்கத்தை உருவாக்கியுள்ளார்கள். அதன் பிறகு 1927ஆம் ஆண்டில் இந்திய மாதர் சங்கம் அகில இந்திய அளவில் வளர வேண்டும் என்று மிகுந்த பிரயாசையுடன் முதல் மாநாடு பூனாவில் கூட்டினார்கள். பெண்கல்வி, பால்ய விவாகத்தைத் தடை செய்வது போன்ற பல முன்னேற்றப் பணிகளில் அகில இந்திய மாதர் சங்கமாகப் பரிணமித்து இதை ஓர் மாபெரும் பெண்கள் இயக்கமாக மாற்றிய பெரும் பணியில் டாக்டர் அம்மா முன்னணியில் நின்றார்கள்.

1931ஆம் ஆண்டு லாகூரில் நடந்த அகில இந்திய மாதர் மாநாட்டின் தலைவியாக டாக்டர் அம்மா, முதல்



தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக விளங்கியது மட்டுமின்றி பல்வேறு சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப் பாடுபட்டார்கள். அதே நேரத்தில் இந்திய மாதர் சங்கத்தையும் சென்னையில் சீரும் சிறப்புமாக நடத்தி வந்தார்கள். இந்திய மாதர் சங்கத்தில் என் தாயார் முக்கிய உறுப்பினராக இருந்துவந்த காலங்களில் நான் அவர்களுடன் கூட்டங்களுக்குப் போவது வழக்கம். இது எனக்கு மிகுந்த உற்சாகத்தையும் சமூக நலப்பணி புரிய ஊக்கத்தையும் அளித்தது. சுதந்திரம் பெற்ற 1947ஆம் ஆண்டு சென்னையில் அகில இந்திய மாதர் மாநாடு கூடியது. அப்பொழுது என் தாயார் சற்று சுகவீனமாக இருந்த காரணத்தால் என்னைக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள். எனவே எனக்கு டாக்டர் அம்மாவிடம் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புகள் நிறையக் கிடைத்தன.

டாக்டர் அவர்களிடம் பணிபுரிவது ஒரு பெரும் படிப்பினை. எடுத்த காரியத்தை முடிப்பது, ஓயாது பெண்கள் நலத்திற்கு உழைப்பது, விழிப்புணர்ச்சியுடன் இருந்து உடனடியாக நிவாரணம் செய்ய முற்படுவது போன்ற பல நற்பண்புகள் டாக்டர் அம்மாவிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். ஏழை, எளியவர், பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றிப் பழகக்கூடிய தலைவி டாக்டர் அம்மா. அதே நேரத்தில் நம் முதுகைத் தட்டிக் கொடுத்து நம்மிடம் வேலை வாங்குவதிலும் அம்மா கைதேர்ந்தவர்கள். யாரிடம் என்ன திறமை உள்ளது என்பதை நன்றாக ஆராய்ந்து, பக்குவமாக அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் சாதுர்யம் அம்மாவிடம் பூரணமாக இருந்தது.

அம்மாவினுடைய சகோதரி புற்றுநோயில் மிகவும் கஷ்டப்பட்டதைப் பார்த்த டாக்டர், புற்றுநோய் ஆஸ்பத்திரி ஆரம்பிக்க எண்ணம் கொண்டார். அப்பொழுது மருத்துவர்களில் சிலர் 'புற்றுநோய் தீராத வியாதி, இதற்குச் செலவிடுவது விரயம்' என்று நினைத்தார்கள். ஆனால் டாக்டர் அம்மா ஒரே நோக்குடன், 'துன்புறுபவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுதான் மனிதாபிமானச் செய்கை' என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார்கள். முழுமூச்சுடன் புற்றுநோய் ஆஸ்பத்திரியை இந்திய மாதர் சங்கத்தின் மூலமாகவே தோற்றுவிக்கப் பிரயத்தனம் செய்தார்கள். அதற்கு அரசு நிலம் தேவைப்பட்டது. பிரம்மப் பியத்தனம் செய்யவேண்டியதாய் இருந்தது. என் தகப்பனார் அமைச்சராக இருந்தமையால் அடிக்கடி எனக்கு டெலிபோன் மூலம் டாக்டர் அம்மா நினைவுபடுத்துவார்கள்.

அவர்களுடைய விடா முயற்சியினால் அரசினர் நிலத்தை ஒதுக்கினார்கள். அப்பொழுது பாரதப் பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு அடிக்கல் நாட்ட வேண்டும் என டாக்டர் அம்மா விரும்பினார்கள். அப்போது தமிழக முதல் அமைச்சராக அறிஞர் ராஜாஜி இருந்தார். அவர் சம்மதம் அளிக்கவில்லை. டாக்டர் அம்மா விடுவதாக இல்லை. எனக்குப் பலமுறை டெலிபோன் செய்து எப்படியாவது நேருவைச் சம்மதிக்க வைக்க முயலுமாறு கூறினார்கள். அவர்களின் விடாமுயற்சி பயனளித்தது. நேரு அவர்கள் சம்மதம் அளித்தார். ராஜாஜியின் தலைமையிலே புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்ச்சி மறக்க முடியாதது. மே மாதம் கடும் வெயிலில் பிற்பகல் 11.45 மணிக்கு இந்த விழா எங்களுக்குத் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டது. கொடுத்த நிலமோ காந்திநகர் கனால் ரோடில் வால்போன்ற சிறிய இடம். அஞ்சா நெஞ்சம் படைத்த டாக்டர் அம்மா, பொட்டல் காடாக இருந்த இடத்தில் ஒரு தட்டுப்பந்தல் போட்டு எளிமையாக விழா ஏற்பாடு செய்துவிட்டு - பாரதப் பிரதமர்கள், ராஜாஜி ஆகியோரின் பாராட்டுகள் பெற்றார்கள். அன்று ஜவகர்லால் அடிக்கல் நாட்டிய புற்றுநோய் ஆஸ்பத்திரி இன்று ஆலமரமாகப் பரந்து ஆசியாக் கண்டத்திலேயே முதன்மையான ஆஸ்பத்திரியாக விளங்கி, பல்லாயிரக்கணக்கான நோயாளிகளின் துயரம் துடைக்கும் சிகரமாக விளங்குகின்றது என்றால், டாக்டர் அம்மாவின் உழைப்பு திருவினையாக்கியது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இதே போல அனாதைக் குழந்தைகளுக்கு ஒரு முன்னோடியான இல்லமாக ஔவை இல்லத்தைத் துவக்கினார்கள்.

மேலவையில் இருந்த காலத்தில் உருப்படியான பல சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். தேவதாசி ஒழிப்புச் சட்டம் உலகப் பிரசித்தமானது. பலதாரச் சட்டம் வந்தபோது பல சட்ட உறுப்பினர்களே அதற்கு விரோதமாக இருந்தமையால் சட்டம் அமலுக்கு வரும் தினம் இந்திய மாதர் சங்கத்தின் அங்கத்தினர்களை எல்லாம் ஒன்று திரட்டி Visitors galloryயில் உட்கார வைத்துப் பெண்களின் பலத்தை அரசுக்கு எடுத்துக்காட்டினார்கள். அன்று நானும் அந்தக் கூட்டத்தில் இருந்தது என்னால் மறக்க முடியாது. இவ்வாறு பெண்களுக்கு எந்தக் கோடியில் ஓர் இடையூறு என்று கேட்டாலும் உடனடியாகச் சீறி எழுந்து, காரசாரமாகத் தன் கருத்துரையைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி விடுவார்கள். அதற்குப் பெரும் மதிப்பும் உண்டு.



இப்படிப்பட்ட ஒரு பெரும் தலைவி இம் மாதர் சங்கத்திற்கு இருந்தமையால் அவர்கள் காலம் பொற்காலமாக அமைந்து பல நல்ல பணிகள் புரிய முடிந்தது. எத்தனையோ பெரும் தேசிய தலைவிகள், உலகத் தலைவிகள் எல்லாம் சென்னையில் டாக்டர் அம்மாவின் தலைமையின்கீழ் இயங்கி வந்த இம் மாதர் சங்கத்தின் விழாக்களில் பங்கு கொண்டு பாராட்டிச் சென்றுள்ளார்கள்.

கடைசியாக இந்திய மாதர் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட டாக்டர் அம்மா விரும்பினார்கள்.

அவர்களுடைய கடைசி ஆவலைப் பூர்த்தி செய்ய அன்றுள்ள அரசு மனமுவந்து கபாலீஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான பத்து கிரௌண்ட் நிலத்தை இம்மாதர் சங்கத்திற்கு வழங்கினார்கள். தள்ளாத நிலையிலும் டாக்டர் அம்மா நேரில் வந்து அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு பெற்றார்கள். அதுதான் கடைசி நிகழ்ச்சி. கட்டடம் முடிந்த நேரம் டாக்டர் அம்மா மறைந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் ஆசியுடன் அந்தக் கட்டடத்தில் இன்று வேலைக்குப் போகும் பெண்கள் ஹாஸ்டல் நல்ல முறையில் நடக்கின்றது. அத்துடன் குழந்தைகள் காப்பகங்கள் செவ்வையாக நடந்து வருகின்றன. அவர்கள் கைபட்ட இடம் எல்லாம் வளர்ந்துள்ளது. அன்று ஐந்து கிளைகள் கொண்ட இம்மாதர் சங்கம், இன்று மேலும் பல கிளைகளைப் பெற்று, தமிழகம் முழுவதும் ஏறக்குறைய பல்லாயிரம் பெண்களுக்கு எழுத்தறிவு அளித்துள்ளது என்பதைப் பெருமையுடன் கூறி, அஞ்சலி சமர்ப்பிக்கின்றேன்.

ஸ்தாபனங்களை ஆரம்பித்தால் மட்டும் போதாது. அவை செவ்வையாகச் செயலாற்றத் தகுதியுள்ள தொண்டர்கள் தேவை. அம்மாவிற்கு இரண்டாவது வரிசைத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிப்பதிலும் நல்ல திறமை உண்டு என்பதை நிரூபித்துவிட்டார்கள். இளம் வயதுத் தொண்டர்களிடம் அன்புடன் பேசி அவர்களை ஊக்குவிக்கும் பாங்கு மிகுந்தவர்கள். மேடையில் நம்மைப் பேச வைப்பார்கள். உடனே நம்மை அழைத்து "நீ ரொம்ப நன்றாகப் பேசினாய் அம்மா" என்று உற்சாகப்படுத்தவும் தவறமாட்டார்கள்.

தேசிய உலக அரங்குகளில் நான் பங்கு கொள்ள நேரிடும் போதெல்லாம் டாக்டர் அம்மாவிடம் ஸ்வாதீனமாக ஓடிச்சென்று கருத்துக்கள் கேட்பேன். அவர்களுக்கிருந்த ஞாபகச் சக்தி அபாரமானது. கண்ணை மூடிக்கொண்டு மளமளவென்று கருத்துகளை அள்ளி வீசுவார்கள். அவை அனைத்தும் மிக உயர்ந்த கருத்துக்களாகப் பாராட்டப்படும். இவ்வாறு அவர்களது அடிச்சுவட்டில் பயிற்சி பெற்ற நான், அவர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டிலிருந்து அனைத்திந்திய மாதர் மாநாட்டில் 1980ல் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, என் தாயாரின் மறைவு எவ்வளவு பாதித்ததோ அதே போல - டாக்டர் அம்மா இல்லையே என்கிற குறை எனக்குத் தலை தூக்கியிருந்தது. ஏனென்றால் என் தாயாரிடம் டாக்டர் அம்மா அடிக்கடி கூறுவார்கள். 'ஞானசுந்தரம்மா! உங்கள் பெண் ரொம்ப சமர்த்து. சரோஜினியை நான் என் பெண்ணாக ஸ்வீகரித்துக் கொண்டேன்' என்று அன்பொழுகக் கூறுவார்கள்.

பல்வேறு துறைகளில் நாட்டின் நலனில் அக்கறை கொண்டு அம்மையார் ஆற்றிய பணிகள் அளவில் அடங்காது.

தமிழக சமூகநல வாரியத்தின் முதல் தலைவியாகவும் பொறுப்பேற்று அரிய சாதனைகள் புரிந்தவர் நம் டாக்டர் அம்மா என்று பார்க்கும்போது சமூக நலத்தில் தொண்டாற்றுபவர்கள். அத்தனைப் பேரும் அவர் காட்டிய வழியில் செல்வோமேயானால் நாடு நலம் பெறும். அவரைப் போன்ற தேசப்பற்றும் நலிந்தவர்களிடம் அன்பு, ஆதரவு காட்டுவது - தைரியமாகப் பெண்களின் உரிமைகளை எடுத்துச் சொல்லுவது, கடமை உணர்ச்சியுடன் அல்லும் பகலும் உழைப்பது போன்ற திறன் பெற்ற நன்முத்துக்களைத் தமிழகம் ஏராளமாக உருவாக்கட்டும்!

---

# சுதந்திரம்

### - அறிஞர் அண்ணா

இந்தியத் துணைக் கண்டத்தில் 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அரச வட்டாரங்களிலிருந்தும் கீழே இறங்குவதுடன், இரு இடங்களிலும் சுதந்திரக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன.



அந்நிய ஆட்சி ஒழிந்து புதுச் சுதந்திர ஆட்சிகள் ஆரம்பமாகும் இந்த நாளில், அந்நியர் ஆட்சியின் விளைவுகளாக இருந்துவரும் தொல்லைகளையும், அல்லல்களையும் நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி கேட்கும் உரிமையும், பலமும், வசதியும் மக்களுக்குத் தானாகவே பிறக்கின்றன.

நாட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், மண்டை பிளக்கப் பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்துக்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள்.

பெரியார், காங்கிரசில் தலைமை வகித்து பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துக் கஷ்ட நஷ்டமடைந்திருக்கிறார். ஆகவே, விடுதலை விழாவைக் கொண்டாடப் பாத்யதை கொண்டவர்களிலே அவர் மிக முக்கியமானவர்.

### அநியாயம் அகன்றது

நியாயத்தை மட்டுமே கவனித்து எந்த நாட்டிலும் ஆட்சியாளர்கள் நடப்பதில்லை. நியாயத்தை நிலைநாட்ட, பலம் துணையாக இருக்கிறது என்றால் மட்டுமே காரியம் பலிக்கும்.

ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆளுவது அக்ரமம்.

எந்த நாடும் சுயாட்சி கேட்பது நியாயம். இந்த நியாயத்தை எடுத்துக் கூறிய உடனே - காங்கிரசை மதித்து சுயராஜ்யம் கொடுக்க, எந்த கிரிப்சும், மவுண்ட்பேட்டனும் முன்வரவில்லை. ஏளனம் பேசும் சர்ச்சில்களாகத்தான் சகல பிரிட்டிஷாரும் இருந்தனர். நியாயத்தின் பக்கபலமாகத் தியாகம், கிளர்ச்சி, பணபலம், பத்திரிகை பலம், இவ்வளவுக்கும் மேலாக - உலகச் சூழ்நிலையில் மாறுதல், பிரிட்டிஷ் பலச் சரிவு என்பவை ஏற்பட்டதால்தான் மந்திரிகள் பறந்து வந்தனர், நியாயம் வழங்க!

***(10.8.1947ல் எழுதியது)***

# மறுமலர்ச்சிக் கவிஞர் ஜீவா



பாரதி பாதையைப் பின்பற்றி, பாமரர்கள் எழுச்சி பெறச் செய்த பாடல்கள் பலவற்றைப் பாடியவர், தமிழ்நாட்டினரால் 'ஜீவா' என்று செல்லமாக அழைக்கப்பட்ட ப. ஜீவானந்தம். பாரதியார் கவிதைகள் ஆன்மீக அடிப்படையில், புது உலகு காண மக்களை அழைத்தன. ஜீவாவின் பாடல்களில், மனிதனே மையப் பொருள்; மனிதனின் உணர்ச்சிகள் வலுப்பெற்று, இலட்சியப் பிடிப்புகள் மேலோங்கி, சிந்தனையும் செயலும் சமதர்ம நெறியில் நின்று, புதிய உலகைப் படைக்க அறைகூவல் விடுப்பவை ஜீவாவின் பாடல்கள்.

அவர் பாடல்களில் ஓங்கி நிற்பது சமதர்ம உணர்வு, அச்சுரண்டலற்ற சமதர்மச் சமுதாயத்தைச் சமைப்பதற்குச் சுதந்திர வேட்கை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் அமைந்தது.

1935ஆம் ஆண்டில், கோவையில் ஸ்டேன்ஸ் ஆலையில் வேலை நிறுத்தம் நடந்தபோது, தொழிலாளர் கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு ஜீவா வரைந்த 'காலுக்குச் செருப்பும் இல்லை' என்ற பாடல், வேலை நிறுத்தம் செய்த அத் தொழிலாளர்களை வீறு கொண்டு எழச் செய்ததோடு, தேசியக் கூட்டங்களிலும் தொழிலாளர் கூட்டங்களிலும், பல ஆண்டுகள் பாடப்பட்டு, கேட்போரை உணர்ச்சி வசப்படுத்தியது.

*"காலுக்குச் செருப்புமில்லை*
*கால் வயிற்றுக் கூழுமில்லை*
*பாழுக் குழைத்தோ மடா - என் தோழனே*
*பசையற்றுப் போனோ மடா"*

- என்று, பாடுபட்டதன் பலனைப் பறிகொடுத்துப் பரிதவித்த பாட்டாளி மக்களின் பரிதாப நிலையைப் படம் பிடித்துக் காட்டினார் அவர்.

*"பாலின்றிப் பிள்ளை அழும்*
*பட்டினியால் தாயழுவாள்*
*வேலையின்றி நாமழுவோம் - என் தோழனே*
*வீடுமுச் சூடும் அழும்"*

- என்று பாடுகையில், சூழ்ந்திருந்த வறுமையையும் கவ்வியிருந்த இருளையும் போக்க, சமதர்ம உணர்வைச் சூடி சமருக்கு முன்வர, அழைக்கின்றார் ஜீவா, 'முச்சூடும் அழும்' என்ற மொழிகளில், மூச்சு விடுகிறது புரட்சி உணர்வு.

*"நானோர் தொழிலாளி - ஒரு*
*நாய்க்குறும் சுகமேனும் வாய்க்கும் வழியில்லை!*
*ஏனோ புவிவாழ்வு" - (நானோர்)*

*எறும்பும் சுதந்திரம் விரும்பி யடையநான்*
*தானோ அடிமை ஐந்து - கொடும்*
*சஞ்சலத்தேள் கொட்டித் துஞ்சுகின்றேன் -*
*அந்தோ! (நானோர்)*

- என்று 1938இல் ஜீவா ஆக்கிய பாடலை, கலைஞர் டி.கே. சண்முகம், 'பதிபக்தி' நாடகத்தில் தேயிலைத் தோட்டக் காட்சியில் பாடியபோது மக்கள் மெய்சிலிர்த்தனர்.

அந்நிய ஏகாதிபத்தியம், ஆதிக்க சமுதாயத்துக்கு ஆதரவாக இருந்ததால், சமதர்மத்தை நிலைநாட்ட முதலில் சுதந்திரம் எய்தவேண்டும் என்று சுட்டிக்காட்டும் தேசிய விடுதலைப் பாடல்கள் பலவற்றைத் தோழர் ஜீவா ஆக்கியுள்ளார்.

*"தேசம் சுதந்திரம் பெறலாகாதா -*
*எங்கள் இந்திய (தேசம்)*

*ஏகாதி பத்தியம் வந்து புகுந்து*
*ஏறி மிதித்திட நொந்தோம்*
*சோகம் தவிர்க்க நாமினி ஒன்று*
*சூழ்ந்து துணிய லாகாதா (தேசம்)"*

- என்ற பாடல் 1937இல், கோவை பாப்ப நாயக்கன்பாளையம் லட்சுமி மில்லில் நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது ஜீவா விடுத்த வீறார்ந்த அறைகூவல்,






சுதந்திரத்திருநாள் பொன்விழாவை முன்னிட்டு சென்னை மாநகராட்சியின் சார்பில், 19-8-97 அன்று ரிப்பன் மாளிகை வளாகத்தில் வணக்கத்திற்குரிய மாநகர மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் முன்னிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பொன்விழா நினைவுத்தூணுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.30 கோடி மதிப்பீட்டிலான அண்ணா மறுமலர்ச்சித் திட்ட விவரக் கையேட்டை வெளியிட்டார். அதனை மாநகர மேயர் அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில் துணைமேயர் திருமதி சந்திரவதனா, மாநகராட்சி ஆணையர் திரு. தேவஜோதி ஜெகராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

"பூரண சுயேச்சைநம் தேசம்எய் திடுமாறு
போர்முர சடிக்க வேண்டும்,
புன்னெறிகொள் ஏகாதிபத்தியமோ டுறவுசெய்
போக்கைப் பழிக்க வேண்டும்!
சாரமில் லாதபுது அரசிய லெனும் அடிமைச்
சாசனம் உடைக்க வேண்டும்;
ஜனநாய கத்திற்கு முரணான சட்டங்கள்
தம்மைத் தகர்க்க வேண்டும்!".

- என்று, 1937இல் அவர் முழங்கிய பாடலில், 'ஊரறிய நாடறிய உலகறிய நம் கொள்கை உறுதிபெற, ஓர்மையாய் தேசிய முன்னணி படைப்பதில் ஒன்றுபடுவீர் தோழரே' என்று போர்ப்பரணி பாடுகின்றார்.

"அஷ்ட தரித்திரம் அகன்றிட வேண்டி
அடிமைக் கொடும்தளை அறுந்திட வேண்டி
துஷ்ட துர்ரைத்தனம் தொலைந்திட வேண்டி
காங்கிரஸ் கொடிக்கீழ்
பாங்கொடு நீயும்
கச்சையை வரிந்து கட்டி நின்றே தோழா"

- என்ற பாடல், நிமிர்ந்து சண்டைபோட்டு, நீதியை நிலைநாட்ட, முதிர்ந்த தேசப்பற்றுடன் முனைந்து செயல்பட அழைக்கும் முற்போக்குப் பாடல்.

"என்றைக்குச் சிவகிருபை வருமோ - ஏழை
என்மனச் சஞ்சலம் அறுமோ!"

- என்று அன்று மக்களைக் கவர்ந்திருந்த ஒரு பாடலின் மெட்டிலே,

"என்றைக்குச் சுதந்திரம் வருமோ - ஏழை
இந்தியர் துயரங்கள் அறுமோ?"

- என்று விடுதலை வேட்கையை மீட்டிய பாடல் அவருடைய பெரும்புகழ் ஈட்டியதொன்று.

அந்நிய ஆதிக்கத்தால் மட்டும் ஏற்பட்டதன்று அடிமைத்தனமென்பதையும், சமயத்தின் பேரால் பல சழக்குகளுக்கும், மதங்களின் பெயரால் பல மாச்சரியங்களுக்கும், மறைகளின் பெயரால் பல மடமைகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும், ஆசாரத்தின் பெயரால் பல அறிவீனங்களுக்கும் மக்கள் அடிமையாகி விட்டனர் என்பதை அம்பலப்படுத்தினார், சமுதாய மறுமலர்ச்சிக் கவிஞராம் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள்.

-'தேசியம் வளர்த்த தமிழ்' என்னும் நூலிலிருந்து.

# சுதந்திரப் போரிலே சுடர்முகம் தூக்கியோர் !



தமது இன்னுயிரையும் துச்சமென மதித்து, இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டு களச்சாவு கண்டோர் கணக்கற்றவர் ஆவர். அவர்களில் குறிப்பிடத்தக்க சிலரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இங்கே அணிவகுக்கின்றன.

### தாதாபாய் நௌரோஜி (1825 - 1917)

இந்தியப் பொது வாழ்வின் கனவான் என்று அழைக்கப்பட்டவர். வர்த்தகத் துறையில் நமது மக்கள் வளர வழி வகுத்தவர். இங்கிலாந்தில் வசித்தபோதே இந்தியாவின் உயர்வுக்குப் பாடுபட்டவர். இங்கிலாந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட முதல் இந்தியர். 1893-1906 ஆகிய இரு ஆண்டுகளில் காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்தார்.



இந்தியர்களும் ஐ.சி.எஸ். ஆகப் படித்துப் பட்டம் பெறலாம் என்ற உரிமையை இங்கிலாந்தில் போராடிப் பெற்றவர். இந்திய விடுதலை என்னும் குறிக்கோளுக்கு வித்திட்டவர்களில் ஒருவர். ''நமது நாட்டுத் தாய்மார்களுக்கு நௌரோஜி போல் புதல்வர்கள் பிறக்க வேண்டும்'' என்று இவரைப் பற்றி மகாகவி பாரதி பாடுகிறார். 1917 ஜூன் 3ல் மறைந்தார்.

### திலகர் (1856 - 1920)

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று முதன் முதல் முழங்கி, இந்திய சுதந்திர இயக்கத்துக்கு வேக மூட்டியவர் லோகமான்ய பாலகங்காதர திலகர். 1856ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் தேதி மராட்டியத்தைச் சேர்ந்த ரத்னகிரியில் கங்காதர்பந்த் பார்வதிபாய் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். 1879இல் சட்டப்படிப்பை முடித்தார்.



1880-இல் பூனாவில் பள்ளி ஆசிரியர் ஆனார். 1881-இல் 'மராட்டா' என்ற ஆங்கில வார இதழையும், 'கேசரி' என்ற மராத்தி மொழி வார இதழையும் நடத்தினார். ஒரு வழக்கில் நான்கு மாத சிறைத் தண்டனை பெற்றார். 1889-இல் பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். தீவிரவாதிகளான லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால் போன்றோருடன் தொடர்பு கொண்டார். 1907 காங்கிரஸ் மாநாட்டில் மிதவாதிகளுடன் பலப்பரீட்சை; 1897 ஜூலையில் கைதானார். 18 மாத தண்டனை கிடைத்தது. தண்டனைக் காலம் முடியும் முன்பே 1898-ல் விடுதலை பெற்றார்.

தீவிர சுதேசி பிரச்சாரம். முசபர்பூரில் வெள்ளைக்கார நீதிபதி மீது வெடிகுண்டு வீச்சு சம்பவத்தை ஆதரித்து எழுதியதற்காக இவர் மீது ராஜதுவேஷ வழக்கு எழுந்தது. நீதிமன்றத்தில் 21 மணி நேரம் தாமே தமது வழக்கில் வாதாடினார். ஆறு ஆண்டு தண்டனை கிடைத்தது. நாடு கடத்துமாறு தீர்ப்பு விதிக்கப்பட்டது. 1914 வரை பர்மாவில் மாண்டலே சிறைவாசம்.

'கீதா ரகஸ்யம்' என்ற நூலை எழுதினார். 1918 செப்டம்பரில் லண்டன் பயணம். இங்கிலாந்தில் இந்திய சுதந்திரத்துக்கு ஆதரவாக ஓர் ஆண்டு பிரச்சாரம்.

1919இல் நாடு திரும்பினார். 1920ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கினார். அதே ஆண்டு ஜூலை 28-இல் மறைவு. மராட்டியத்தில் விநாயகர் விழா சிவாஜி விழா கொண்டாட வழிவகுத்தவர் இவரே. இந்திய விடுதலை இயக்கத் தீவிரவாதிகளின் 'தியாகம்' என்ற சொல்லுக்கு ஓர் இலக்கணம்' என்று காந்தியடிகளால் புகழப் பெற்றவர்.

### கோகலே (1866 -1915)

மகாத்மா காந்தியால் 'எனது குருநாதர்' என்று வர்ணிக்கப்பட்ட கோபாலகிருஷ்ண கோகலே புதிய இந்தியாவை உருவாக்கியவர்களில் ஒருவர். இரத்தினகிரியில் 1866 மே 9ஆம் தேதி பிறந்தார். பூனாவில் படித்து அதே நகரில் பெர்கூசன் கல்லூரியில் பேராசிரியர் ஆனார். பம்பாய் மேலவைக்கு 1899-இல் தேர்ந்து எடுக்கப்பட்டார். மத்திய கவுன்சிலில் 1902-இல் உறுப்பின ரானார். கட்டாய இலவசக் கல்விக்காக அப்போதே வாதாடினார்.



1905-இல் காசி காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை வகித்தார். வங்கப் பிரிவினையை எதிர்த்தார். தென்ஆப்பிரிக்கா சென்று அங்குள்ள இந்தியர்களின் இன்னலைத் தீர்க்கப் பாடுபட்டார்.

தென் ஆப்பிரிக்காவில் அப்பொழுது இயக்கம் நடத்திய மகாத்மாவுக்கும் தென் ஆப்பிரிக்க அரசுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட உதவினார். 'ஆக்கப்பூர்வமான தேசீயம்' என்பது இவர் கொள்கை.

இந்தியாவை நிர்வாகம் செய்ய மக்கள் பயிற்சி பெற வேண்டும் என்பதற்காக 1905-இல் இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவினார். கூட்டுறவு இயக்கம், மகளிர் முன்னேற்றம் போன்ற கருத்துக்களைப் பரப்பினார்.

விடுதலைக்காகவும், மக்களைச் சீர்திருத்துவதற்காகவும் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். அரசியல் கலப்பற்ற சமூக சேவையை, வலியுறுத்தியவர். அதேபோல் வாழ்ந்து காட்டியவர். ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். 1915ஆம் ஆண்டு பிப்ரவரி 19இல் அமரர் ஆனார்.

### லாலா லஜபதிராய்

பஞ்சாப் மாகாணம் லூதியானா மாவட்டத்தில் ஜகராம்ஸ் கிராமத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர் லாலா லஜபதிராய். 'லாலாஜி' என மிகச் செல்லமாக அழைக்கப்பட்டார். பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும்போது இவருக்குச் சுதந்திரத்தில் பற்று ஏற்பட்டது. வக்கீலாகப் பட்டம் பெற்ற லாலாஜி நாட்டில் ஏழை மக்களுக்காக இலவசமாகவே ஆஜராகி, வழக்கு நடத்தி வெற்றி கண்டவர்.

மராட்டியச் சிங்கம் எனக்கூறும் லோகமான்ய பாலகங்காதர திலகர், வங்காளப் புரட்சி மன்னன் விபின் சந்திரபால் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். இதன் காரணத்தால் இம்மூவர்களையும் இணைத்து 'பால் லால் பால்' என்று சிறப்புடன் அழைப்பர்.

லாலா லஜபதிராயின் பெயரைக் கேட்டாலேயே ஆட்சியாளர்களுக்கு நடுக்கம்தான்! இவர் மீது ராஜ துரோகக் குற்றங்களையும் சாட்டி, நாடு கடத்தினர். 1928-இல் நாடெங்கும் விடுதலைப் போராட்டம் உச்சக்கட்ட நிலையில் இருந்தது. அச்சமயம் ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட 'சைமன் கமிஷன் குழு' லாகூருக்கு வந்தபோது தடையையும் மீறி 'லாலாஜி' ஆட்சியாளர்களை எதிர்த்துக் கோஷமிட்டு ஊர்வலம் நடத்தினார். இதனைக் கண்ட ஆங்கிலேயப் போலீஸ் அதிகாரியான 'ஸ்காட்டும்' அவருக்குத் துணையாக 'சாண்டர்ஸூம்' ஊர்வலத்தைத் தடை செய்ததுடன், லாலா லஜபதிராயின் தலையில் பலமாகத் தாக்கினார்கள்.

பலத்த காயங்களுடன், அஞ்சா நெஞ்சத்துடன் 'வந்தே மாதரம்' பாரத் மாதாகீ ஜெய்!' என்ற தாரக மந்திர கோஷத்துடன் உயிரை நாட்டிற்காக அர்ப்பணித்தவர்.

### சத்தியமூர்த்தி

புதுக்கோட்டை வழக்கறிஞர் சுந்தரசாஸ்திரி, சுப்புலட்சுமி தம்பதியருக்கு 19.8.1887இல் மகனாகத் திருமயத்தில் பிறந்தவர் சத்தியமூர்த்தி.

கல்லூரி மாணவராக இருந்தபோதே நாட்டுப்பற்று மிக்கவராக விளங்கிய இவர் காங்கிரஸ் பேரியக்கத்தின் தொண்டர் படையில் 1908ல் சேர்ந்தார். கிராமங்களுக்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார். சிறந்த வழக்கறிஞராக விளங்கிய இவர் திலகர், லஜபதிராய் ஆகியோரிடம் பற்றுக் கொண்டிருந்தார். காந்தியடிகளின் அறப்போரின் நெறிகள் இவரைக் கவர்ந்தன. அவற்றில் பங்கு பெற்றார்.

1923, 1926 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். மகாகவி பாரதியின் பாடலை அரசு தடை செய்தபோது, சட்டமன்றத்தில் அவசரத் தீர்மானம் கொண்டு வந்து பாரதியின் பாடலின் பெருமையை எடுத்துரைத்தார் சத்தியமூர்த்தி.

இவரது தீர்மானம் வெற்றியுடன் நிறைவேறியது. 1934ல் மத்திய சட்டமன்ற உறுப்பினரானார். டில்லி மத்திய சட்டசபையில் அவர் இங்கிலீஷ்காரர்களை மடக்கிய ஆற்றல் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கதை கதையாகப் பேசப்பட்ட காலம் உண்டு. 1939ல் சென்னை மாநகரத்தின் மேயர் ஆனார். 1942ஆம் ஆண்டுப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டார். உடல் நலிவின் காரணமாக விடுதலை பெற்றார்.

"இந்திய விடுதலைக்காக வாதாட ஒரே ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினால் போதும் என்ற நிலை வந்தால் நான் சத்தியமூர்த்தியைத்தான் அனுப்புவேன்" என்று மகாத்மா கூறினார். அந்த அளவு சட்டமன்ற, நாடாளுமன்ற விவகாரங்களில் புகழும் தேர்ச்சியும் பெற்றவர். அவருக்கிணையாக ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசக்கூடியவர்கள் மிகவும் அருமை. தமிழ்நாட்டின் பெருமையை உயர்த்திய பெருமகன். 'சுதந்திர இந்தியாவைக் காணாமல் போகிறேனே' என்று புலம்பியவாறு உயிர் நீத்தார்.

### சர்தார் பட்டேல் (1875 1950)

இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழ் பெற்றவர். பெரிய வழக்கறிஞர். காந்தியடிகளின் அழைப்பை ஏற்றுத் தொழிலைத் துறந்தவர். குஜராத் பகுதியில் தேசிய விடுதலை இயக்கத்திற்குச் செல்வாக்குத் தேடினார், இவர்.



புகழ் பெற்ற 'பர்தோலி' இயக்க வெற்றிக்குக் காந்தியடிகளுடன் உழைத்தார். நாடு விடுதலை பெற்ற பிறகு உள்துறை அமைச்சர் ஆனார்.

இந்தியாவுக்கு எதிராக அணி திரண்ட மன்னர்களுக்குப் பாடம் புகட்டிப் பணிய வைத்து, சமஸ்தானங்களை இந்திய அரசின் கீழ் கொண்டு வந்தார். 1950 டிசம்பர் 15-ல் மறைந்தார்.

## மவுலானா அபுல்கலாம் ஆசாத்

'பாரத நாட்டு மக்கள் இனி ஆங்கிலேயருக்கு அடங்கி நடப்பவர்களலல்ல! அந்தக் காலம் மலையேறி விட்டது! இனி சுதந்திரம் பெறுவதுதான் எமது இலட்சியம்!" எனப் பகிரங்கமாகவே குரல் கொடுத்தவர் அபுல்கலாம் ஆசாத்!



இந்திய விடுதலை பற்றி, தாதாபாய் நௌரோஜி, மதன்மோகன் மாளவியா, மோதிலால் நேரு இவர்களின் பிரசங்கங்கள் இவரைச் சுதந்திரப் போராட்டத்தில் குதிக்கச் செய்தன. 1938 ஜனவரியில் மௌலானா அபுல்கலாம் ஆசாத் காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு முக்கிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், முகமதலி ஜின்னாவுடன் கருத்து வேறுபாடு கொண்டு நேருக்கு நேர் வாதாடியவர். பலமுறை பல போராட்டங்களில் கலந்துகொண்டவர் ஆசாத். மேடைப் பிரசங்கங்களில் இவருடைய பேச்சில் தனித்தன்மை இருக்கும்.

1942 ஆகஸ்டு 9ஆம் தேதி மகாத்மா 'வெள்ளையனே வெளியேறு!' என்று கொண்டு வந்த போராட்டத்தைப் பெரிதும் ஆதரித்து இதனையே நாட்டு மக்களிடம் எதிரொலிக்கச் செய்தவர் ஆசாத். இப் போராட்டத்தின் காரணமாக மகாத்மா காந்தி மற்றும் பலர் கைது செய்யப்பட்டனர். பின்னர் காந்தி சிறையிலிருந்து விடுதலையாகி வெளிவந்ததும் சமரசப் பேச்சு தொடங்கியது. ஆசாத் இதை ஏற்கவில்லை. என்றாலும் காங்கிரசின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். பல ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராக இருந்தார். சுதந்திர இந்தியாவில் கல்வி அமைச்சராக விளங்கினார். பாரசீக மொழியில் புலமை பெற்றவர். மிகச் சிறந்த அறிஞர்.

## ஜெயப்பிரகாஷ் நாராயணன் (1902 1979)

'வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கத்துடன் தொடங்கிய 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் தீவிரபங்கு ஏற்றவர் ஜெயப்பிரகாஷ். 1902 அக்டோபர் 11ஆம் தேதி பீகார் மாநிலம் சீதாப் தயரா என்ற கிராமத்தில் பிறந்தார். தொடக்கக் கல்வி முடிந்து பாட்னாவில் படித்தார். ராஜேந்திர பிரசாத் குடும்பத்துடன் தொடர்பு ஏற்பட்டது. படிக்கும்போதே அக்குடும்பத்தைச் சேர்ந்த பிரபாவதியை மணந்தார். 1919-இல் ஜாலியன் வாலாபாக் படுகொலையின்போது அரசியலில் நுழைந்தார்.

1922-இல் மேல்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். கலிபோர்னியா சர்வ கலாசாலையில் சேர்ந்தார். சோஷலிசம் பற்றித் தீவிரமாக ஆராய்ந்தார். பழத் தோட்டத்தில் வேலை செய்து அந்த வருவாயில் தன் செலவுகளைச் செய்தார். தீவிர சோஷலிஸ்ட்டாக 1929-இல் இந்தியா திரும்பினார். காந்தியடிகள், நேரு மற்றும் காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார்.

1931-இல் காங்கிரஸ் தலைவர்கள் கைதான நேரத்தில் தலைமறைவாகத் தேசமுழுவதும் சுற்றிச் செயல்பட்டார். 1931 செப்டம்பரில் கைதானார். நாசிக் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அசோக் மேத்தா அச்சுத பட்டவர்த்தன் போன்றவர்களுடன் தொடர்பு. 1934இல் விடுதலை பெற்றார். அதே ஆண்டு நவம்பரில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி தோன்றியது.

நரேந்திரதேவ், டாக்டர் லோகியா போன்றவர்களுடன் தொடர்பு. பிரிட்டிஷாருக்கு எதிராகத் தீவிர வர்க்கப் போராட்டத்தை உருவாக்க விரும்பினார். சோசலிஸ்ட் கட்சிக்குள் இருந்த கம்யூனிஸ்ட்டுகள் இரண்டாவது உலகப் போர் காரணமாக எழுந்த தத்துவ மோதலில் வெளியேறினர். 1940இல் கைது செய்யப்பட்டார். 9 மாதம் கழித்து விடுதலை ஆனார்.

மீண்டும் கைது. ஹசாரிபாக் சிறையில் இருந்தபோது 1942 ஆகஸ்ட் கிளர்ச்சி தொடங்கியது. 1942 நவம்பர் 9 தீபாவளி நாளன்று ஜெயப்பிரகாசர் சிறையிலிருந்து தப்பினார்.

ஆகஸ்ட் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தினார். 1943 செப்டம்பரில் பிடிபட்டார். பிரிட்டிஷ் அதிகாரிகளின் சொல்லொணாச் சித்ரவதைகளுக்கு ஆளானார். 1946 ஏப்ரலில் விடுதலை ஆனார்.

1948 முதல் சோஷலிஸ்ட் கட்சி தனியாக இயங்கியது. 1954இல் பூதான இயக்கத்தில் சேர்ந்தார். 1975இல் நெருக்கடி நிலை, சிறைவாசம்.

1977-இல் ஜனதா அரசு அமையக் காரணமாக இருந்தார். 1979 அக்டோபரில் பாட்னாவில் மறைந்தார். வெள்ளை ஆட்சியை விரட்டிய ஆகஸ்ட் புரட்சியின் கர்த்தா அவர்.

---

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
HTA.7556.95

தமிழரசு
Licence No.TN/MS(C)/PP-23





